

We Shine Academy™

guiding you to get through

# நடப்பு நிகழ்வுகள்

# (CURRENT AFFAIRS)

## அக்டோபர்-2018

*We Are Here..!! To Guide You..!!*



# We Shine Study Circle

# “நான் மெதுவான நடப்பவன் தான்,ஆனால் ஒருபோதும் பின்வாங்குவதில்லை.


Main Office @

**Weshine Study Circle**

New No 4 Old No 8B 1st Floor, Rangaswamy Street,,
Near Adyar Ananda Bhavan
Chrompet, Chennai - 600044

**Phone :** 8939 144 344, 8939 244 344

Branch Office @

**Weshine Study Circle,**

**Anna nagar**

Plot No: 47/60, “AK” Block, 7th Main Road
Anna Nagar (Next to Metro Water Pump),
Chennai, Tamil Nadu 600 040.

**Adyar**

3rd Floor,West Wing,Gokul Arcarde,
No.2,Sardar Patel Road, Adyar
Chennai, Tamilnadu 600020.

https://weshineacademy.com

# பொருளடக்கம்


04 - 09 தமிழக நிகழ்வுகள்

09 - 40 இந்திய நிகழ்வுகள்

41 - 56 உலக நிகழ்வுகள்

57 - 68 விருதுகள்

68 - 74 நியமனங்கள்

74 - 82 அறிவியல் மற்றும் தொழில்நுட்பம்

82 - 90 விளையாட்டு நிகழ்வுகள்

90 - 95 பொருளாதார நிகழ்வுகள்

95 - 102 முக்கிய தினங்கள்

102 - 104 புத்தகங்கள்














# தமிழக நிகழ்வுகள்

1. நிகழாண்டின் அகில இந்திய ரயில்வே சதுரங்க போட்டி, எந்த நகரத்தில் தொடங்கியது?

**விடை: திருச்சிராப்பள்ளி**

**விளக்கம் :**

- அக்டோபர் 3 அன்று 2018 ஆம் ஆண்டின் 31 ஆவது அகில இந்திய ரயில்வே சதுரங்க போட்டி திருச்சிராப்பள்ளியில் தொடங்கியது. இந்தப் போட்டியை தெற்கு ரயில்வே பொது மேலாளர் குல்ஸ்ரெஸ்தா தொடங்கிவைத்தார். சுவிஸ் லீக் முறையில் குழு மற்றும் தனிப்பிரிவுகளில் இந்தப் போட்டி நடத்தப்படுகிறது. இந்திய ரயில்வேயில் உள்ள 14 மண்டலங்களை சேர்ந்த 87 வீரர், வீராங்கனைகள் இப்போட்டியில் பங்கேற்றுள்ளனர்.
- இப்போட்டியில் வெற்றிபெறுபவர்கள், 2018 ஆம் ஆண்டு நவம்பரில் நடைபெறவிருக்கும் தேசிய சதுரங்க சாம்பியன்ஷிப்பில் இந்திய ரயில்வேயின் சார்பாக பங்கேற்பார்கள்.

2. தரவுகளைக் கையாளும் ஆளுமைக்காக தமிழ்நாடு மின்னாளுகை முகமையுடன் (TheGA) எந்த IIT ஒப்பந்தம் செய்துள்ளது?

**விடை: ஐஐடி சென்னை**

**விளக்கம்**

- தமிழ்நாடு மின்னாளுகை முகமை (TheGA) உடன் ஐஐடி சென்னை செய்து கொண்ட புரிந்துணர்வு ஒப்பந்தம் மூலம் ராபர்ட் பாஷ் (Robert Bosch) தரவு அறிவியல் மற்றும் செயற்கை நுண்ணறிவு மையம் ஆனது மாநில அரசின் பல்வேறு வகையான தகவல்களுக்கு தேவையான ஒத்துழைப்பு வழங்கும் என்று தெரிவித்துள்ளது. மாநில் அரசின் பல்வேறு அமைப்புகளான கல்வி, சுகாதாரம், விவசாயம் உள்ளிட்டவற்றுடன் இம்மையம் ஒருங்கிணைந்து செயல்படும்.

3. இரண்டாவது உலக முதலீட்டாளர் மாநாடு 2019 ஜனவரி 23, 24 ஆம் தேதிகளில் நடைபெறும் என தமிழ்நாடு அரசு அறிவித்துள்ளது.

4. மத்திய அரசின் மனிதவள மேம்பாட்டு அமைச்சகத்தின் வழிகாட்டுதலின்படி, 2014-ம் ஆண்டு முதல் 'தூய்மையான பாரதம் தூய்மையான பள்ளி' என்ற திட்டம் செயல்பட்டு வருகிறது.

   1. தேசிய அந்த வகையில் 2017-18-ம் ஆண்டில் தூய்மை பள்ளிக்கான தேசிய அளவிலான விருது வழங்கும் விழா டெல்லியில் நடைபெற்றது. இதில் தமிழ்நாட்டிலிருந்து தெரிவான ஆறு பள்ளிகளுக்கு மத்திய மனிதவள மேம்பாட்டுத்துறை அமைச்சர் தேசிய தூய்மை பள்ளி விருதுகளையும், தேசிய அளவில் அதிக எண்ணிக்கையிலான பள்ளிகளுக்கு தேசிய தூய்மை பள்ளி விருதுகள் பெற்ற மாநிலங்களின் பட்டியலில் தமிழ்நாடு இரண்டாம் இடம் பெற்றதற்கான சான்றிதழையும் வழங்கினார்.
   2. அளவிலான தூய்மை பள்ளிக்கான விருது வழங்கப்பட்ட பள்ளிகள் :
      - கரூர் மாவட்டம் டி.செல்லாண்டிப்பாளையம் அரசு உயர்நிலைப்பள்ளி.
      - தேனி மாவட்டம் கொம்பைதொழு ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளி.
      - சிவகங்கை மாவட்டம் எம்.ஆலம்பட்டி ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி.
      - திருவள்ளுர் மாவட்டம் அரியப்பாக்கம் ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளி.
      - திண்டுக்கல் மாவட்டம் இ.ஆவாரம்பட்டி அரசு கே.ஆர்.உயர்நிலைப்பள்ளி.
      - அரியலூர் மாவட்டம் சிலுவைசேரி ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளி.

5. திருச்சிராப்பள்ளியில் உள்ள தேசிய தொழில்நுட்பக் கழகத்தை, உலகின் தலைசிறந்த 500 பல்கலைக்கழகங்களில் ஒன்றாக தரமுயர்த்தும் ஐந்தாண்டுத் திட்டத்தை மத்திய மனிதவள மேம்பாட்டுத்துறை அமைச்சர் பிரகாஷ் ஜவடேகர் தொடங்கிவைத்தார். இதே வளாகத்தில், 120 கோடி ரூபாய் மதிப்பில் அமைக்கப்படும் சீமென்ஸ் உற்பத்தி மையத்தையும் தொடங்கிவைத்தார்.

6. சென்னை – திருவனந்தபுரம் மற்றும் பாலக்காடு மண்டலங்களை உள்ளடக்கிய தெற்கு ரயில்வே மண்டலங்களில் 1054 ஆளில்லா லெவல் கிராசிங்குகள் மாற்று ஏற்பாடுகள் மூலம் அகற்றப்பட்டு ஆளில்லா லெவல்

கிராசிங்குகள் அற்ற மண்டலமாக மாற்றப்பட்டுள்ளதாக தெற்கு ரயில்வே அறிவித்துள்ளது.

7. இந்திய மற்றும் வியட்நாம் கடற்படை வீரர்கள் சென்னை கடல் பகுதியில் 'Sahyog HOP TAC – 2018' என்ற போர் பயிற்சி மற்றும் கடல் திருடர்களிடம் இருந்து எவ்வாறு கடற்படை வீரர்களை மீட்பது போன்ற பல்வேறு ஒத்திகைகளில் ஈடுபட்டனர். வியட்நாமில் இருந்து 'CSB8001' என்ற கடற்படை கப்பல் இதற்கென சென்னை வந்தது.

8. ஆஸ்திரேலியாவில் நடைபெற்ற ஆளில்லா குட்டி விமானப்பயிற்சி போட்டியில், நடிகர் அஜித் குமாரின் 'தக்ஷா' குழுவுக்கு இரண்டாம் இடம் கிடைத்துள்ளது.

9. நாட்டிலேயே முதன்முறையாக பெரியார் பல்கலைக்கழகத்தின் இதழியல் துறையில் மெய்நிகர்க் காட்சியாக்கம் (Virtual Reality – VR), மெய்நிகர்க் காட்சி மிகுதியாக்கம் ஆகிய பாடப் பிரிவுகள் தொடங்கப்படவுள்ளன. இதற்காக, சென்னை ஸ்கோப் நிறுவனத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

10. நாட்டிலேயே முதன்முதலாக 1 கோடியே 80 லட்சம் நூல்கள் அடங்கிய மின்னணு நூலகத்தை பயன்படுத்தும் வகையில், இ - கிளப் விருதுநகரில் தொடங்கப்பட்டுள்ளது. மத்திய மனிதவள மேம்பாட்டு அமைச்சகம் மற்றும் ஐஐடி கரக்பூர் இணைந்து இதனை செயல்படுத்தியுள்ளன.

11. தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்களின் தலைமையகங்களிலும், காவல்துறை ஆணையர் அலுவலகங்களிலும் புதிய கைரேகை அடையாளங்காணும் அமைப்பான FACTS 7.0 (Fingerprint Analysis and Criminal Tracing System) என்ற அமைப்பு நிறுவப்பட்டுள்ளது. இதனை டாடா கன்சல்டன்சி சர்வீசஸ் (TCS) நிறுவனம் உருவாக்கியுள்ளது.

12. பாலியல் வன்முறையில் பாதிக்கப்பட்ட, உயிரிழந்த மற்றும் இதர குற்றச்சம்பவங்ளில் பாதிக்கப்பட்ட பெண்கள், அவர்களை சார்ந்தவர்களுக்கு இழப்பீடு வழங்குவது தொடர்பாக, உச்சநீதி மன்ற தீர்ப்பின் அடிப்படையில் புதிய திட்டத்தை தமிழ்நாடு அரசு வெளியிடப்பட்டுள்ளது.

13. சென்னையில் புதிய தொழில்நுட்பத்துடன் கூடிய வெள்ள முன்னெச்சரிக்கை அமைப்பு அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. சென்னை வெள்ள முன்னெச்சரிக்கை அமைப்பு (CFLOWS) என்பது சென்னை பெருநகர வெள்ள அபாய மேலாண்மையில் சரியான நடவடிக்கை/ முடிவுகள் மேற்கொள்ள உதவி புரியும் தொழில்நுட்பம் ஆகும்.

- இவ்வமைப்பை தேசிய கடலோர ஆராய்ச்சி மையம், இந்திய தொழில்நுட்ப மையம் சென்னை, இந்திய தொழில்நுட்ப மையம் மும்பை மற்றும் அண்ணா பல்கலையின் தொலையுணர்வு நிறுவனம் (IRS) ஆகியவை கூட்டாக வடிவமைத்துள்ளன.

14. பெரம்பூர் ரயில்வே மருத்துவமனையின் சிறப்பான செயல்பாட்டைப் பாராட்டி, 2014ஆம் ஆண்டுக்கான விருதை தேசியத் தேர்வு வாரியம் வழங்கி கௌரவித்துள்ளது.

15. சென்னையில் ஒடிசா பவன் மாளிகையை, ஒடிசா முதல்வர் நவீன் பட்நாயக் திறந்து வைத்தார். 22 கோடி ரூபாய் மதிப்பில் கட்டப்பட்ட இந்த கட்டிடம், ஆறு தளங்களை கொண்டது. ஒடிசா மாநிலத்தில் இருந்து வரும் முதலமைச்சர், அமைச்சர்கள் உள்ளிட்ட முக்கிய பிரமுகர்கள் தங்கும் வகையில் பல்வேறு வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

16. சென்னையின் முதலாவது அடுக்குதள பேருந்து நிலையம், மாதவரத்தில் திறக்கப்பட்டது. 8 ஏக்கர் நிலப்பரப்பில், பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தால் இந்தப் பேருந்து நிலையம் கட்டப்பட்டுள்ளது.

17. கோயம்பேடு பேருந்து நிலையத்தின் பெயர், புரட்சித்தலைவர் Dr. எம்.ஜி.ஆர் பேருந்து நிலையம் என் பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

18. நெய்வேலியில் இயங்கிவரும் மத்திய பொதுத்துறை நிறுவனமான, நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனத்தின் 36 ஆவது தலைவராக அந்நிறுவனத்தின் நிதித்துறை இயக்குநர் ராகேஷ்குமார் பொறுப்பேற்றுள்ளார்.

19. தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தின் பர்கூர் கால்நடை ஆராய்ச்சி நிலையத்திற்கு மத்திய அரசின் 'தேசிய காமதேனு விருது' – 2018 மற்றும் 5 லட்சம் ரூபாய்க்கான காசோலை வழங்கப்பட்டுள்ளது.

20. ஆஸ்திரேலியாவில் உள்ள சிட்னியில் தஞ்சாவூர் தமிழ்ப்பல்கலை, சிட்னி தமிழ் இலக்கியக்கலை மன்றம் சார்பில் அனைத்துலகச் சிலப்பதிகார ஆய்வு மாநாடு அண்மையில் நடைபெற்றது.

21. புதுச்சேரி ஐந்தாவது உலக தமிழர் பொருளாதார மாநாடு நடைபெற்றது. இதில் புதுச்சேரி முதலைமைச்சர் நாராயணசாமி, மொரீசியஸ் அதிபர் பரமசிவம் வையாபுரி பிள்ளை, கயானா பிரதமர் மோசஸ் வீராசாமி நாகமுத்து உட்பட சிங்கப்பூர், மலேசியா, தென்னாப்பிரிக்கா உட்பட பல்வேறு நாடுகளை சேர்ந்த முந்நூற்றுக்கும் மேற்பட்ட பிரதிநிதிகள் பங்கேற்றனர்.

22. தமிழ்நாட்டிலேயே முதல் முதல்முறையாக திருவள்ளூர் மாவட்டம் போரூரில் உள்ள அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் ஸ்மார்ட் வகுப்பறை, சில்லு அடங்கிய அடையாள அட்டை, தானியங்கி வருகைப் பதிவு – குறுஞ்செய்தி அனுப்பும் வசதி ஆகியவற்றை கல்வித்துறை அமைச்சர் செங்கோட்டையன் தொடங்கிவைத்தார்.

23. **'பயிற்றாசிரியர் - 365'** என்ற புதிய மின்னணு கற்றல் பகுப்பாய்வு மென்பொருளை திருச்சியில் உள்ள அரசுப்பள்ளிகளுக்கு அதன் தலைமை கல்வி அதிகாரி தொடங்கிவைத்துள்ளார்.

24. மதுரை விமான நிலையத்தில் இணையம் மூலம் நுழைவாணை பெறுவதற்கான ‘e-Visa’ சேவை தொடங்கப்பட்டுள்ளது. இவ்வகைச் சேவையைப் பெறும் தமிழ்நாட்டின் நான்காவது விமான நிலையமும், இந்தியாவின் 26 ஆவது விமான நிலையமுமாக இது உள்ளது.

25. அர்ஜெண்டினாவின் பியூனஸ் ஏர்சில் நடந்த இளையோர் ஒலிம்பிக்கில் ஆடவருக்கான மும்முறை தாண்டல் போட்டியில் தமிழ்நாட்டின் தஞ்சாவூரை சேர்ந்த தடகள வீரர் பிரவீன் சித்ரவேல் வெண்கலப்பதக்கம் வென்றுள்ளார்.

26. திருச்சிராப்பள்ளி அருகே உத்தமசீலியில் உள்ள கைலாசநாதர் கோவிலில் அண்மையில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வின்போது 12 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த பாறைக் கல்வெட்டு ஒன்று கண்டெடுக்கப்பட்டது. அதில் மகிசாசுரமர்த்தினி என்ற பெண் கடவுளின் உருவம் மிகச்சிறிய அளவில் பொறிக்கப்பட்டுள்ளது.

27. சுற்றுச்சூழல் மதிப்பீடு மற்றும் சீரமைப்பு ஆராய்ச்சி மையம், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலை, ஆஸ்திரேலியாவில் உள்ள நியூகேசில் பல்கலை, குளோபல் கேர் அமைப்பு சார்பில் ,சுற்றுச்சூழல் பிரச்சனைகள் மற்றும் அவற்றுக்கான தீர்வுகள் தொடர்பான CleanUp 3 நாள் சர்வதேச மாநாடு கோயம்புத்தூரில் அக்.22 அன்று தொடங்கியது.

# இந்திய நிகழ்வுகள்

1. சாலை விபத்தில் காயமடைந்து, உயிருக்கு போராடும் நபர்களுக்கு உதவி செய்வோருக்கு சட்டரீதியில் பாதுகாப்பு வழங்கும் இந்தியாவின் முதல் மாநிலம் எது?

**விடை: கர்நாடகா**

**விளக்கம்:**

- சாலை விபத்தில் காயமடைந்து, உயிருக்கு போராடும் நபர்களுக்கு உதவி செய்வோருக்கு சட்ட ரீதியில் பாதுகாப்பு அளிக்கும் வகையில், கர்நாடக அரசு கொண்ட வந்துள்ள "Karnataka Good Samaritan and Medical Professional (Protection and Regulation During Emergency Situations) மசோதா – 2016'க்கு குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த் ஒப்புதல் அளித்துள்ளார்.

2. இந்தியாவின் முதல் வெள்ள முன்னறிவிப்பு மற்றும் முன்னெச்சரிக்கை முறையை (Flood Forecasting and Early Warning System) அறிமுகப்படுத்தியுள்ள நகரம் எது?

**விடை: கொல்கத்தா**

**விளக்கம்:**

- பேரிடர்களுக்கு முன்னரும் பேரிடர்களின் போதும் சேதங்களின் அளவை குறைக்கும் பொருட்டு அதிகாரிகளும், பொதுமக்களும் தெளிவுற செயல்படுவதற்காக இந்தியாவின் முதல் வெள்ள முன்னறிவிப்பு மற்றும் முன்னெச்சரிக்கை முறையை கொல்கத்தா நகரத்திற்காக அம்மாநகர மன்றத்தின் தலைவர் அறிமுகம் செய்து வைத்துள்ளார்.
- இந்தியாவின் முதல் விரிவான நகர அளவிலான இந்த முறைமை, வாழ்வாதாரங்களை பாதித்து ஏற்படும் பொருளாதார இழப்பை குறைக்கும் மற்றும் சமுதாய அளவில் வெள்ள விழிப்புணர்வு மற்றும் பாதுகாப்பை மேம்படுத்தும். இதன் வடிவமைப்புக்கான நிதியை ஆசிய வளர்ச்சி வங்கி அளித்துள்ளது. இதன் நிறுவலுக்காக கொல்கத்தா நகர நகர்ப்புற காலநிலை மாற்றம் நிவாரண அறக்கட்டளை நிதியிலிருந்து $ 1 மில்லியன் அளவுக்கு தொழில்நுட்ப உதவி வழங்கப்பட்டுள்ளது.

3. எந்த நகரத்தில், இந்தியாவின் முதல் AICTE பயிற்சி மற்றும் கற்றல் அகாடமி (ATAL) அமைக்கப்பட்டுள்ளது?

**விடை: ஜெய்ப்பூர்**

**விளக்கம்:**

- இந்தியாவின் முதல் AICTE பயிற்சி மற்றும் கற்றல் அகாடமி (ATAL), அகில இந்திய தொழில்நுட்பக் கல்விக்குழு (AICTE) மூலமாக ஜெய்ப்பூரில் நிறுவப்படவுள்ளது. தொழில்நுட்பக் கல்வியை மிகவும் பயனுள்ளதாகவும், பொறுப்புமிக்கதாகவும் மாற்றுவதற்கு, மேம்பட்ட கற்பித்தல் முறைகள் மற்றும் தொகுதிகளை அறிமுகப்படுத்தும் ஒரு முயற்சியாக, 8 தொகுதிகளைக் கொண்ட பாடத்திட்டத்தில் ஆசிரியர்களை பயிற்றுவிக்கும் பயிற்சி மையங்களை AICTE நிறுவி வருகிறது.

4. எந்த மாநிலத்தில், 17 ம் நூற்றாண்டைச் சேர்ந்த 'ஊந்த் கடல்' பாலம் அமைந்துள்ளது?

**விடை: ஜம்மு மற்றும் காஷ்மீர்**

**விளக்கம்:**

- ஜம்மு மற்றும் காஷ்மீரின் ஸ்ரீநகரில் உள்ள அழகிய தால் ஏரியின் மத்தியில் அமைந்துள்ள 17ம் நூற்றாண்டைச் சேர்ந்த 'ஊந்த் கடல் - Oonth Kadal', முகலாய காலத்தை சேர்ந்த ஒரு வளைவு வடிவுடைய பாலமாகும். ஒட்டக முதுகின் கூன் வடிவிலான இந்தப் பாலத்தை பாதுகாப்பதற்காக சமீபத்தில், ஜெர்மானிய அரசாங்கம் ரூபாய் 32 லட்சத்தை வழங்கியுள்ளது.
- இந்தப் பாலத்தின் மறுசீரமைப்பு, உலகளாவிய கலாச்சாரம் மற்றும் இயற்கை பாரம்பரியத்தின் ஒரு பகுதியாக தால் ஏரிக்கு முக்கியத்துவத்தை அளிக்கும். 1670-களில் கட்டப்பட்ட இப்பாலம், UNESCO-வின் உலக பாரம்பரிய தளங்களின் தற்காலிக பட்டியலில் இடம் பெற்றுள்ளது.

5. கிராமப் பஞ்சாயத்து மேம்பாட்டுத் திட்டத்தின் நாடு தழுவிய ஆராய்ச்சி நடவடிக்கை திட்டம் எந்த நகரத்திலிருந்து தொடங்கப்பட்டுள்ளது?

**விடை: குவாலியர்**

**விளக்கம்:**

1. அக்.1 அன்று மத்தியப் பிரதேசத்தின் குவாலியரில் ஏற்பாடு செய்யப்பட்ட ஒரு நிகழ்வில், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் நரேந்திர சிங் தோமர், கிராமப் பஞ்சாயத்து மேம்பாட்டுத் திட்டத்தின் நாடு தழுவிய ஆராய்ச்சி நடவடிக்கை

திட்டத்தை தொடங்கி வைத்தார். நாட்டிலுள்ள கிராமப்புற பகுதிகளின் நீடித்த மற்றும் முழுமையான வளர்ச்சிக்காக இத்திட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளது.

2. அதிகாரப்பூர்வ தகவல்களின்படி, தற்போது நாட்டின் 19 மாநிலங்களில் உள்ள 467 கிராமப் பஞ்சாயத்துகளில் இத்திட்டம் அமல்படுத்தப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்தின் மூலம், சமுதாயத்தில் உள்ள ஏழைமக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவும் மனிதவளத்தை அதிகரிக்கவும் சிறப்பு முயற்சிகள் மேற்கொள்ளப்படும். இந்தத் திட்டத்தின் முக்கிய நோக்கம் திறன் வளர்ச்சி, நிர்வாக சீர்திருத்தம் மற்றும் பொதுமக்கள் பங்கேற்பு ஆகியவற்றை கூட்டாக மேம்படுத்துவதாகும்.

6. ராஜஸ்தானுக்குப் பிறகு பசுக்களுக்கு என தனி அமைச்சகம் அமைக்கவுள்ள இரண்டாவது இந்திய மாநிலம் எது?

**விடை: மத்தியப் பிரதேசம்**

**விளக்கம்:**

1. செப். 30 அன்று சத்தர்பூர் மாவட்டத்தில் கஜுராஹோவில் நடந்த ஒரு நிகழ்வில் பசுக்களை சிறந்த முறையில் பராமரிப்பதற்காக தனி அமைச்சகம் ஒன்றை மத்தியப் பிரதேச மாநில அரசு அமைக்க முடிவு செய்தது. இதில் திகம்பர சமணத்துறவி வித்யாசாகர்ஜி மகாராஜ் கலந்து கொண்டார். இப்பசு நலஅமைச்சகம், ஏற்கெனவேயுள்ள மத்தியப் பிரதேச பசு பாதுகாப்பு மற்றும் கால்நடை வளர்ப்பு வாரியத்தை மாற்றாக இருக்கும், ஏனெனில் அது (வாரியம்) வரம்புகளைக் கொண்டுள்ளது.
2. மத்தியப் பிரதேச அரசு இந்த முடிவை செயல்படுத்தினால், ராஜஸ்தான் மாநிலத்திற்குப் பிறகு பசுக்களுக்கென ஒரு தனி அமைச்சகத்தை அமைத்த இரண்டாவது இந்திய மாநிலமாக மாறும். முன்னதாக, அகர மால்வா மாவட்டத்தில் 2017ம் ஆண்டு செப்டம்பரில் இந்தியாவின் முதல் பசுக்கள் சரணாலயத்தை மத்தியப் பிரதேச அரசு திறந்து வைத்தது. 6000 பசுக்களை பராமரிக்கும் வசதியுடன், 472 ஹெக்டேர் பரப்பளவில் இந்தச் சரணாலயம் அமைந்துள்ளது.

7. தேசிய உணவுப் பாதுகாப்பு சட்டத்தில் தவறவிடப்பட்ட ஏழை மக்களுக்காக, மாநிலத்துக்கு என சொந்த உணவுப் பாதுகாப்பு திட்டத்தை அண்மையில் அறிமுகப்படுத்தியுள்ள மாநில அரசு எது?

**விடை: ஒடிசா**

**விளக்கம்:**

1. 149 ஆவது காந்தி ஜெயந்தி விழாவின் போது, 2013ம் ஆண்டு தேசிய உணவுப் பாதுகாப்பு சட்டத்தில், தகுதியிருந்தும் தவறவிடப்பட்ட 25 லட்சம் ஏழை மக்களுக்கு பயனளிக்கும் வகையில், மாநிலத்துக்கு என ஒரு உணவுப் பாதுகாப்பு திட்டத்தை ஒடிசா மாநில அரசாங்கம் தொடங்கியது. புவனேசுவரில் உள்ள மாநில தலைமைச் செயலகத்தில் இருந்து இந்தத் திட்டம் முதலமைச்சர் நவீன் பட்நாயக்கால் தொடங்கி வைக்கப்பட்டது.
2. கிலோ ரூ.1 என்ற விலையில் பயனாளி ஒருவருக்கு மாதத்திற்கு 5 கிலோ அரிசி வழங்கப்படும். இத்திட்டத்திற்கு ஆதரவளிக்கும் விதமாக மாநில அரசு ஓராண்டுக்கு ரூ.443.5 கோடியை செலவு செய்யும். நடப்பு நிதியாண்டில் இந்தச் செலவு ரூ.221.75 கோடியாக உள்ளது.

8. சராசரி நகர உயரத்திலிருந்து இந்தியாவின் மிக உயரமான தேசியக்கொடி சமீபத்தில் எந்த நகரத்தில் நிறுவப்பட்டது?

**விடை: கௌகாத்தி**

**விளக்கம்:**

1. மகாத்மா காந்தியின் 149 ஆவது பிறந்தநாளன்று, அசாம் முதலமைச்சர் சர்பானந்த சோனுவால் கௌகாத்தியில் உள்ள காந்தி மண்டபத்தில், சராசரியான நகர உயரத்திலிருந்து இந்தியாவின் மிக உயரமான தேசியக் கொடியை ஏற்றினார். அசாமின் பிரதான நகரத்தின் மையத்தில், சரனியா குன்றில் அமைந்துள்ள மகாத்மா காந்தியின் நினைவுச் சின்னமான காந்தி மண்டபத்தில், 319.5 அடி உயர கொடிக்கம்பத்தில், 9600 சதுர அடியிலான இந்தக் கொடி பறக்கவிடப்பட்டுள்ளது.
2. மலையின் அடிவாரத்திலிருந்து கம்பத்தின் முனைவரை சுமார் 300 மீ., ஆகும். அது சராசரி கடல் மட்டத்திலிருந்து இந்தக் கொடியை மிக உயரமானதாக ஆக்கியுள்ளது. இக்கொடி, 120*80 அடி என்கிற அளவை கொண்டுள்ளது.

3. கொடிக்கம்பத்தின் உயரத்தை மட்டுடம் கருத்தில் கொண்டால், பஞ்சாபின் அட்டாரி எல்லை (360 அடி) மற்றும் பிம்ப்ரி சிஞ்ச்வாட் பக்தி சக்தி செளக், புனே (351 அடி) ஆகிய இடங்களில் உள்ள கொடிகளுக்குப்பின், காந்தி மண்டபத்தில் உள்ள தேசியக் கொடி மூன்றாவது மிக உயரமானதாக உள்ளது. இத்தேசியக் கொடியை நிறுவுவதற்கான மொத்த செலவுத்தொகை ரூ.2.92 கோடியாகும்.

9. மகாத்மா காந்தி சர்வதேச துப்புரவு மாநாடு, சமீபத்தில் எந்த நகரத்தில் முடிவுற்றது?

**விடை: புது தில்லி**

**விளக்கம்:**

1. மகாத்மா காந்தி சர்வதேச துப்புரவு மாநாடு, சமீபத்தில் புது தில்லியில் அக்.2 அன்று முடிவுற்றது. பங்கேற்கும் நாடுகளிடம், வெற்றிகரமான தூய்மை கதைகள் மற்றும் அனுபவங்களை பகிர்ந்து கொள்வதே 4 நாள் நடந்த இம்மாநாட்டின் நோக்கமாக இருந்தது. பிரதமர் மோடி மற்றும் ஐ.நா. அவையின் பொதுச் செயலாளர் ஆன்டோனியோ குட்டரஸ் ஆகியோர் இதில் உரையாற்றினர்.
2. மகாத்மா காந்தியின் 150 ஆவது பிறந்தநாள் விழா கொண்டாட்டத்தின் தொடக்கத்தை குறிக்கும் வகையில், மத்திய குடிநீர் மற்றும் துப்புரவு அமைச்சகம் இந்த மாநாட்டை ஏற்பாடு செய்திருந்தது. தூய்மை இந்தியா இயக்கம் தொடங்கப்பட்டு 4ம் ஆண்டு விழாவும், இம்மாநாட்டுடன் நடந்தது. உலகெங்கிலும் இருந்து 53 துப்புரவு அமைச்சர்களும், 68 நாடுகளைச் சேர்ந்த 160-க்கும் மேற்பட்ட சர்வதேச பிரதிநிதிகளும் இதில் பங்கேற்றனர். இம்மாநாடு, சுகாதார அமைச்சர்களையும் WASH எனப்படும் தண்ணீர், சுகாதாரம் மற்றும் தூய்மை தொடர்பான தலைவர்களையும் திரட்டியது.

10. மேற்கு வங்க மாநிலத்தின் எந்தெந்த மாவட்டங்களில் தூய குடிநீர் வழங்குவதற்காக, ADB உடனான $240 மில்லியன் டாலர் கடன் ஒப்பந்தத்தில் இந்தியா கையெழுத்திட்டுள்ளது?

**விடை: வடக்கு 24 பர்கானாஸ், பாங்குரா, பர்பா மேதினிபூர்**

**விளக்கம்:**

1. ஆர்செனிக், ∴புளோரைடு மற்றும் உப்புத்தன்மையால் பாதிக்கப்பட்ட மேற்கு வங்க மாநிலத்தின் 3 மாவட்டங்களுக்கு (வடக்கு 24 பர்கானாஸ், பாங்குரா மற்றும் பர்பா மேதினிபூர்) தூய குடிநீர் வழங்குவதற்காக, ஆசிய வளர்ச்சி வங்கியுடனான $ 240 மில்லியன் டாலர் கடன் ஒப்பந்தத்தில் இந்தியா கையெழுத்திட்டுள்ளது. இந்த 3 மாவட்டங்களில் வசிக்கும் 3,90,000 குடும்பங்களுக்கு குழாய் வழியே தொடர்ச்சியான குடிநீர் வழங்குவதன் மூலம், இந்த ஆபத்தில் இருந்து அவர்களை மீட்பதே இத்திட்டத்தின் நோக்கமாகும்.

11. சர்வதேச சூரிய ஆற்றல் கூட்டமைப்பின் முதலாவது மாநாடு நடந்த நகரம் எது?

**விடை: புது தில்லி**

**விளக்கம்:**

1. பிரதமர் மோ, சர்வதேச சூரியசக்தி கூட்டமைப்பின் (ISA) முதலாவது மாநாட்டை அக்டோபர் 2 அன்று விஞ்ஞான் பவனில் தொடங்கி வைத்தார். சூரியனை வழங்கும் பேராற்றலை கையாள்வதற்காக அவர் “ஓர் உலகம், ஒரு சூரியன், ஒரு கட்டமைப்பு” என்பதை வழங்கினார்.
2. இது தவிர, பிரதமர் மோடி, இந்தியாவை தலைமையிடமாகக் கொண்ட முதல் ஒப்பந்த அடிப்படையிலான சர்வதேச அரசாங்க அமைப்புக்கான “உலகமயமாக்கலை – Universalization” அறிவித்தார். இது காலநிலை நீதிக்கான ஒரு தளத்தை வழங்க உதவும்.
3. இந்தியப் பெருங்கடல் எல்லைப் பகுதி நாடுகள் கூட்டமைப்பின் (IORA) புதுப்பிக்கத்தக்க எரிசக்திக்கான அமைச்சர்கள் கூட்டம் மற்றும் 2வது சர்வதேச ரீ-இன்வெஸ்ட் (புதுப்பிக்கத்தக்க எரிசக்தி முதலீட்டாளர்கள் மாநாடு மற்றும் கண்காட்சி) ஆகியவையும் இதன்போது தொடங்கப்பட்டது.

12. ‘Academy of Leadership – தலைமைத்துவத்துக்கான அகாடமி’யை நிறுவவுள்ள ஐஐடி எது?

**விடை: ஐஐடி கரக்பூர்**

**விளக்கம்:**

1. அறிவியல் மற்றும் பொறியில் துறைகளின் முக்கிய பாடத்திட்டங்களை மெய்யியல் மற்றும் பள்ளிக்கல்விக்கான பாடத்துறைகளுடன் இணைத்து புதுமையான பாடத்திட்டங்களை உருவாக்க விரும்பும் 'தலைமைத்துவத்துக்கான அகாடமி' ஒன்றை நிறுவ கரக்பூர் ஐஐடி நிறுவனம் முடிவு செய்துள்ளது. இந்த அகாடமி, அறிவியல் மற்றும் தொழில்நுட்ப பயிற்சியின் அடிப்படையில் மட்டுமல்லாமல், பண்டைய மெய்யியல், பகுத்தறிதல், அமைப்பு பொறியியல் மற்றும் மனித இனத்தின் கடந்தகால வெற்றிகள் மற்றும் தோல்விகளை பற்றியும் போதிக்கும்.

13. நான்காவது இந்திய சர்வதேச அறிவியல் விழாவின் கருப்பொருள் என்ன?

**விடை: Science for Transformation**

**விளக்கம்:**

1. 4ஆவது இந்திய சர்வதேச அறிவியல் விழா (IISF – 2018) உத்திரப்பிரதேச மாநிலம் லக்னோவில் உள்ள இந்திராகாந்தி பிரதிஸ்தானில் அக்.5 அன்று தொடங்கியது. 4 நாள் நடைபெறும் இந்த விழாவை குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த் தொடங்கி வைத்தார். இவ்விழாவை விஞ்ஞான பாரதியுடன் இணைந்து மத்திய அறிவியல் மற்றும் தொழில்நுட்ப அமைச்சகமும், புவி அறிவியல் அமைச்சகமும் நடத்தி வருகின்றன.

14. "Women in Detention and Access to Justice" தலைப்பிலான முதலாவது பிராந்திய மாநாடு சமீபத்தில் எந்த நகரத்தில் நடந்தது?

**விடை: சிம்லா**

**விளக்கம்:**

- அக்.4-5 ஆகிய தேதிகளில், "Women in Detention and Access to Justice" என்னும் தலைப்பிலான முதலாவது பிராந்திய மாநாடு சிம்லாவில் நடந்தது. காவல்துறை ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு செயலகம் (BPR & D) ஹிமாச்சலப் பிரதேசத்தின் சிறைத்துறையுடன் இணைந்து இம்மாநாட்டை ஏற்பாடு செய்திருந்தது. இந்த மாநாடு அனைத்து நிலை சிறைத்துறை ஊழியர்களுக்கும் தங்களின் பணி அனுபவங்களை வெளிப்படையாக எடுத்துக் கூறுவதற்கும், சிறைத்துறையின் சீர்திருத்தத்திற்கு

தேவையான சிறந்த நடைமுறைகளை கண்டறிவதற்குமான ஒரு தளத்தை வழங்கியது.

15. பயணிகள் தொந்தரவற்ற விமான பயணத்தை மேற்கொள்வதற்கு மத்திய உள்நாட்டு வான்போக்குவரத்து அமைச்சகம், எந்தத் திட்டத்தை தொடங்கவுள்ளது?

**விடை: Digi Yatra (டிஜி யாத்ரா)**

**விளக்கம்:**

- பயணிகள் தங்கள் உயிரியளவு தகவலைப் பயன்படுத்தி விமான நிலையத்திற்குள் நுழையும் வகையில், 'டிஜி யாத்ரா' என்ற திட்டத்தை மத்திய உள்நாட்டு விமானப் போக்குவரத்து அமைச்சர் சுரேஷ் பிரபு தொடங்கி வைத்தார். 'டிஜி யாத்ரா' என்பது முகத்தை அடையாளம் காணும் தொழில் நுட்பத்தை (Facial Recognation) அடிப்படையாகக் கொண்டது.
- இந்தத் திட்டம் காகிதமற்ற பயணத்தை அளிப்பதற்கான முன்னெடுப்பாக அமையும். பயணிகள் விமான நிலையத்துக்குள் நுழைவதற்கு உயிரியளவு (Biometricc) அடிப்படையிலான டிஜிட்டல் நடைமுறை பின்பற்றப்படும். இந்த 'டிஜி யாத்ரா' திட்டம் 2019 ம் ஆண்டு பிப்ரவரி மாதம் முதல் பெங்களூரு, ஹைதராபாத் விமான நிலையங்களில் செயல்படுத்தப்படும்.

16. இந்தோனேசியாவில் நிலநடுக்கம் மற்றும் சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவும் எந்த மனிதநேய அடிப்படையிலான உதவி நடவடிக்கையை இந்தியா தொடங்கியுள்ளது?

**விடை: ஆபரேஷன் சமுத்ரா மைத்ரி**

**விளக்கம்:**

- இந்தோனேசியாவில் நிலநடுக்கம் மற்றும் சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு பெருமளவில் மனிதாபிமான உதவிகளை வழங்குவதற்காக 'ஆபரேஷன் சமுத்ரா மைத்ரி' என்னும் உதவி நடவடிக்கையை இந்திய அரசாங்கம் தொடங்கியுள்ளது. இந்த உதவி நடவடிக்கையின் கீழ், இந்தியாவிலிருந்து C – 130 J & C – 17 ஆகிய

2 விமானங்கள் முறையே மருத்துவப் பணியாளர்கள் மற்றும் நிவாரணப் பொருள்களுடன் அங்கு அனுப்பப்பட்டுள்ளது.

17. மத்தியப் பிரதேசத்தில் சர்வதேச திறன்கள் பூங்காவை அமைப்பதற்காக, எந்த சர்வதேச அமைப்புடனான 150 மில்லியன் டாலர் கடன் ஒப்பந்தத்தில் இந்தியா கையெழுத்திட்டுள்ளது?

**விடை: ஆசிய வளர்ச்சி வங்கி**

**விளக்கம்:**

- ஆசிய வளர்ச்சி வங்கியானது போபாலில் இந்தியாவின் முதல் பல - திறன் பூங்காவை அமைக்க $ 150 மில்லியன் டாலர் கடன் வழங்க ஒப்புதல் அளித்துள்ளது. மத்தியப் பிரதேசத்தின் தொழில் நுட்ப மற்றும் தொழிற்கல்வி மற்றும் பயிற்சி அமைப்பின் தரத்தை மேம்படுத்துவதற்கான சர்வதேச பயிற்சி வசதிகளுடன் இந்தப் புதிய உலகளாவிய திறன்கள் பூங்கா அமைக்கப்படும்.

18. நிகழாண்டின் ச.ஃபாய்கிரி உச்சி மாநாடு மற்றும் விருதுகளில், இந்தியாவில் 'தூய்மையான வழிபாட்டுத் தலம்' என அறிவிக்கப்பட்டுள்ள தளம் எது?

**விடை: மாதா வைஷ்ணவி தேவி கோவில், ஜம்மு & காஷ்மீர்**

**விளக்கம்:**

- ஜம்மு & காஷ்மீர் மாநிலத்தின் ரேசி மாவட்டத்தில் உள்ள குகைக் கோவிலான மாதா வைஷ்ணவி தேவி கோவில், மும்பையில் இந்தியா டுடே குழுமத்தால் நடத்தப்பட்ட நிகழாண்டின் ச.ஃபாய்கிரி உச்சிமாநாடு மற்றும் விருதுகள் வழங்கும் விழாவில் நாட்டின் 'தூய்மையான வழிபாட்டுத் தலம்' என அறிவிக்கப்பட்டுள்ளது. திரிகுடா மலைகளில் அமைந்துள்ள இக்கோவிலுக்கு 2017ம் ஆண்டில் 81.78-க்கும் மேற்பட்ட பக்தர்கள் வருகை புரிந்துள்ளனர்.

19. ஈராண்டுக்கொருமுறை நடைபெறும் பத்தாவது "இந்தியா கெம் - 2018" என்னும் சர்வதேச கண்காட்சி மற்றும் மாநாடு, எந்த நகரத்தில் நடைபெற்றது?

**விடை: மும்பை**

**விளக்கம்:**

- ஈராண்டுக்கொருமுறை நடக்கும் "இந்தியா செம் - 2018" என்னும் சர்வதேச கண்காட்சி மற்றும் மாநாட்டின் பத்தாவது பதிப்பு, அக்டோபர் 4 – 6 வரை மும்பையில் நடைபெற்றது. இம்மாநாட்டை ரசாயனங்கள் மற்றும் பெட்ரோலிய வேதிகள் துறை, உரங்கள் மற்றும் ரசாயனங்கள் அமைச்சகம், இந்திய வர்த்தக மற்றும் தொழில்துறை கூட்டமைப்பு ஆகியவை இணைந்து நடத்தின.
- இம்மாநாடு உள்நாட்டளவிலும், பன்னாட்டளவிலும் உள்ள முதலீட்டாளர்களுக்கு ஒரு தளத்தை வழங்கும் ரசாயண துறையின் நீடித்த வளர்ச்சிக்கான அரசாங்க கொள்கையை வெளிக்காட்டும். இது ஆசிய – பசிபிக் பிராந்தியத்தில் நடைபெறும் ரசாயணங்கள் மற்றும் பெட்ரோலிய வேதிகள் தொழிற்துறையின் மிகப்பெரிய நிகழ்வுகளில் ஒன்றாகும்.

20. எந்த மாநிலத்தில், இந்தியாவின் முதல் 'மெத்தனால் சமையல் எரிபொருள் திட்டம்' தொடங்கப்பட்டுள்ளது?

**விடை: அசாம்**

**விளக்கம்:**

- அக்டோபர் 5 அன்று அசாமின் திப்ருகார் மாவட்டத்தில் உள்ள நம்ரூப் மெத்தனால் ஆலையில், இந்தியாவின் முதல் 'மெத்தனால் சமையல் எரிபொருள் திட்ட'த்தை பொதுத்துறை நிறுவனமான அசாம் பெட்ரோ வேதியியல் நிறுவனம் அறிமுகப்படுத்தியது. இந்தத் திட்டம் NITI ஆயோக் மூலம் ஊக்குவிக்கப்படுகிறது.
- பாதுகாப்பு மிக்க குப்பி அடிப்படையிலான இந்த சமையல் அடுப்புகள், சுவீட தொழில்நுட்பத்தில் இருந்து வந்தவை. தொழில்நுட்ப பரிமாற்றத்தின் கீழ், மிகப்பெரிய அளவில் சமையல் அடுப்புகள் உற்பத்தி செய்யும் ஆலை அடுத்த 18 மாதங்களுக்குள் இந்தியாவில் நிறுவப்படும்.

21. எந்த நகரத்தில், இந்தியப் பிராந்தியத்துக்கான காமன்வெல்த் நாடாளுமன்ற மாநாடு நடந்தது?

**விடை: கௌகாத்தி**

**விளக்கம்:**

- அசாம் தலைநகர் கௌகாத்தியில் இந்தியப் பிராந்தியத்திற்கான காமன்வெல்த் நாடாளுமன்ற மாநாடு அக்.7 அன்று தொடங்கியது. இம்மாநாட்டில் வடகிழக்குப்

பகுதிக்கான அவைத் தலைவர் ஆராய்ச்சி முன்னோட்டத்தை மக்களவைத் தலைவர் சுமித்ரா மகாஜன் தொடங்கி வைக்கிறார். 4 நாட்கள் நடைபெறும் இந்த மாநாட்டில் பொருளாதாரம், திறன் மேம்பாடு மற்றும் போக்குவரத்து இணைப்பு ஆகியவை குறித்து ஆலோசிக்கப்பட உள்ளது.

22. இடதுசாரி தீவிரவாதத்தை எதிர்த்துப் போரிடுவதற்கான கூட்டு நடவடிக்கைகள் மற்றும் தகவல்கள் பகிரலை மேற்கொள்ள எந்தெந்த மாநில காவற்துறைகள் முடிவு செய்துள்ளன?

**விடை: ஒடிசா மற்றும் ஆந்திரப் பிரதேசம்**

**விளக்கம்:**

- ஒடிசா மற்றும் ஆந்திர காவல் துறையினர், அண்மையில் இருமாநிலங்களின் எல்லையில் நிலவி வரும் இடதுசாரி தீவிரவாதத்தை திறம்பட எதிர்த்துப் போராடுவதற்கு, கூட்டு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும், தகவல்களை பகிர்ந்து கொள்வதற்கும் முடிவு செய்துள்ளனர். ஒடிசா DGP R P சர்மா, ஆந்திரப் பிரதேச DGP R P தாகூர் மற்றும் மாவோயிச எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள மாநிலங்களின் மற்ற மூத்த காவல்துறை ஆதிகாரிகள் ஆகியோர் கலந்துகொண்ட புவனேஸ்வரில் நடந்த ஒரு கூட்டத்தில் இம்முடிவு எடுக்கப்பட்டது.

23. எந்நகரத்தில், “JIMEX – 18” என்னும் இந்தியா – ஜப்பான் இருதரப்பு கடல்சார் பயிற்சியானது தொடங்கியுள்ளது?

**விடை: விசாகப்பட்டினம்**

**விளக்கம்:**

- இந்தியா மற்றும் ஜப்பான் கடற்படைகளுக்கு இடையிலான “JIMEX – 18” என்னும் போர்ப்பயிற்சி அக்.7 அன்று, ஆந்திர மாநிலம் விசாகப்பட்டினத்தில் தொடங்கியது. 8 நாள் நடைபெறும் இந்தப் பயிற்சியின் நோக்கம், இரு நாட்டு கடற்படைகளிடையே ஒத்துழைப்பை மேம்படுத்துவது மற்றும் சிறந்த நடைமுறைகளை பரஸ்பரம் உள்வாங்கிக் கொள்ளுதலாகும்.
- ஜப்பானிய கடற்படைத் துணைத்தலைவருக்கு அடுத்த நிலையிலுள்ள அதிகாரி தத்சுயா ஃபகுடா தலைமையிலான ஜப்பானிய போர் கப்பல்கள், மூன்றாவது முறையாக நடக்கும் இக்கூட்டுப்போர் பயிற்சியில் ஈடுபடவுள்ளன. இந்தப் பயிற்சியில்

இந்தியாவின் ஆயுதம் தாங்கிய போர் கப்பலான INS சாத்புரா, நீர்மூழ்சி எதிர்ப்புத் திறன் கொண்ட INS கத்மாத் மற்றும் ஏவுகணைகளை செலுத்தும் INS சக்தி உள்ளிட்ட போர் கப்பல்களும், வானூர்திகளும் ஈடுபடுகின்றன.

24. அண்மையில் சஷக்த் கிசான் யோஜனா (SKY) மற்றும் கிருஷி சமூஹ் யோஜனா (KSY) என்ற திட்டங்களை தொடங்கியுள்ள மாநில அரசு எது?

**விடை: அருணாச்சலப் பிரதேசம்**

**விளக்கம்:**

- அருணாச்சலப் பிரதேச அரசு அண்மையில், முதலமைச்சரின் சஷக்த் கிசான் யோஜனா (SKY) மற்றும் கிருஷி சமூஹ் யோஜனா (KSY) என்ற திட்டங்களை இடாநகரில் தொடங்கியது. இந்த SKY திட்டம், முதலமைச்சரின் வேலைவாய்ப்புத் திட்டம், வேளாண் - பொறிமயமாக்கல் திட்டம் மற்றும் தேயிலை மற்றும் ரப்பர் திட்டம் என மூன்று மீச்சிறப்பு திட்டங்களை உள்ளடக்கியுள்ளது. கூட்டுறவு அணுகுமுறையில் விவசாயிகளின் வருமானத்தை இரட்டிப்பாக்குவது KSY திட்டத்தின் நோக்கமாக உள்ளது.

25. அண்மையில் ‘நிர்மான் குசுமா’ என்ற திட்டத்தை அறிமுகப்படுத்திய மாநில அரசு எது?

**விடை: ஒடிசா**

**விளக்கம்:**

- மாநிலத்தில் உள்ள கட்டுமானத் தொழிலாளர்களின் குழந்தைகளின் தொழில்நுட்பக் கல்விக்கு நிதியுதவி அளிப்பதற்காக அண்மையில் ஒடிசா மாநில முதலமைச்சர் நவீன் பட்நாயக், “நிர்மான் குசுமா” என்ற திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளார். இதன்மூலம், ஐவுஜ பயிலும் மாணாக்கர் ஆண்டு ஒன்றுக்கு 23,600 ரூபாயும், பட்டயக்கல்வி பயிலும் மாணாக்கர் ஆண்டொன்றுக்கு 26,300 ரூபாயும் நிதியுதவியாக பெறுவர்.

26. 2018 கோவா சர்வதேச திரைப்பட விழாவில் பங்குதாரர் மாநிலமாக உள்ள மாநிலம் எது?

**விடை: ஜார்கண்ட்**

**விளக்கம்:**

- நவம்பர் 20 முதல் 28 வரை நடைபெறவுள்ள கோவா சர்வதேச திரைப்பட விழாவின் (GIFF – 2018) பங்குதாரர் மாநிலமாக ஜார்கண்ட் உள்ளது. மத்திய தகவல் மற்றும் ஒலிபரப்பு அமைச்சகத்தின் செயலாளர் அமித் கரே மற்றும் ஜார்கண்ட் தலைமைச் செயலாளர் சுதிர் திரிபாதி ஆகியோருக்கு இடையே ராஞ்சியில் நடந்த சந்திப்பில் இது முடிவு செய்யப்பட்டது.

27. ‘மனிதநேயத்திற்காக இந்தியா’ என்றவொன்றை அறிமுகம் செய்துள்ள அமைச்சகம் எது?

**விடை: வெளியுறவு அமைச்சகம்**

**விளக்கம்:**

- அக்டோபர் 9 அன்று வெளியுறவு அமைச்சர் சுஷ்மா சுவராஜ் புது தில்லியில் ‘மனிதநேயத்திற்காக இந்தியா’ என்றவொன்றை அறிமுகப்படுத்தினார். அதன்கீழ் ‘ஜெய்ப்பூர் கால்’ என்றழைக்கப்படும் செயற்கை கால்கள், உலகம் முழுவதும் தேவைப்படுவோர்க்கு இலவசமாக வழங்கப்படும். மனித நேயத்திற்கு மகாத்மா காந்தி வழங்கிய உன்னர சேவையை கௌரவிக்கும் பொருட்டு, தொண்டு நிறுவனமான ‘பகவான் மகாவீர் விக்லாங் சஹாயத்த சமிதி (BMVSS)” உடன் இணைந்து இந்த முயற்சி தொடங்கப்பட்டுள்ளது.
- மகாத்மா க்ாந்தியின் 150 ஆவது பிறந்தநாள் கொண்டாட்டங்களின் நீட்சியாக, பல நாடுகளில் ஓராண்டுக்கு நடைபெறும் செயற்கை உறுப்பு பொருத்து முகாம் நடத்தப்பட்டு வருகிறது. 1975ம் ஆண்டில் நிறுவப்பட்ட BMVSS, அதன் ‘ஜெய்ப்பூர் கால்’ தயாரிப்புக்காக அறியப்படுகிறது. செயற்கைக் கால் உற்பத்தி செய்யும் உலகின் மிகப்பெரிய நிறுவனங்களுள் இதுவும் ஒன்றாகும்.

28. எந்த மாநிலத்தில், ஆசியாவின் முதல் டால்பின் ஆராய்ச்சி மையம் வரவுள்ளது?

**விடை: பீகார்**

**விளக்கம்:**

- பீகார் தலைநகர் பாட்னாவில் உள்ள பாட்னா பல்கலை வளாகத்தில், கங்கையாற்றின் கரையில் தேசிய டால்பின் ஆராய்ச்சி மையம் அமைக்கப்படவுள்ளது. இது இந்தியா மற்றும் ஆசியாவின் முதல் டால்பின் ஆராய்ச்சி மையமாகும். அழிவின் விளிம்பிலுள்ள உயிரினமான டால்பின்களை பாதுகாப்பதற்காக பீகாரில் அக்டோபர் 5 அன்று அனுசரிக்கப்பட்ட டால்பின் தினத்தன்று இது அறிவிக்கப்பட்டது. டால்பின்களை பாதுகாக்கும் முயற்சிகளிலும், அவற்றின் ஆராய்ச்சியிலும் இந்த மையம் முக்கியப்பங்கு வகிக்கும்.

29. மக்கள் பிரதிநிதித்துவ சட்டம், 1951'ன் எந்தப் பிரிவின்படி, கர்நாடகத்தில் இடைத்தேர்தல் நடத்தும் தேர்தல் ஆணையம், ஆந்திரத்தில் இடைத்தேர்தல் நடத்தாமல் உள்ளது?

**விடை: பிரிவு 151A**

**விளக்கம்:**

- 1951ம் ஆண்டு மக்கள் பிரதிநிதித்துவ சட்டத்தின் 151A பிரிவில், மக்களவைத் தொகுதிகள், சட்டப்பேரவைத் தொகுதிகள் காலியாகும் நாளிலிருந்து, சரியாக ஆறு மாதங்களுக்குள் இடைத் தேர்தல் மூலம் நிரப்பப்பட வேண்டும் எனவும் அத்துடன், காலியாகும் தொகுதிகளில் இடைத் தேர்தல் நடத்தப்பட வேண்டுமானால், அந்தத் தொகுதிகளின் எஞ்சிய பதவிக்காலம் ஓராண்டு அல்லது அதை விட அதிக காலம் கொண்டதாக இருக்க வேண்டும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

30. அண்மையில் புது தில்லியில் 'சர்வதேச நடுவர் தீர்ப்பாயத்தில் சிறந்த நடைமுறைகள்' என்ற பியலரங்கத்தை நடத்திய இந்திய நிறுவனம் எது?

**விடை: NITI ஆயோக்**

**விளக்கம்:**

- ICC சர்வதேச நடுவர் தீர்பாயத்துடன் இணைந்து NITI ஆயோக் 'சர்வதேச நடுவர் தீர்ப்பாயத்தில் சிறந்த நடைமுறைகள்' என்ற பயிலரங்கத்தை புது தில்லியில் அக்.10 அன்று நடத்தியது. தீர்வு காணும் நடைமுறைகளை வலுப்படுத்துவதே இதன் நோக்கமாகும். 'இந்தியாவில் தயாரிப்போம்' என்பதோடு 'இந்தியாவிலேயே தீர்வு காண்போம்' என்பதை ஊக்குவிக்கும் விதமாக இது உள்ளது.

➢ இப்பயிலரங்கம், சர்வதேச தீர்ப்பாயம் தொடர்பான அடிப்படைக் கருத்துகளை உள்ளடக்குகிறது. இதில் கலந்துரையாடல், நடுவர்களை தேர்வு செய்தல் போன்ற பல்வேறு தலைப்புகளில் UK, சிங்கப்பூர், பாரிஸ் மற்றும் இந்தியாவைச் சேர்ந்த பயிற்சியாளர்கள் பயிற்றுவித்தனர்.

31. எந்த மாநிலத்தில், வைக்கோல் இழை மூலம் எத்தனால் உற்பத்தி மேற்கொள்ளப்படும் இந்தியாவின் முதல் 2G எத்தனால் உயிரி – சுத்திகரிப்பு நிலையம் அமைக்கப்படவுள்ளது?

**விடை: ஒடிசா**

**விளக்கம்:**

➢ வைக்கோல் இழை மூலம் எத்தனால் உறபத்தி மேற்கொள்ளப்படும் இந்தியாவின் முதல் 2 ஆம் தலைமுறை (2G) எத்தனால் உயிரி – சுத்திகரிப்பு நிலையம், ஒடிசா மாநிலம் பர்கர் மாவட்டத்தில் அமைக்கப்படவுள்ளது. 100 கோடி ரூபாய் மதிப்பீட்டில், பாரத் பெட்ரோலிய (BPCL) நிறுவனம் இதனை அமைக்கும். வைக்கோலை மூலப்பொருளாகக் கொண்டு, ஆண்டொன்றுக்கு 3 கோடி லிட்டர் வரை எரிபொருள் தரத்திலான எத்தனாலை தயாரிக்கும் திறனை உடையது இவ்வாலை.

32. 17 ஆவது பழைய உலக நாடகத் திருவிழா நடைபெறும் இடம் எது?

**விடை: புது தில்லி**

**விளக்கம்:**

➢ 17 ஆவது பழைய உலக நாடகத் திருவிழாவானது அக்.20 அன்று புது தில்லியில் உள்ள இந்திய வாழ்விட மையத்தில் நடைபெறும். இந்நாடக விழாவை "மனிதநேயத்தின் வாய்மொழி மற்றும் உள்ளார்ந்த பாரம்பரியத்தின் தலைசிறந்த கலை" என UNESCO அங்கீகரித்துள்ளது. 9 நாள் நடைபெறும் இந்த நாடகத் திருவிழா, மிகப் பழைமையான சமஸ்கிருத நாடக வகைகளுள் ஒன்றான 'கூடியாட்டம்' என்ற நாடகத்துடன் தொடங்கப்படும்.

33. 'கவச்' என்ற தீவிரவாத எதிர்ப்புப் படையை அமைக்க தீர்மானித்துள்ள மாநில

அரசு எது?

**விடை: ஹரியானா**

**விளக்கம்:**

- ஹரியானா அரசு, மாநிலத்தின் தற்போதைய பாதுகாப்பு அமைப்புகளை வலுப்படுத்துவதற்காக ‘கவச்’ என்ற தீவிரவாத எதிர்ப்புப் படையை அமைக்க தீர்மானித்துள்ளது. தெரிவு செய்யப்படும் ஹரியானா காவலர்களுக்கு தேசிய பாதுகாப்புப் படை பயிற்சியளிக்கும். ‘கவச்’சின் தலைமை அலுவலகம் குருகிராமில் இருக்கும் மற்றும் இதன் தலைவராக IG அல்லது DIG இருப்பார்கள். தீவிரவாத எதிர்ப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக ‘கவச்’சில் 150 காவலர்கள் இருப்பார்கள், அவர்களுக்கு மானேசரில் 14 வாரங்களுக்கு பயிற்சியளிக்கப்படும்.

34. ‘நீலப்புரட்சி: ஒருங்கிணைந்த வளர்ச்சி மற்றும் மீன்வளத் துறைகளின் மேலாண்மை’ என்ற புதிய திட்டத்தை தொடங்கவுள்ள மாநில அரசு எது?

**விடை: மேகாலயா**

**விளக்கம்:**

- ‘நீலப்புரட்சி: ஒருங்கிணைந்த வளர்ச்சி மற்றும் மீன்வளத்துறைகளின் மேலாண்மை’ என்ற புதிய திட்டத்தை மேகாலயா மாநில அரசு வரும் 26 அன்று தொடங்கவுள்ளது. மீனவர்கள் மற்றும் மீன் வளர்ப்போர்கள் பொருளாதார செழிப்பை அடைவதற்காகவும், உயிரி – பாதுகாப்பு மற்றும் சுற்றுச்சூழல் அக்கறையை கருத்தில் கொண்டு நீர் வளங்களை உகந்த முறையில் பயன்படுத்துவதன் மூலம் உணவு மற்றும் ஊட்டச்சத்து பாதுகாப்புக்கு பங்களிப்பதற்காகவும் இந்த நீலப்புரட்சி திட்டம் நடைமுறைப்படுத்தப்பட உள்ளது.

35. இந்தியாவின் உள்நாட்டு நீர்வழிப் போக்குவரத்து ஆணையம், அசாமின் நீமட்டியிலிருந்து எதுவரை ரோ - ரோ சேவையை தொடங்கியுள்ளது?

**விடை: மாஜூலி**

**விளக்கம்:**

- அக்.11 அன்று இந்தியாவின் உள்நாட்டு நீர்வழிப் போக்குவரத்து ஆணையம் (IWAI) அசாமின் நீமட்டியிலிருந்து மாஜூலி தீவு வரையிலும் ரோ - ரோ சேவையை (Roll

on - Roll off (Ro - Ro) தொடங்கியுள்ளது. நீமட்டியிலிருந்து மாஜூலி தீவு வரை தேஸ்பூர் பாலம் வழியாக சரக்குந்தில் செல்ல சுமார் 423 கி.மீ., ஆகும். அதனை வெறும் 12.7 கி.மீ., தூரமாக இந்த ஆற்றுவழிப் பாதை குறைத்துள்ளது. இந்தப் புதிய சேவைக்காக, MV புபென் ஹசாரிகாக என்ற புதிய கப்பலை ரூ.9.46 கோடி செலவில் IWAI வாங்கியுள்ளது.

36. எந்த மாநிலத்தில், 'The Coffee Day Malnad Ultra Marathon 2018' தொடங்கியுள்ளது?

**விடை: கர்நாடகா**

**விளக்கம்:**

- அக்.13 அன்று, கர்நாடகாவின் சிக்மங்களூருவில் உள்ள லால்பாக் தோட்டத்திலிருந்து 'The Coffee Day Malnad Ultra Marathon 2018' கொடியசைத்து தொடங்கி வைக்கப்பட்டது. இந்நிகழ்வு 50 கி.மீ., 80 கி.மீ., மற்றும் 110 கி.மீ., என 3 பிரிவுகளாக பிரிக்கப்பட்டுள்ளது. 22 இந்திய மாநிலங்களில் இருந்தும், 13 நாடுகளிலிருந்தும் சுமார் 811 போட்டியாளர்கள் இதில் கலந்து கொண்டனர்.

37. எந்த நகரத்தில், இந்தியாவின் முதல் இந்தியா - இஸ்ரேல் கண்டுபிடிப்பு மையம் (India – Israel Innovation Centre – IIIC) தொடங்கப்பட்டுள்ளது?

**விடை: பெங்களூரு**

**விளக்கம்:**

- இந்தியாவின் முதலாவது தொழில் முனைவு தொழில்நுட்ப மையமான இந்தியா - இஸ்ரேல் கண்டுபிடிப்பு மையம் (IIIC), அக்.10 அன்று பெங்களூருவில் நடந்த 3வது ஐழவு இந்திய மாநாட்டில் தொடங்கப்பட்டது. இஸ்ரேலிய நிறுவனங்கள் இந்தியாவில் கால்பதிக்க உதவும் இந்நடவடிக்கை, இவ்விரு நாடுகளைச் சேர்ந்த நிறுவனங்களுக்கிடையே கூட்டு முயற்சிகளை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- தொழில்முனைவு, விற்பனையாளர்களுடனான கூட்டுறவு, வழிகாட்டல் மற்றும் முறைசாரா சமூக மேம்பாடு, தொழில்நுட்பம், முதலீட்டாளர்கள் மற்றும் வாடிக்கையாளர்களுக்கு ஆதரவளிக்கும் ஒரு சூழலை இது வழங்கும்.

இம்மையத்தை அடல் புத்தாக்க திட்டத்தின் (AIM) திட்ட இயக்குநர் ரமணன் ராமநாதன் தொடங்கி வைத்தார்.

38. மாநிலத்தில் குறு, சிறு மற்றும் நடுத்தர தொழிற்துறைகளின் (MSME's) வளர்ச்சியை அதிகரிப்பதற்காக, எந்த மாநில அரசுடன் தேசிய பங்குச்சந்தை ஒப்பந்தித்துள்ளது?

**விடை: உத்தரகாண்ட்**

**விளக்கம்:**

- தேசிய பங்குச்சந்தை நிறுவனம் சமீபத்தில் உத்தரகாண்ட் மாநில அரசாங்கத்துடன் ஒப்பந்தம் செய்துள்ளது. இது குறு, சிறு மற்றும் நடுத்தர தொழிற்துறைகளுக்கு மூலதனம் வழங்குவதற்கும், மாநிலத்தில் அத்தகைய நிறுவனங்களின் வளர்ச்சியை அதிகரிப்பதற்கும் உதவும்.
- குறு, சிறு மற்றும் நடுத்தர தொழிற்துறைகளை மாநிலத்தில் வளர்த்தெடுப்பதில் பங்குச் சந்தை நிறுவனம் முக்கியப்பங்கு வகிக்கும். ஒப்பந்தத்தின் ஒரு பகுதியாக அந்நியச் செலாவணி, குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கு நிதியளிப்பு வாய்ப்புகளை அதிகரிக்கும் அரசின் முயற்சிகளை பங்குச்சந்தை ஆதரிக்கிறது.

39. எந்த நகரத்தில், இந்தியாவின் முதலாவது இணைவழி விவசாய மற்றும் உணவு வணிக கற்றல் தளம் தொடங்கப்பட்டுள்ளது?

**விடை: வாரங்கல்**

**விளக்கம்:**

- இந்தோ – UK கூட்டு முயற்சியான SRiX வேளாண் - வணிக அகாடமி, வாரங்கலில் உள்ள SR Innovation Exchange (SRiX) வளாகத்தில் தொடங்கப்பட்டுள்ளது. இந்தியாவின் முதலாவது இணையவழி விவசாய மற்றும் உணவு வணிக கற்றல் தளமான இதனை, ஹைதராபாத்தில் பிரிட்டிஷ் துணை உயர் ஆணையர் ஆண்ட்ரூ பிளெமிங் தொடங்கி வைத்தார்.
- SRiX என்பது இந்திய அரசின் அறிவியல் மற்றும் தொழில்நுட்ப துறையின் கீழ் இயங்கும் தொழில் நுட்ப வணிக காப்பகமாகும். வேளாண்மை, தூய தொழில்நுட்பம் மற்றும் இணைய உலகம் ஆகியவற்றின் துளிர் நிறுவனங்களில் இது கவனம் செலுத்துகிறது.

40. எந்த முகலாய பேரரசரால், பண்டைய நகரமான 'பிரயாகா' 'அலகாபாத்' என பெயர்மாற்றம் செய்யப்பட்டது?

**விடை: ஷாஜகான்**

**விளக்கம்:**

- உத்திரப் பிரதேச மாநிலத்தின் முக்கிய நகரமான அலகாபாத்தின் பெயரை 'பிரயாக்ராஜ்' என அதிகாரப்பூர்வமாக மாற்றியுள்ளதாக உத்திரப் பிரதேச மாநில அரசு அறிவித்துள்ளது. 16ம் நூற்றாண்டில் முகாலய பேரரசர் அக்பர், கங்கை மற்றும் யமுனை ஆறுகளின் சங்கமத்திற்கருகே ஒரு கோட்டையைக் கட்டி அதற்கு 'இலகாபாத்' என பெயர் சூட்டுவதற்கு முன்பு வரை அந்த நகரம் 'பிரயாக்' என்றே அழைக்கப்பட்டு வந்தது. பின்னர் அக்பரது பேரன் ஷாஜகான், அந்த முழு நகரத்திற்கும் 'அலகாபாத்' என மறுபெயரிட்டார்.
- சங்கமத்திற்கு அருகேயுள்ள பகுதி இப்போதும் 'பிரயாக்' என்றே அழைக்கப்படுகிறது. 2 ஆறுகள் சங்கமிப்பதே 'பிரயாக்' மற்றும் அலகாபாத்தில் கங்கை, யமுனை மற்றும் சரஸ்வதி ஆகிய மூன்று ஆறுகள் சங்கமிக்கின்றன. எனவே அது 'சங்கமங்களின் அரசன்' என கருதப்படுகிறது.

41. எந்த நோக்கத்திற்காக **'ஸ்வஸ்தா பாரத் யாத்ரா'** என்ற தேசிய பரப்புரை தொடங்கப்பட்டது?

**விடை: பாதுகாப்பான உணவு**

**விளக்கம்:**

- நடப்பாண்டு உலக உணவு தினத்தன்று ஆரோக்கியமாக இருப்பதற்காக பாதுகாப்பான மற்றும் சத்தான உணவுகளை உட்கொள்வது பற்றி வாடிக்கையாளர்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்காக அக்.16 அன்று இந்திய அரசு 'ஸ்வஸ்தா பாரத் யாத்ரா' என்ற தேசிய அளவிலான பரப்புரையை தொடங்கியது. இதன்படி, உணவுப் பாதுகாப்பு & தரப்படுத்தல் ஆணையமானது (FSSAI) இந்தியா முழுவதும் மிதிவண்டி பேரணியை நடத்தும்.

42. 12வது ஆசிய ஐரோப்பா உச்சிமாநாட்டில் (ASEM) பங்கேற்கும் இந்தியத் தூதுக்குழுவுக்கு தலைமை தாங்குபவர் யார்?

**விடை: வெங்கையா நாயுடு**

**விளக்கம்:**

- 12வது ஆசிய – ஐரொப்பிய உச்சிமாநாடு அக்.18 அன்று பெல்ஜியம் தலைநகர் பிரசல்சில் ‘உலக சவால்களை எதிர்கொள்ள உலக பங்களிப்பாளர்கள்’ என்ற கருப்பொருளில் தொடங்கியது. இந்த இரண்டு நாள் மாநாட்டில் பங்கேற்கும் இந்தியப் பிரதிநிதிகள் குழுவிற்குத் தலைமையேற்கிறார் குடியரசுத் துணைத் தலைவர் வெங்கையா நாயுடு.
- 2017 ஆகஸ்ட் மாதம் குடியரசுத் துணைத்தலைவராக பொறுப்பேற்ற பின் அவர் முதல்முறையாக இந்த இருதரப்பு உச்சிமாநாட்டில் பங்கேற்கிறார். தொடக்க அமர்விலும் பங்கேற்கும் குடியரசுத் துணைத்தலைவர், பல்வேறு நாடுகளின் தலைவர்களுடன் கலந்துரையாடுகிவார். பெல்ஜியம் மன்னரை சந்திக்கவுள்ள அவர், மாநாட்டிற்கிடையே ஆஸ்திரியா, போர்ச்சுகல், சுவிட்சர்லாந்து மற்றும் பிற நாடுகளின் அரசுத்தலைவர்களுடன் இருதரப்பு சந்திப்புகளை நிகழ்த்துவார்.

43. அரசியலமைப்பின் எந்தப் பிரிவின் கீழ், அமைச்சரின் பதவி விலகலை இந்தியக் குடியரசுத் தலைவர் ஏற்றுக்கொள்வார்?

**விடை: பிரிவு 75**

**விளக்கம்:**

- பிரதமர் மோடியின் ஆலோசனையின் பேரில் இந்தியக் குடியரசின் அமைச்சரவையை சேர்ந்த M J அக்பரின் ராஜிநாமாவை அரசியலமைப்பின் 75வது பிரிவின் விதி (2)ன் கீழ் இந்தியக் குடியரசுத்தலைவர் ராம்நாத் கோவிந்த் அண்மையில் ஏற்றுக்கொண்டார். பல பெண் பத்திரிக்கையாளர்கள் அவருக்கு எதிராக பாலியல் துன்புறுத்தல் குற்றச்சாட்டுகளை கூறியதன் காரணமாக அவர் வெளியுறவுத்துறை இணை அமைச்சர் பதவியிலிருந்து விலகியுள்ளார்.

44. "Dharma Guardian – 2018" என்ற முதலாவது கூட்டு இராணுவப் பயிற்சி, இந்தியாவிற்கும் எந்த நாட்டிற்கும் இடையிலானது?

**விடை: ஜப்பான்**

**விளக்கம்:**

- இந்தியாவிற்கும் ஜப்பானிற்கும் இடையிலான "Dharma Guardian – 2018" என்ற முதலாவது கூட்டு இராணுவப் பயிற்சியானது நவம்பர் 01 – நவம்பர் 14 வரை வைரெங்காதேவில் உள்ள கிளர்ச்சி எதிர்ப்பு போர்முறை பள்ளியில் நடைபெறவுள்ளது. 14 நாள் நடைபெறும் இப்பயிற்சியின் போது, இரு நாட்டுப்படைகளிடையே இருக்கும் தொடர்பு அதிகரிக்கப்படும்.
- இருதரப்பினரும் கூட்டாக பயணித்து, திட்டமிட்டு, நன்கு திட்டமிடப்பட்ட உத்திசார் பயிற்சிகளை மேற்கொள்வார்கள். இருதரப்பு சார்ந்த வல்லுநர்கள் நிபுணத்துவம் குறித்த தங்களின் வரிவான அனுபவங்களை பகிர்ந்து கொள்வார்கள்.

45. எந்த மாநிலத்தின் பிரபலமான ஷாஹி லிட்சி பழத்துக்கு அண்மையில் புவிசார் குறியீடு கிடைத்தது?

**விடை: பீகார்**

**விளக்கம்:**

- பீகாரில் மாநிலத்தின் முசாபர்பூர் கிழக்கு சம்பரான், வைசாலி, சமஸ்டிபூர் மாவட்ட புவியியல் சூழல் சார்ந்து விளையும் ஷாஹி லிச்சி (Shahi Litchi) பழத்துக்கு அதன் தனிப்பட்ட சுவை, சாறு மற்றும் மணத்துக்காக புவிசார் குறியீடு (Geographical Indication) கிடைத்துள்ளது. இதன் மூலம் இந்திய மற்றும் சர்வதேச சந்தைகளில் அதன் விற்பனை அதிகரிக்கும்.

46. எந்த நகரத்தில், 5ஆவது இந்திய பெண்கள் இயற்கை விழா நடைபெறவுள்ளது?

**விடை: புது தில்லி**

**விளக்கம்:**

- புது தில்லியில் உள்ள இந்திரா காந்தி தேசிய மையத்தில், அக்.26 முதல் நவ.4 வரை 5 ஆவது இந்திய பெண்கள் இயற்கை விழா நடைபெறவுள்ளது. இயற்கை முறையில் விவசாயம் செய்யும் பெண்கள் மற்றும்

தொழில்முனைவோரை ஊக்கப்படுத்தும் விதமாக மத்திய பெண்கள் மற்றும் குழந்தைகள் நலன் அமைச்சகம் இந்த விழாவை நடத்துகிறது.

47. "Oneer TM" என்ற நீர் தொற்றுநீக்கல் முறைமையை உருவாக்கியுள்ள இந்திய ஆராய்ச்சி அமைப்பு எது?

**விடை: CSIR**

**விளக்கம்:**

- லக்னோவில் உள்ள அறிவியல் மற்றும் தொழிலக ஆய்வு மன்றம், இந்திய நஞ்சியல் ஆராய்ச்சி நிறுவனமானது (CSIR - IITR) 'Oneer TM' என்று பெயரிடப்பட்ட குடிநீர் தொற்றுநீக்கல் முறைமையை உருவாக்கியுள்ளது. இது நீரில் உள்ள வைரஸ், பாக்டீரியா, பூஞ்சை போன்ற தொற்று நோயை ஏற்படுத்தும் காரணிகளை நீக்கி தூய்மையான குடிநீரை வழங்கும்.
- வெறும் 2 பைசா செலவில் பாதுகாப்பான மற்றும் தூய்மையான ஒரு லிட்டர் குடிநீரை இது வழங்கும். சூரிய மின்னாற்றலில் இயங்கும் இது, கிராமப்புற மக்களுக்கு பேருதவியாக இருக்கும். 'இந்தியாவில் தயாரிப்போம்' என்ற திட்டத்தின் கீழ் இது உருவாக்கப்பட்டுள்ளது.

48. இந்தியாவின் முதல் புகையற்ற மாநிலம் என மாறவுள்ள மாநிலம் எது?

**விடை: கேரளா**

**விளக்கம்:**

- பொதுத்துறை எண்ணெய் நிறுவனங்களின் 100% LPG பயன்பாட்டு கண்காணிப்புடன் இந்தியாவின் முதல் புகையற்ற மாநிலம் என கேரள மாநிலம் மாறவுள்ளது. விறகுக்கட்டையை எரிப்பதனால் ஏற்படும் ஒரு கோடி டன் அளவிலான நச்சு வாயு உமிழ்வு, இதன்மூலம் குறையும். மேலும், கிராமங்களில் LPG அடுப்பை அறிமுகம் செய்வதன் மூலம் 25 லட்சம் மரங்கள் வரை காப்பாற்றப்படும். பிரதமர் உஜ்வாலா திட்டத்தின் கீழ், பெரும்பாலான கிராமங்கள், நகரங்களில் இந்த இலக்கு எட்டப்பட்டுள்ளது.
- 50% சந்தை மதிப்பை இந்திய எண்ணெய் நிறுவனமும், மீதமுள்ளவற்றை HPCL மற்றும் BPCL கொண்டுள்ளன. புதிய தலைமுறை எரிபொருட்களான CNG

மற்றும் பிற பசுமை எரிபொருள்களை மாநிலத்திற்கு தர இந்திய எண்ணெய் நிறுவனம் தயாராகவுள்ளது. பிரதம மந்திரி உஜ்வாலா திட்டத்தின்படி, சமூக – பொருளாதார சாதிவாரி மக்கள்தொகை கணக்கெடுப்பின் மூலம் அடையாளம் காணப்பட்ட வறுமைக் கோட்டிற்கு கீழ் வாழும் ஒரு பெண்மணிக்கு, மத்திய அரசின் 1,600 ரூபாய் நிதியுதவி மூலம் வைப்பு நிதியற்ற இலவச LPG இணைப்பு வழங்கப்படுகிறது.

49. அண்மையில் எந்த மாநிலத்தில், **'காதி பிஹு'** திருவிழா கொண்டாடப்பட்டது?

**விடை: அசாம்**

**விளக்கம்:**

- 'காதி பிஹு' அல்லது கங்காலி பிஹு' என்றழைக்கப்படும் 'பிஹு' விழாவின் மூன்றாவது பதிப்பு, அசாமில் அமைதி நிலையையும், செல்வச் செழிப்பையும் கொண்டு வருவதற்காக அண்மையில் கொண்டாடப்பட்டது. அக்டோபர் மாத இடையில் கொண்டாடப்படும் இந்த விழாக்காலத்தின் போது, வயல்களில் நெல் வளர்ந்து வரும் நிலையில் உள்ளது. இந்த நாளில், மண் விளக்குகளை களஞ்சியம், தோட்டம் மற்றும் நெல் வயல்களின் அடிவாரத்தில் ஏற்றப்படும். மாலை வேளையில், சிறப்பாக தயாரிக்கப்பட்ட அரிசி பொருட்கள் கால்நடைகளுக்கு வழங்கப்படுகிறது.

50. எந்த நகரத்தில், 4வது உலகளாவிய பங்குதாரர்கள் கருத்துக்களம் நடைபெறவுள்ளது?

**விடை: புது தில்லி**

**விளக்கம்:**

- வரும் டிச.12 ரூ 13 ஆகிய தேதிகளில் இந்திய அரசு 4ஆவது உலகளாவிய பங்குதாரர்கள் கருத்துக் களத்தை புது தில்லியல் நடத்தவுள்ளது. தனித்துவமிக்க இந்தக் கருத்துக்களம் தாய், பச்சிளம் குழந்தை மற்றும் குழந்தை நலன்களுக்கான கூட்டாண்மையின் (Partnership for Maternal, New born & Child Health – PMNCH) அர்ப்பணிக்கப்பட்ட 1000 + பங்காளர்களை ஒருங்கிணைக்கிறது. இதனை சுகாதார மற்றும் குடும்ப நலன் அமைச்சகமும், PMNCH'யும் இணைந்து நடத்துகின்றன.

51. எந்த ஆண்டில், நேதாஜியால் நாடுகடத்த இந்திய அரசு (ஆசாத் ஹிந்த) உருவாக்கப்பட்டது?

**விடை: 1943**

**விளக்கம்:**

- 1943ம் ஆண்டு அக்.21 அன்று, 'ஆசாத் ஹிந்த்' என்னும் நாடு கடத்த இந்திய அரசாங்கத்தை நேதாஜி சுபாஷ் சந்திர போஸ் உருவாக்கினார். அவரே இந்த இடைக்கால இந்திய அரசின் தலைவராகவும் இருந்தார். பிரிட்டிஷ் ஆட்சியில் இருந்து இந்தியாவை விடுதலை செய்வதற்காக அனைத்து முக்கிய ஆற்றல்களுடன் இணைந்து செயல்படும் நோக்குடன், 1940 காலங்களில் இந்தியாவிற்கு வெளியில் தோன்றிய சுதந்திர இயக்கத்தின் ஒரு பகுதியாக இது இருந்தது.
- இந்தியாவின் விடுதலைப் போராட்டத்திற்கு மிகவும் தேவையான உத்வேகத்தை அளிப்பதில் இந்திய தேசிய இராணுவத்தின் பாத்திரம் முக்கியத்துவத்தை கொண்டிருந்தது. அண்மையில் இதன் 75வது ஆண்டு நிறைவுவிழா, அக்.21 அன்று தில்லி செங்கோட்டையில் கொடியேற்றி கொண்டாடப்பட்டது.

52. எந்த மாநிலத்தில், நடப்பாண்டு விஸ்வ சாந்தி அகிம்சை சம்மேளனம் தொடங்கப்பட்டது?

**விடை: மகாராஷ்டிரா**

**விளக்கம்:**

- குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த் மகாராஷ்டிரா மாநிலம் நாசிக் மாவட்டம் மங்கி துங்கி என்ற இடத்தில் விஸ்வ சாந்தி அகிம்சை சம்மேளனத்தை அக்.22 அன்று தொடங்கி வைத்தார். உலக அமைதி மற்றும் அகிம்சை மாநாடு என்றழைக்கப்படும் இது, பகவான் ரிஷபதேவ் மூர்த்தி நிர்மான் சமிதி மூலம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

53. எந்த நகரத்தில், 27வது அணுப்பிணைவு ஆற்றல் மாநாடு தொடங்கியுள்ளது?

**விடை: காந்தி நகர்**

**விளக்கம்:**

- 27வது IAEA அணுப்பிணைவு ஆற்றல் மாநாடு, அக்.22 அன்று குஜராத் மாநிலம் காந்தி நகரில் தொடங்கியது. இந்த மூன்று நாள் நகழ்வு சர்வதேச அணுசக்தி முகமையால் ஏற்பாடு செய்யப்பட்டு, அணு ஆற்றல் துறை & காந்திநகரில் உள்ள அயனிம ஆராய்ச்சி நிறுவனத்தால் நடத்தப்படுகிறது.
- புதிய முன்னுரிமைகள் மூலம் வடிவமைக்கப்பட்ட தேசிய மற்றும் பன்னாட்டு அணுப்பிணைவு ஆற்றல் சோதனைகளின் ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி முயற்சிகளின் முடிவுகளை பகிர்ந்து கொள்வதற்கான ஒரு தளத்தை வழங்குவதே இம்மாநாட்டின் நோக்கமாகும்.

54. பின்வருவனவற்றுள் இந்தியாவின் முதல் உள்நாட்டு சொகுசு கப்பல் எது?

**விடை: ஆங்ரியா (Angriya)**

**விளக்கம்:**

- இந்தியாவின் முதல் உள்நாட்டு சொகுசு கப்பலான 'ஆங்ரியா', அக்.20 அன்று தனது சேவையை தொடங்கியது. மும்பை மற்றும் கோவா இடையே பயணிக்கவுள்ள இந்தக் கப்பல், வாரந்தோறும் 4 முறை இயக்கப்படவுள்ளது. ஒரு நபருக்கான பயணச்சீட்டு விலை ரூ.7000 முதல் ரூ.12000 ஆகும். சாதாரண அறைகள் முதல் ஆடம்பரமான அறைகள் என 8 விதங்களில் மொத்தம் 104 அறைகள் இக்கப்பலில் உள்ளன. ஒரே நேரத்தில் சுமார் 399 பேர் இதில் பயணிக்க முடியும்.
- நாட்டின் முதலாவது கப்பல் படைத்தளபதியான சர்கேல் கங்கோஜி ஆங்ரேவின் நினைவாக 'ஆங்ரியா' என இக்கப்பலுக்கு பெயர் சூட்டப்பட்டுள்ளது.

55. இந்தியாவின் கடலோரப் பகுதிவாழ் மக்களின் பாதுகாப்பிற்காக அண்மையில் $ 43.4 மில்லியன் டாலர் நிதியை வழங்க ஒப்புக்கொண்ட பசுமை பருவநிலை நிதியத்தை எந்த ஐ.நா. அமைப்பு ஆதரிக்கிறது?

**விடை: UNDP (United Nation Development Programm)**

**விளக்கம்:**

- காலநிலை மாற்றத்தின் தீவர தாக்கத்தை எதிர்த்துப் போராடும் முயற்சியின் ஒரு பகுதியாக ஆந்திரா, மகாராஷ்டிரா மற்றும் ஒடிசா ஆகிய மாநிலங்களில் வாழும் இந்திய கடலோரப் பகுதி வாழ் சமூக மக்களின் பாதுகாப்பிற்காக அக்.21 அன்று,

ஐ.நா. ஆதரவுடன் பசுமை பருவநிலை நிதியமானது $ 43.4 மில்லியனை வழங்க ஒப்புக் கொண்டது.

56. இந்தியாவின் எந்த யூனியன் பிரதேசத்தில், பவழப்பாறைகளின் நிலை மற்றும் பாதுகாப்பு குறித்த சர்வதேச மாநாடு (STAPCOR – 2018) நடைபெற்றது?

**விடை: இலட்சத்தீவுகள்**

**விளக்கம்:**

- அக்.22 – 24 வரை "Reef for Life" என்ற கருப்பொருளுடன் இலட்சத்தீவுகளில் உள்ள பங்காராம் தீவில், பவழப்பாறைகளின் நிலை மற்றும் பாதுகாப்பு குறித்த சர்வதேச மாநாடு (STAPCOR – 2018) நடைபெற்றது. இது உள்ளூர் நிர்வாகத்தின் ஒருங்கிணைப்புடன் இந்திய விலங்கியல் ஆய்வு நிறுவனத்தின் மூலம் ஏற்பாடு செய்யப்பட்டது.
- பவழத் திட்டுகளின் முக்கியத்துவத்தையும் அதன் பாதுகாப்பிற்கான தேவையும் இந்த மாநாடு வலியுறுத்தியது. அமெரிக்கா, இங்கிலாந்து, குவைத், இத்தாலி, பிரான்ஸ், மாலத்தீவு மற்றும் இலங்கை ஆகிய நாடுகளைச் சேர்ந்த சுமார் 150 பிரதிநிதிகள் இதில் கலந்து கொண்டனர்.

57. எந்த நகரத்தில், 'உத்பவ் உத்சவம்' என்ற 15வது சர்வதேச நடன விழா நடைபெற்றது?

**விடை: குவாலியர்**

**விளக்கம்:**

- அக்.20-25 வரை மத்தியப் பிரதேசத்தில் உள்ள குவாலியரில், 'உத்பவ் உத்சவம்' என்ற 15வது சர்வதேச நடன விழா நடைபெற்றது. இதனை இந்தியாவுக்கான உஸ்பெகிஸ்தான் தூதுவர் ஃபர்ஹோத் அர்சீவ் தொடங்கி வைத்தார். நடன நிகழ்த்துநர்களுக்கு ஒரு நல்வாய்ப்பை ஏற்படுத்தி கொடுப்பதும், பல்வேறு நாடுகளின் தேசிய கலாச்சாரங்களை அறிமுகப்படுத்துவதும் இவ்விழாவின் நோக்கமாகும். இந்தியாவை சேர்ந்த 25 குழுக்கள் தவிர பல்கேரியா, துருக்கி மற்றும் இலங்கை ஆகிய நாடுகளை சேர்ந்த நடனக்குழுக்கள் இந்த நிகழ்வில் பங்கேற்றன.

58. இந்தியாவின் முதல் பொறியில்லா ரயில் (Engine - less Train) எது?

**விடை: ரயில் 18 (Train 18)**

**விளக்கம்:**

- நாட்டிலேயே முதன்முறையாக, மணிக்கு 160 கி.மீ., வேகத்தில் செல்லக்கூடிய 'ரயில் 18' எனும் அதிவிரைவு ரயில் சென்னை ரயில் பெட்டி தொழிற்சாலையில் தயாரிக்கப்பட்டுள்ளது. இந்த ரயில், சோதனை ஓட்டத்துக்காக ரயில்வே வாரியத்திட்டம் அக்.29 அன்று ஒப்படைக்கப்படவுள்ளது. 80% மூலப்பொருள்கள் உள்நாட்டிலேயே பெறப்பட்டு, இந்திய தொழில்நுட்பத்தால் ரூ.100 கோடி செலவில் 18 மாத காலத்தில் இந்த ரயில் தயாரிக்கப்பட்டுள்ளது. இதில் ரயில் பொறி தனித்து இல்லாமல் பெட்டிகளுடன் இணைக்கப்பட்ட அமைப்பாக இருக்கும்.

59. 11ஆவது உலக வேளாண் தலைமைத்துவ உச்சிமாநாடு நடைபெற்ற இடம் எது?

**விடை: புது தில்லி**

**விளக்கம்:**

- அக்.24 அன்று புது தில்லியில், "Connecting Farmers to Market", என்ற கருப்பொருளுடன் 11ஆவது உலக வேளாண் தலைமைத்துவ உச்சிமாநாடு நடைபெற்றது. கொள்கை சீர்திருத்தம் மற்றும் கூட்டு முயற்சி மூலம் இந்திய விவசாயிகளுக்கு சிறந்த சந்தை மாதிரிகள் மற்றும் இணைப்புகளை வழங்குவதற்காக தேசிய மற்றும் சர்வதேச சந்தைகளின் நிலை மற்றும் வெற்றிகர மாதிரிகள் குறித்து விவாதிப்பதே இந்த 2 நாள் உச்சிமாநாட்டின் நோக்கமாகும். இதில், விவசாய அமைச்சர் சோமிரெட்டி சந்திரமோகன் ரெட்டி, முதலமைச்சர் N. சந்திரபாபு நாயுடு சார்பில் 'கொள்கை தலைமைத்துவம்' பிரிவில் உலக வேளாண் தலைமைத்துவ விருதை பெற்றுக் கொண்டார்.

60. நீடித்த வளர்ச்சி இலக்குகளுக்கான தேசிய சுட்டிக்காட்டும் கட்டமைப்பை ஆய்வுசெய்யும் உயர்மட்ட வழிநடத்தும் குழுவின் தலைவர் யார்?

**விடை: இந்தியாவின் தலைமை புள்ளியியலாளர்**

**விளக்கம்:**

- பிரதமர் மோடி தலைமையில் புதுதில்லியில் நடைபெற்ற மத்திய அமைச்சரவைக் கூட்டத்தில் நீடித்த வளர்ச்சி இலக்குகள் குறித்து அவ்வப்போது மறு ஆய்வுசெய்யவும், மேம்படுத்தவும், தேசிய அளவில் சுட்டிக்காட்டும் கட்டமைப்பை உருவாக்குவதற்கான உயர்மட்ட வழிகாட்டுதல் குழுவை ஏற்படுத்துவதற்கு ஒப்புதல் வழங்கப்பட்டது. இந்தியாவின் தலைமை புள்ளியியலாளர் மற்றும் புள்ளிவிவரங்கள், திட்ட அமலாக்க மத்திய அமைச்சகத்தின் செயலாளர் தலைமையில் இந்த உயர்மட்ட வழிகாட்டுதல் குழு அமைக்கப்படுகிறது.

61. எந்த நகரத்தில், 5ஆவது இந்திய பெண்கள் இயற்கை விழா நடைபெறவுள்ளது?

**விடை: புது தில்லி**

**விளக்கம்:**

- மத்திய பெண்கள் மற்றும் குழந்தைகள் நலன் அமைச்சர் மேனகா சஞ்சை காந்தி, அக்டோபர் 26 அன்று, 5ஆவது இந்திய பெண்கள் இயற்கை விழாவை (Women of India Organic Festival) புது தில்லியில் உள்ள இந்திரா காந்தி தேசிய மையத்தில் தொடங்கி வைத்தார்.
- இயற்கை முறையில் விவசாயம் செய்யும் பெண்கள் ரூ தொழிற்முனைவோரை ஊக்கப்படுத்துவதே இவ்விழாவின் நோக்கமாகும். இந்தியாவின் 26 மாநிலங்களிலிருந்து 500-க்கும் மேற்பட்ட பெண் தொழில்முனைவோர்கள் தங்களின் விவசாய உற்பத்திப் பொருட்களுடன் இவ்விழாவில் கலந்து கொள்ளவுள்ளனர்.

62. எந்த மாநில அரசுடன் இணைந்து மனிதநேயத்திற்கான உருமாற்றக்கல்வி மாநாட்டை (TECH – 2018) UNESCO MGIEP நடத்தவுள்ளது?

**விடை: ஆந்திரப் பிரதேசம்**

**விளக்கம்:**

- நவ.15 - 17 வரை வைசாக் நகரில் உள்ள நோவோடெல்லில், மனிதநேயத்திற்கான உருமாற்றக் கல்வி மாநாட்டை (Transforming Education Conference for Humanity - TECH - 2018) ஆந்திரப் பிரதேச மாநில அரசுடன் இணைந்து UNESCO MGIEP (அமைதி மற்றும் நீடித்த மேம்பாட்டுக்கான மகாத்மா காந்தி கல்வி நிறுவனம்) நடத்தவுள்ளது.

63. 1951ம் ஆண்டு மக்கள் பிரதிநிதித்துவச் சட்டத்தின் எந்தப் பிரிவின் கீழ்பதிவு செய்யப்பட்டு உள்ள அரசியல் கட்சி, தேர்தல் பத்திரங்களைப் பெற தகுதியுடையது?

**விடை: பிரிவு 29A**

**விளக்கம்:**

- வரும் நவம்பர் 1 – 10 வரை SBI தனது 29 கிளைகள் மூலம் தேர்தல் பத்திரங்களை வழங்கவும், அவற்றை ரொக்கமாக மாற்றுவதற்கும் அங்கீகாரம் அளிக்கப்பட்டுள்ளதாக அண்மையில் இந்திய அரசு அறிவித்துள்ளது. ரூ.1000, ரூ.10,000, ரூ.1 லட்சம், ரூ.10 லட்சம், ரூ.1 கோடி ஆகியவற்றின் மடங்குகளில் இந்தப் பத்திரங்களைப் பெறலாம்.
- 2018ம் ஆண்டு தேர்தல் பத்திரத் திட்டத்தின் கீழ், தேர்தல் பத்திரங்களைத் தனிப்பட்ட இந்தியாவின் குடிமகனோ குடிமகனாக அறிவிக்கப்பட்டவரோ வாங்கிக் கொள்ளலாம். ஒரு நபர் இப்பத்திரங்களைத் தனியாகவோ, கூட்டாகவோ பெறலாம். மக்கள் பிரதிநிதித்துவச் சட்டத்தின் (1951) 29A பிரிவின் கீழ், பதிவு செய்யப்பட்ட அரசியல் கட்சிகள் மட்டுமே தேர்தல் பத்திரங்களைப் பெறவியலும். அக்கட்சி மக்களவை/சட்டப்பேரவைத் தேர்தலில் 1 சதவீதத்துக்கும் அதிகமான வாக்குகளைப் பெற்றிருக்க வேண்டும். அக்கட்சிகளே இவற்றை பெறுவதற்கு தகுதியுடையவை.

64. அண்மையில் ‘இளம் கண்டுபிடிப்பாளர்கள் திட்டம் YIP – 2018’ஐ நடத்திய ஐஐடி எது?

**விடை: ஐஐடி கரக்பூர்**

**விளக்கம்:**

- கரக்பூர் ஐஐடி நிறுவனம் அண்மையில், ‘இளம் கண்டுபிடிப்பாளர்கள் திட்டம் YIP – 2018’ என்ற அறிவியல் மற்றும் தொழில்நுட்ப போட்டியை வகுப்பு 8 முதல் 10 வரையுள்ள மாணவர்களுக்காக ஏற்பாடு செய்தது. இளைய தலைமுறையினர் அறிவியல் மற்றும் தொழில்நுட்ப கண்டுபிடிப்புகளில் மேலும் கவனம் செலுத்துவதற்காக இப்போட்டி நடத்தப்பட்டது.

65. சமீபத்தில், கலாச்சாரம் மற்றும் கல்வி ஒத்துழைப்புக்காக பிரிட்டிஷ் கவுன்சிலுடனான ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ள இந்தியாவின் வடகிழக்கு மாநிலம் எது?

**விடை: அருணாச்சலப் பிரதேசம்**

**விளக்கம்:**

- அருணாச்சலப் பிரதேச அரசானது சமீபத்தில் அம்மாநில அரசுக்கும் ஐக்கிய இராஜ்ஜியத்திற்கும் இடையே கல்வி மற்றும் கலாச்சார ஒத்துழைப்பை வலுப்படுத்துவதற்காக பிரிட்டிஷ் கவுன்சில் உடனான ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டது.

66. இந்தியாவில் பொது சுகாதாரத் திட்டத்தில் சிறந்த மற்றும் பிரதிபலன் சேவைகள், புதிய கண்டுபிடிப்புகள் குறித்த 5ஆவது தேசிய உச்சிமாநாட்டை நடத்தும் மாநிலம் எது?

**விடை: அசாம்**

**விளக்கம்:**

- இந்தியாவில் பொது சுகாதாரத் திட்டத்தில் சிறந்த மற்றும் பிரதிபலன் சேவைகள், புதிய கண்டுபிடிப்புகள் குறித்த ஐந்தாவது தேசிய உச்சிமாநாடு, அக்டோபர் 30 அன்று அசாம் மாநிலம் காசிரங்காவில் தொடங்கியது. சுகாதாரத்துறையின் மேம்பாட்டிற்காக பல்வேறு மாநிலங்கள் & அமைப்புகளால் நடைமுறைப்படுத்தப்படும் சிறந்த நடைமுறைகள் மற்றும் கண்டுபிடிப்புகள் ஆகியவற்றை பகிர்வது மற்றும் கற்றுக்கொள்வதே இந்த 3 நாள் மாநாட்டின் நோக்கமாகும்.

67. நடப்பாண்டின் சங்காய் திருவிழாவை நடத்தவுள்ள மாநில அரசு எது?

**விடை: மணிப்பூர்**

**விளக்கம்:**

- நடப்பாண்டின் சங்காய் திருவிழாவை மணிப்பூர் அரசு வரும் நவ.21-30 வரை நடத்தவுள்ளது. இதனை மணிப்பூர் மாநில சுற்றுலாத்துறை ஏற்று நடத்துகிறது.

மணிப்பூரில் காணப்படும் சங்காய் மானின் நினைவாக சங்காய் திருவிழா என பெயரிடப்பட்டுள்ளது. இந்த மான் மணிப்பூர் மாநில அரசின் மாநில விலங்காகும்.

68. எந்த நகரத்தில், இந்தியாவின் முதலாவது 'நீதி நகரம் - Justice City' அமையவுள்ளது?

**விடை: அமராவதி**

**விளக்கம்:**

- உலகத்தரத்திலான இந்தியாவின் முதலாவது நீதி நகரத்தை ஆந்திர மாநில அரசு அதன் புதிய தலைநகரான அமராவதிக்குள் கட்டிவருகிறது. மாநிலத்தின் நீதித்துறை அமைப்புக்கு ஆதரவாக அண்மைய தொழில்நுட்பத்தில் கட்டப்பட்ட ஓர் அதிநவீன சூழலை வழங்குவதே இந்த நகரத்தின் நோக்கமாகும். இந்த நீதி நகரம் 3309 ஏக்கர் பரப்பளவில் ஓர் ஒருங்கிணைக்கப்பட்ட நீதித்துறை மையமாக இருக்கும்.

69. மகாராஷ்டிராவின் வர்தா மாவட்டத்தில் ஏற்பாடு செய்யப்பட்ட காந்திய சிந்தனை மற்றும் தூய்மை கருத்தரங்கை ஏற்பாடு செய்த மத்திய அமைச்சகம் எது?

**விடை: குடிநீர் மற்றும் துப்புரவு அமைச்சகம்**

**விளக்கம்:**

- அக்டோபர் 29 அன்று மகாராஷ்டிராவின் வர்தா மாவட்டத்தில் மத்திய குடிநீர் மற்றும் துப்புரவு அமைச்சகமானது காந்திய சிந்தனை மற்றும் தூய்மை கருத்தரங்கை ஏற்பாடு செய்திருந்தது. தேசத்தந்தையின் 150 ஆவது பிறந்த ஆண்டு கொண்டாட்டத்தின் ஒரு பகுதியாக இது உள்ளது. துப்புரவு பற்றிய காந்திய சிந்தனைகள் மற்றும் அதன் வழியே தூய்மை இந்தியா திட்டத்தை அமல்படுத்துதல் ஆகியவை இந்தக் கருத்தரங்கின் நோக்கமாக இருந்தது.

# உலக நிகழ்வுகள்

1. அண்மையில் உலக சுகாதார அமைப்பால் தொடங்கப்பட்ட அமைப்பு எது ?

**விடை: SAFER**

**விளக்கம்:**

- உலக சுகாதார அமைப்பு, அண்மையில் மதுவால் ஏற்படும் இறப்பு மற்றும் ஊனமுறுதலை தடுக்க மற்றும் குறைக்க 'SAFER' என்ற ஒரு புதிய மது கட்டுப்பாடு முயற்சியை தொடங்கியுள்ளது. தீங்கு விளைவிக்கும் மது மற்றும் அதனுடன் தொடர்புடைய சுகாதார, சமூக மற்றும் பொருளாதார விளைவவுகளை குறைக்க உதவும் 5 உயர்தாக்கங்களுடைய உத்திகளை இம்முயற்சி வழங்குகிறது. WHO தலைமையிலான முயற்சிகளும் நடவடிக்கககைகளும் 2025-ம் ஆண்டளவில் அபாயகரமான மது பயன்பாட்டை 10% என்ற அளவுக்கு குறைப்பதற்கான இலக்கை ஆதரிக்கின்றன.

2. கனடிய புற்றுநோய் சமூகத்தின் சமீபத்திய அறிக்கையின்படி, பேக்கட்டுகளில் எச்சரிக்கை வாசகங்களை அச்சடிக்கும் நாடுகளின் பட்டியலில், எந்தெந்த நாடுகளுடன் இணைந்து இந்தியா ஐந்தாவது இடத்தை பகிர்ந்துள்ளது?

**விடை: ஹாங்காங் மற்றும் தாய்லாந்து**

**விளக்கம்:**

- கனடிய புற்றுநோய் சமூகத்தின் சமீபத்திய அறிக்கையின்படி, புகைபிடிப்பதால் உடல் நலத்திற்கு ஏற்படும் தீங்கு குறித்த எச்சரிக்கை வாசகங்களை சிகரெட் பேக்கட்டுகளில் அச்சடிக்கும் நாடுகளின் பட்டியலில், சிகரெட் பேக்கட்டுகளின் இரு பக்கங்களிலும் 85% அளவுக்கு எச்சரிக்கை வாசகங்களைக்கொண்ட ஹாங்காங், தாய்லாந்து ஆகிய நாடுகளுடன் 5-வது இடத்தை இந்தியா பகிர்ந்துகொண்டுள்ளது.

3. எந்நாட்டில், "IBSAMAR 2018" என்ற சர்வதேச கூட்டு கடற்படைப் பயிற்சி தொடங்கியுள்ளது?

**விடை: தென்னாப்பிரிக்கா**

**விளக்கம்:**

- இந்திய, பிரேசிலிய மற்றும் தென்னாப்பிரிக்க கடற்படைகள் இடையேயான "IBSAMAR 2018" என்ற பன்னாட்டு கூட்டு கடற்படைப் பயிற்சியின் 6 ஆவது பதிப்பு அக்.1 அன்று தென்னாப்பிரிக்காவின் சைமன் நகரத்தில் தொடங்கியது. கடற்படைகளிடையே ஒத்துழைப்பு மற்றும் பரஸ்பர புரிதல் மற்றும் சிறந்த நடைமுறைகளை பகிர்ந்து கொள்வதற்கான கூட்டுப் பயிற்சியை மேற்கொள்வதே 13 நாள் நடைபெறும் இந்தப்பயிற்சியின் நோக்கமாகும்.
- இந்திக் கடற்படையின் சார்பாக தர்காஷ் பீரங்கி ஏவுகனை, கொல்கத்த அழிகலன், P8I ரோந்துப் போர் விமானம், கடலரசன் மற்றும் சேதக் உலங்குவானூர்திகள் மற்றும் MARCOS படைப்பிரிவு ஆகியவை இதில் பங்கேற்றுள்ளன.

4. உலகின் மிகப்பெரிய குவிமாடம் சமீபத்தில் எந்த நாட்டில் திறந்து வைக்கப்பட்டது?

**விடை: இந்தியா**

**விளக்கம்:**

- மகாத்மா காந்தியின் 149 ஆவது பிறந்தநாள் விழாவில் குடியரசு துணைத்தலைவர் வெங்கையா நாயுடு, புனேவின் லோனி கல்போரில் உள்ள மகாராஷ்டிரா தொழில்நுட்ப நிறுவன வளாகத்தின் உலக அமைதி பல்கலையில் (MIT – WPU) உலகின் மிகப்பெரிய குவிமாடத்தை திறந்துவைத்தார். இக்குவிமாடம் 160 அடி விட்டமும், 263 அடி உயரமும் உடையது. பரப்பளவில் இது வாட்டிக்கான் நகரத்தில் உள்ள புனித பீட்டர் பேராயலயத்தின் குவிமாடத்தை (Dome) விடவும் (விட்டம் 136 அடி மற்றும் உயரம் 448 அடி) பெரியதாகும்.

5. 'Sahyog HOP TAC – 2018' என்பது இந்தியாவிற்கும் எந்த நாட்டிற்கும் இடையே நடைபெறும் பயிற்சியாகும்?

**விடை: வியட்நாம்**

**விளக்கம்:**

- அக்.4 அன்று, 'Sahyog HOP TAC - 2018' என்ற இந்திய – வியட்நாம் கடலோர காவல்படை கூட்டு பயிற்சியானது, வங்கக் கடலில் இருநாட்டு கடலோரக் காவல்படை இடையே நடைபெற்றது. இதில் வியட்நாம் நாட்டின் கடலோரக் காவல்படை ரோந்துக் கப்பலான CSB 8001 உடன் இந்திய கடலோரக் காவல் படையின் சௌர்யா, அர்னேவேஷ், C-431 ஆகிய 3 ரோந்துக் கப்பல்கள், ஒரு சேதக் உலங்கூர்தி, ஒரு டோர்னியர் ரோந்து விமானம், கடல்சார் தொழில்நுட்ப நிலையத்தின் சாகர் மன்ஜூஷா என்ற கப்பல் உள்ளிட்டவை பங்கேற்றன.

6. விசா'வின் 2018 – மின்னணு முறையிலான கட்டணம் செலுத்துதலை அரசாங்கம் ஏற்றுக் கொள்ளும் தரவரிசையில் (GEAR), இந்தியாவில் தரநிலை என்ன?

**விடை: 28 ஆவது**

**விளக்கம்:**

- விசா'வின் 2018 – மின்னணு முறையிலான கட்டணம் செலுத்துதலை அரசு ஏற்றுக்கொள்ளும் தரவரிசையில் (Government e-Payment Adoption Ranking – GEAR), 73 நாடுகளில் இந்தியா 28 ஆவது இடத்தில் உள்ளது. 2018 GEAR என்பது பொருளாதார அறிஞர்கள் நுண்ணறிவு அலகின் சர்வதேசத் தரவரிசையும், விசா'வால் நியமிக்கப்பட்ட திறனளவிடல் ஆய்வுமாகும்.

7. ஐ.நா. ஆயுதக் குறைப்பு மாநாட்டில் கலந்து கொள்ளும் இந்திய தூதர் யார்?

**விடை: பங்கஜ் சர்மா**

**விளக்கம்:**

- ஜெனிவாவில் நடைபெறவுள்ள ஐ.நா. ஆயுதக் குறைப்பு மாநாட்டிற்கான இந்தியத் தூதராகவும், நிரந்தர பிரதிநிதியாகவும் பங்கஜ் சர்மா நியமிக்கப்பட்டுள்ளார். வெளியுறவு அமைச்சகத்தின் கூட்டு செயலாளராக (ஆயுதக் குறைப்பு மற்றும் சர்வதேச பாதுகாப்பு பிரிவு) தற்பொழுது சர்மா உள்ளார். இவருக்கு முன், அமந்தீப் கில் இப்பதவியில் இருந்தார்.

8. 'ISSA GOOD Practice விருது, ஆசியா & தி பசிபிக் - 2018' வென்ற இந்திய நிறுவனம் எது?

**விடை: ESIC**

**விளக்கம்:**

- அண்மையில் மலேசியாவின் கோலாலம்பூரில் நடந்த ஆசியா மற்றும் பசிபிக்கிற்கான பிராந்திய சமூக பாதுகாப்பு மன்றத்தில், பணியாளர்களுக்கான அரசு காப்பீட்டு நிறுவனம் (ESIC) விரிவான காப்பீட்டு நிர்வாக தீர்வுக்காக "ISSA GOOD Practice, ஆசியா மற்றும் தி பசிபிக் - 2018" விருதை வென்றது. ESIC'ன் SPREE (முதலாளி மற்றும் பணியாளர்களின் பதிவுகளை ஊக்குவிப்பதற்கான திட்டம்) விரிவாக்கத்திற்கான நடவடிக்கைகளை இவ்விருது அங்கீகரிக்கிறது.

9. "மருந்துப் பொருட்களை அணுகுவது பற்றிய இரண்டாவது உலக மாநாடு – பேணுவதற்கான வளர்ச்சி இலக்குகள் 2030"ஐ எந்த அமைப்புடன் இணைந்து இந்திய அரசு நடத்தியுள்ளது?

**விடை: WHO**

**விளக்கம்:**

- உலக சுகாதார அமைப்பின் (WHO) ஆதரவுடன் மத்திய சுகாதார மற்றும் குடும்பநல அமைச்சகம் அக்.9 முதல் 11 வரை புது தில்லியில், "மருந்துப் பொருட்களை அணுகுவது – பேணுவதற்கான வளர்ச்சி இலக்குகள் 2030" பற்றிய இரண்டாவது உலக மாநாட்டை நடத்தியது. நிகழாண்டில் நடந்த இரண்டாம் உலக மாநாட்டின் முக்கிய நோக்கம், 2017ம் ஆண்டில் நடந்த முதலாவது உலக மாநாட்டின் பரிந்துரைகளை முன்னெடுப்பதாகும்.
- நீடித்த வளர்ச்சி இலக்குகளின் (வர்த்தக ஒப்பந்தங்கள் உட்பட) சூழலில் மருந்துப் பொருட்களை அணுகுவதற்காக செய்யப்படும் பணிகளை உருவாக்குதல், மருத்துவ தயாரிப்புகளுக்கான கண்டுபிடிப்பு தளங்களில் புதிய அணுகுமுறைகளை வளர்த்தெடுத்தல் மற்றும் சர்வதேச வர்த்தக மற்றும் சுகாதாரத்தின் ஊடாக தகவல் மற்றும் கொள்கை இலக்குகளை 2030ம் ஆண்டளவில் அடைவதும் இதன் நோக்கங்களாகும்.

10. நிகழாண்டின் ஹென்லே கடவுச்சீட்டு தரவரிசையில் இந்தியாவின் தரநிலை என்ன?

**விடை: 81 ஆவது**

**விளக்கம்:**

- சர்வதேச வான் போக்குவரத்து சங்கத்துடன் இணைந்து "Henley" என்ற அமைப்பு வெளியிட்டுள்ள நிகழாண்டின் 'கடவுச்சீட்டு தரவரிசை'யில், ஜப்பான் முதலிடம் பிடித்துள்ளது. ஜப்பான் கடவுச்சீட்டு வைத்திருப்போர் 190 நாடுகளுக்கு நுழைவாணை (Visa) இன்றியும் அல்லது வருகையின்போது நுழைவாணை பெற்றுக் கொண்டால் போதும். நுழைவாணை இல்லாமல் பிற நாடுகளுக்குச் செல்லும் அனுமதியை வழங்குவதின் அடிப்படையில் இத்தரவரிசை தயார் செய்யப்பட்டுள்ளது.
- 189 நாடுகளுக்கு நுழைவாணை இன்றி அல்லது வருகையின் போது நுழைவாணை பெற அனுமதிக்கும் சிங்கப்பூர் கடவுச்சீட்டு இரண்டாமிடத்தை பெற்றுள்ளது.

11. எந்த நாட்டின் ஆராய்ச்சியாளர்கள், உலகின் முதல் உயிரி – மின்னணு (Bio – electronic) மருந்துகளை உருவாக்கியுள்ளனர்?

**விடை: அமெரிக்கா**

**விளக்கம்:**

- அமெரிக்காவின் வாசிங்டன் பல்கலைக்கழகத்தின் ஆராய்ச்சியாளர்கள், உலகின் முதல் உயிரி - மின்னணு மருந்துகளை உருவாக்கியுள்ளனர். நரம்பு மீளுருவாக்கத்தை விரைவுபடுத்தும் மற்றும் சேதமடைந்த நரம்பை குணப்படுத்துவதை மேம்படுத்தும் இது ஓர் உட்பொருத்தத்தக்க, மக்கி அழியும் கம்பியில்லா சாதனமாகும். நேச்சர் மெடிசின் பத்திரிக்கையில் வெளியிடப்பட்ட ஆய்வின் படி, ஒரு நாணயத்தின் அளவே உள்ள இந்தச் சாதனத்தின் தடிமன் ஒரு தாளின் அளவே உள்ளது.

12. 2018 ஆக்ஸ்ஃபாம் உலக சமத்துவமின்மை தரவரிசையில், இந்தியாவின் தரநிலை என்ன?

**விடை: 147 ஆவது**

**விளக்கம்:**

- UK-வைச் சேர்ந்த ஆக்ஸ்.ஃபாம் என்ற தொண்டு நிறுவனம் வெளியிட்டுள்ள ''சமூகத்தில் நிலவும் சமத்துவமின்மையை குறைக்க முற்படும் நாடுகள்'' பட்டியலில், 157 நாடுகளுள், இந்தியா கடைசியிலிருந்து பத்தாவது இடமான 147 ஆவது இடத்தைப் பிடித்துள்ளது. தென் கொரியா, நமிபியா, உருகுவே ஆகிய நாடுகள் சமத்துவமின்மையைக் குறைக்க வலுவான நடவடிக்கைகள் எடுத்து வருவதாகவும் இந்தியா, நைஜீரியா போன்ற நாடுகள் சமத்துவமின்மையைக் குறைக்க மிக மோசமான நடவடிக்கைகள் எடுத்து வருவதாகவும் இந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

13. ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பு கூட்டத்தின் 17வது CHG நடைபெற்ற இடம் எது?

**விடை: துசான்பே**

**விளக்கம்:**

- 17ஆவது ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பில் (SCO) அங்கம் வகிக்கும் நாடுகளின் தலைவர்கள் பங்கேற்ற இரண்டு நாள் கவுன்சில் கூட்டம், அக்.11-12 ஆகிய தேதிகளில் தஜிகிஸ்தானில் உள்ள துசான்பேவில் நடைபெற்றது. இதில், இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் சுஷ்மா சுவராஜ் பங்கேற்றார். இது SCO உறுப்புநாடுகள் மற்றும் பார்வையாளர்களான ஆப்கானிஸ்தான், ஈரான், பெலாரசு & மங்கோலியா ஆகிய நாடுகளுடன் பேச்சுவார்த்தை நடத்த இந்தியாவுக்கு உதவுகிறது.
- இவ்வமைப்பின் தலைவராக கிர்கிஸ்தான் பொறுப்பேற்ற பிறகு நடைபெறும் முதல் கூட்டம் இது.

14. அண்மையில் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையகத்தின் (UNHRC) உறுப்பினராக இந்தியா மீண்டும் தேர்வாகியுள்ளது. UNHRC'ன் தலைமையகம் எங்கு அமைந்துள்ளது?

**விடை: ஜெனீவா**

**விளக்கம்:**

- ஐ.நா. மனித உரிமைகள் ஆணையத்தின் ஐந்து மண்டலங்களாக பிரிக்கப்பட்டுள்ள 18 உறுப்பு நாடுகளில் ஒன்றாக 188 நாடுகளின் ஆதரவுடன் இந்தியா மீண்டும் அதன் உறுப்பினராகியுள்ளது. ஐ.நா. மனித உரிமைகள் ஆணையத்தில் 2019 ஜனவரி தொடங்கி 2021 டிசம்பர் இறுதி வரை, அதாவது மூன்றாண்டுகள் வரை இந்தியா உறுப்பு நாடாக இருக்கும்.
- இந்தியாவை தொடர்ந்து ∴பிஜி (187), வங்கதேசம் (178), பஹ்ரைன் மற்றும் பிலிப்பைன்ஸ் (165) ஆகிய நாடுகள் உள்ளன. UNHRC'ன் தலைமையகம் ஜெனீவாவில் உள்ளது. உலகில் நடக்கும் மனித உரிமை மீறல்கள் குறித்து நடவடிக்கை எடுப்பதற்காக இது உருவாக்கப்பட்டது.

15. உலக வங்கி அதன் முதலாவது மனிதகுல மூலதன குறியீட்டில் (Human Capital Index) இந்தியாவை எந்த இடத்தில் வைத்துள்ளது?

**விடை: 115 ஆவது**

**விளக்கம்:**

- உலக வங்கி அண்மையில் அதன் முதலாவது மனிதகுல மூலதன குறியீட்டை வெளியிட்டது. இது குழந்தை இறப்பு, சுகாதாரம் மற்றும் கல்வி போன்ற அளவுருக்கள் மீது 157 பொருளாதாரங்களை மதிப்பிட்டது. இதில் இந்தியா 0.44 மதிப்பெண் பெற்று 115 ஆவது இடத்தைப் பிடித்துள்ளது. இது தெற்காசியாவிற்கான சராசரியையும் விடக் குறைவானது என்ற தகவல் வெளியிடப்பட்டுள்ளது. எனினும், உலக வங்கியின் இந்தக் குறியீட்டை புறக்கணிப்பதாக இந்திய அரசு தெரிவித்துள்ளது.
- இந்தியாவின் அண்டை நாடுகளான வங்கதேசம், நேபாளம் மற்றும் இலங்கை ஆகியவை முறையே 106, 102 மற்றும் 75 ஆவது என்ற சிறப்பான இடங்களைப் பெற்றுள்ளன. சிங்கப்பூர் அதன் உலகளாவிய சுகாதார அமைப்பு, கல்வி, தேர்வுகள், முடிவுகள் மற்றும் ஆயுட்கால எதிர்பார்ப்பு புள்ளிவிவரங்கள் ஆகியவற்றின் மதிப்பிடலுக்குப் பின்னர் முதலிடம் பிடித்தது.

16. 2018 உலகளாவிய பசி அட்டவணையில் இந்தியாவின் தரநிலை என்ன?

**விடை: 103 ஆவது**

**விளக்கம்:**

- 2018 உலகளாவிய பசி அட்டவணையில் (Global Hunger Index) 119 நாடுகளில் இந்தியா 103 ஆவது இடத்தில் உள்ளது. நிகழாண்டின் அறிக்கை, உலகளாவிய அரசு சாரா அமைப்புகளான ‘Concern Worldwide’ (அயர்லாந்து) மற்றும் ‘Welthungerhlife’ (ஜெர்மனி) ஆகியவற்றால் இணைந்து தயாரிக்கப்பட்டுள்ளது. 2000ம் ஆண்டில் 29.2 என்ற அளவில் இருந்த மதிப்பு, 20.9 என்ற அளவுக்கு வந்துள்ளது. இம்மதிப்பு உலகளவில் பசியின்மை மற்றும் ஊட்டச்சத்து குறைபாடு ஆகியவை தீவிர வகைக்குள் உள்ளதென சுட்டிக்காட்டுகிறது.

17. ஆப்கானிஸ்தானின் தூதரக அதிகாரிகளுக்கு பயிற்சியளிப்பதற்காக, இந்தியாவும் எந்த நாடும் இணைந்து அதன் முதலாவது கூட்டுத் திட்டத்தை தொடங்கியுள்ளன?

**விடை: சீனா**

**விளக்கம்:**

- இந்தியா, சீனா மற்றும் ஆப்கானிஸ்தானுக்கு இடையேயான முத்தரப்பு ஒப்பந்தத்தின் கீழ் அக்.15 முதல் 26ம் தேதி வரை ஆப்கானிஸ்தானின் தூதரக அதிகாரிகளுக்கு பயிற்சியளிப்பதற்காக, இந்தியாவும், சீனாவும் இணைந்து அதன் முதலாவது கூட்டுத்திட்டத்தை தொடங்கியுள்ளன.
- சீனாவின் வூகன் நகரில் கடந்த ஏப்ரல் மாதம் பிரதமர் மோடி மற்றும் சீன அதிபர் ஜீ ஜின்பிங்குக்கு இடையே நடந்த ஒரு முறைசாரா உச்சிமாநாட்டின் போது இதுபோன்ற ஒத்துழைப்புக்கான ஒப்பந்தம் ஏற்பட்டுள்ளது. போரால் பாதிக்கபட்டிருக்கும் ஆப்கானிஸ்தானில் மாற்றங்கள் ஏற்படுத்தவும், தலிபான் அரசுகளை அகற்றி அமைதியை நிலைநாட்டவும் இந்தத் திட்டம் உதவும்.

18. ஆறாவது RCEP அமைச்சரவை சந்திப்பில் பங்கேற்ற இந்திய குழுவின் தலைவர் யார்?

**விடை: C R சௌத்ரி**

**விளக்கம்:**

- ஆறாவது RCEP அமைச்சரவை சந்திப்பு, அக்.12-13 ஆகிய தேதிகளில் சிங்கப்பூரில் நடைபெற்றது. 16 RCEP நாடுகளின் அமைச்சர்களும் ASEAN மற்றும் ASEAN'ன் FTA பங்காளர்களிடையே நவீன, விரிவான மற்றும் பரஸ்பர நன்மை வாய்ந்த பொருளாதார கூட்டு ஒப்பந்தம் பற்றி விவாதித்தனர். இதில் பங்கேற்ற இந்திய குழுவுக்கு, மத்திய வர்த்தகம் மற்றும் தொழிற்துறை மற்றும் நுகர்வோர் விவகாரங்கள், உணவு மற்றும் பொது விநியோகத்துறை இணையமைச்சர் C R சௌத்ரி தலைமை தாங்கினார்.
- RCEP என்பது பிராந்திய விரிவான பொருளாதார ஒத்துழைப்பு (Regional Comprehensive Economic Partnership) கூட்டணியாகும். இது 10 ASEAN குழு உறுப்பினர்களையும் (புரூணை, கம்போடியா, மலேசியா, இந்தோனேசியா, மியான்மர், சிங்கப்பூர், தாய்லாந்து, ஃபிலிப்பைன்ஸ், லாவோஸ் மற்றும் வியட்நாம்) மற்றும் அதன் 6 சுதந்திர வர்த்தக உடன்படிக்கை பங்காளர்களான இந்தியா, சீனா, ஜப்பான், தென்கொரியா, ஆஸி., மற்றும் நியூசிலாந்து ஆகிய நாடுகளையும் கொண்டுள்ளது.

19. அண்மையில் இந்தியாவின் எந்த ஆண்டை நாட்டில் ஃபூல்பத்தீ (Fulpati) திருவிழா கொண்டாடப்பட்டது?

**விடை: நேபாளம்**

**விளக்கம்:**

- அண்மைக்காலமாக நேபாளத்தின் பல பகுதிகளில் 'ஃபூல்பத்தீ' திருவிழா கொண்டாடப்பட்டது. தஷைன் விழாவின் 7 ஆவது நாளில் 'ஃபூல்பத்தீ' அனுசரிக்கப்படுகிறது. நேபாளியில், 'ஃபூல்' என்பது மலரையும், 'பத்தீ' என்பது இலைகள் மற்றும் தாவரங்களையும் குறிக்கும்.

20. 12 ஆவது ஆசிய ஐரோப்பா உச்சிமாநாட்டின் (ASEM) கருப்பொருள் என்ன?

**விடை: Global Partners for Global Challenges**

**விளக்கம்:**

- 12 ஆவது ஆசிய – ஐரொப்பிய உச்சிமாநாடு அக்.18 அன்று பெல்ஜியம் தலைநகர் பிரசல்சில் ‘உலக சவால்களை எதிர்கொள்ள உலக பங்களிப்பாளர்கள்’ என்ற கருப்பொருளில் தொடங்கியது. இந்த இரண்டு நாள் மாநாட்டில் பங்கேற்கும் இந்தியப் பிரதிநிதிகள் குழுவிற்குத் தலைமையேற்கிறார் குடியரசுத் துணைத்தலைவர் வெங்கையா நாயுடு.

21. நடப்பாண்டிற்கான WEF’ன சர்வதேச போட்டித்திறன் குறியீட்டில் (Global Competitiveness Index) இந்தியாவின் தரநிலை என்ன?

**விடை: 58 ஆவது**

**விளக்கம்:**

- நடப்பாண்டிற்கான WEF’ன் சர்வதேச போட்டித்திறன் குறியீட்டில் 62.0 மதிப்பெண்ணுடன் இந்தியா 58ஆவது இடத்தில் உள்ளது. மொத்தமுள்ள 140 நாடுகளின் பட்டியலில், முதலிடத்தில் அமெரிக்கா உள்ளது. அதைத் தொடர்ந்து சிங்கப்பூர் மற்றும் ஜெர்மனி இரண்டாவது, 3 ஆவது இடத்தைப் பெற்றுள்ளது. G20 பொருளாதார மாநாட்டிற்கு பிறகு, இந்தியாவின் தரநிலை 2017 ஆம் ஆண்டை விட 5 இடம் உயர்ந்துள்ளது.

22. மரிஜுவானா பயன்பாட்டை சட்டப்பூர்வமாக்கியுள்ள G7 நாடு எது?

**விடை: கனடா**

**விளக்கம்:**

- உருகுவேக்கு அடுத்ததாக நாடு முழுவதும் மரிஜுவானா பயன்படுத்த சட்டப்பூர்வ அனுமதி அளித்து கனடா அரசு சட்டம் இயற்றியுள்ளது. கன்னாபிஸ் சட்டம் (அல்லது சி.45 சட்டம்) அக்டேபர் 17 அன்று அமலுக்கு வந்தது. இந்தப் புதிய சட்டம், கனடாவில் மரிஜுவானாவை வளர்க்கவும், கேளிக்கை விடுதிகளில் முறையான அனுமதியுடன் மரிஜுவானாவை விற்பனை செய்யவும், சில கட்டுப்பாட்டுகளுடன் கஞ்சாவை பயன்படுத்தவும் வழிவகை செய்கிறது.

23. ஆசியானுக்கும், எந்த நாட்டிற்கும் இடையே முதலாவது கூட்டு கடற்சார் பயிற்சிகள் நடத்தப்படவுள்ளது?

**விடை: சீனா**

**விளக்கம்:**

- சர்ச்சைக்குரிய பகுதிகளில் பதட்டங்களை குறைக்கும் ஒரு முயற்சியாக, சாஜியாங்கின் அருகே தென் சீனக்கடல் பகுதியில் ASEAN மற்றும் சீனாவிற்கும் இடையேயான முதலாவது கடல்சார் பயிற்சிகள் நடத்தப்படவுள்ளன. ASEAN மற்றும் சீன கடற்படைகள் CUES (Code for Unplanned Encounters at Sea) பயன்படுத்தி ஒன்றாக இணைந்து செயல்பட இந்தப் பயிற்சிகள் மிகவும் நல்ல வாய்ப்புகளை வழங்கும்.

24. பூட்டானில் புதிய அரசமைக்கவுள்ள தேசிய கட்சி எது?

**விடை: டிரக் நியாம்ரப் சோகாபா**

**விளக்கம்:**

- 47 இருக்கைகள் கொண்ட நாடாளுமன்றத்தின் கீழவையான தேசிய அவையில் 30 இடங்களை வென்றதையடுத்து, டிரக் நியாம்ரப் சோகாபா கட்சி (Druk Nyamrup Tshogpa – DNT) பூட்டானில் புதிய அரசை அமைக்கவுள்ளது. மீதமுள்ள 17 இருக்கைகளை டிரக் பியூன்சம் சோகாபா கட்சி வென்றுள்ளது. பூட்டானின் பத்தாண்டுகால நாடாளுமன்ற குடியரசில் முதன்முறையாக ஒரு புதிய கட்சி அரசமைப்பதற்காக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.

25. ஜப்பான் உயிரியலாளர் ஒசாமு சிமுமோரா அண்மையில் காலமானார். எதனை கண்டறிந்தற்காக 2008ம் ஆண்டில் வேதியியலுக்கான நோபல் பரிசை அவர் வென்றார்?

**விடை: பசுமை ஒளிரும் புரதம்**

**விளக்கம்:**

- பசுமை ஒளிரும் புரதத்தை கண்டறிந்தமைக்காக 2008ம் ஆண்டில் வேதியியலுக்கான நோபல் பரிசை வென்ற ஜப்பானிய கடல்சார் உயிரியலாளர் ஒசாமு சிமுமோரா (90), அக்.19 அன்று நாகசாகியல் காலமானார்.



We Shine Academy™

26. எந்த நாடு, உலகின் மிக நீண்ட கடல்பாலத்தை திறந்துள்ளது?

**விடை: சீனா**

**விளக்கம்:**

- உலகின் மிக நீண்ட கடல் பாலத்தை சீனா அதிகாரப்பூர்வமாக திறந்துள்ளது. இது சீனத்தின் சூஹாய் நகரத்தையும் ஹாங்காங்கின் மக்கா நகரத்தையும் இணைக்கிறது. சீன உற்பத்தித் துறையின் மையமான பேர்ல் ஆற்றின் கழிமுகம் வழியாக கப்பல்கள் கடந்து செல்வதற்கு வசதியாக கடலுக்கடியில் ஒரு சுரங்கப்பாதையையும் இந்தப் பாலம் கொண்டுள்ளது.
- 34 மைல் நீளங்கொண்ட இப்பாலம், சீனப்பெரு நிலத்தையும், பிரிட்டனின் காலனி ஆதிக்கத்தின் கீழிருந்து 1997இல் மீண்டும் சீனாவிடம் ஒப்படைக்கப்பட்ட ஹாங்காங்கையும் இணைக்கிறது. இப்பாலம் பயன்பாட்டிற்கு வருவதன் மூலமாக சீனா - ஹாங்காங் இடையேயான பயணநேரம், 4 மணியிலிருந்து 30 நிமிடங்களாக குறையும். 'கிரேட்டர் வளைகுடா' என்ற அழைக்கப்படும் இந்த பிராந்தியத்திற்கான சீன வளர்ச்சித் திட்டத்தின் ஒரு பகுதியாக இந்தப் பாலம் கருதப்படுகிறது.

27. 2018 காமரூனிய அதிபர் தேர்தலில் வென்றவர் யார்?

**விடை: பால் பியா (Paul Biya)**

**விளக்கம்:**

- அண்மையில் ஆப்பிரிக்க நாடுகளுள் ஒன்றான காமரூன் நாட்டில் நடந்த அதிபர் தேர்தலில், பால் பியா (85) 71.3% வாக்குகளை பெற்றார். இவரை எதிர்த்து போட்டியிட்ட எதிர்கட்சி வேட்பாளர் கம்டோ வெறும் 14% வாக்குகளை மட்டும் பெற்று தோல்வியடைந்தார். இதன் மூலம் தொடர்ந்து 7ஆவது முறையாக பால் பியா கேமரூன் நாட்டின் அதிபராக பதவியேற்க உள்ளார்.

28. 2018 WETEX (நீர் (Water), ஆற்றல் (Energy), தொழில்நுட்பம் (Technology) மற்றும் சுற்றுச்சூழல் கண்காட்சி (Environment Exhibition)) நடைபெறும் நகரம் எது?

**விடை: துபாய்**

**விளக்கம்:**

- 2018 WETEX (நீர் (Water), ஆற்றல் (Energy), தொழில்நுட்பம் (Technology) மற்றும் சுற்றுச்சூழல் கண்காட்சி (Environment Exhibition)) அக்.23 அன்று துபாயில் உள்ள துபாய் சர்வதேச மாநாடு மற்றும் கண்காட்சி மையத்தில் தொடங்கியது. இது மத்திய கிழக்கு மற்றும் வடக்கு ஆப்பிரிக்கா பிராந்தியத்தில் முன்னணி நீடிப்புத்திறன் கண்காட்சிகளில் ஒன்றாக கருதப்படுகிறது.

29. எந்த இரு நாடுகளுக்கிடையே 'Druzhba - III' தொடங்கியுள்ளது?

**விடை: ரஷ்யா மற்றும் பாகிஸ்தான்**

**விளக்கம்:**

- ரஷ்யா மற்றும் பாகிஸ்தானின் ராணுவ வீரர்கள் இணைந்து மூன்றாவது முறையாக 'Druzhba (நட்பு) - III' என்ற கூட்டுப் போர் பயிற்சியை தொடங்கியுள்ளனர். பாகிஸ்தானின் வடமேற்கு பகுதியல் நடைபெறும் இப்பயிற்சி வரும் நவ.4 வரை நடைபெறும். இப்பயிற்சி கடல்மட்டத்தில் இருந்து 1400 மீ., உயரத்தில் உள்ள இடத்தில் நடக்கவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

30. சாபகார் துறைமுகத் திட்டத்தின் முதல் முத்தரப்பு கூட்டத்தை நடத்திய நாடுகள் எவை?

**விடை: இந்தியா, ஆப்கானிஸ்தான் மற்றும் ஈரான்**

**விளக்கம்:**

- சாபகார் ஒப்பந்தத்தின் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் இந்தியா, ஆப்கானிஸ்தான், ஈரான், இடையே தெஹ்ரானில் நடந்தது. இந்தியத் தரப்புக்கு, பொருளாதார உறவுகள் துறை செயலாளர் TS திருமூர்த்தி தலைமையேற்றிருந்தார். ஆப்கானிஸ்தான் மற்றும் ஈரான் குழுவினருக்கு அந்த நாடுகளின் துணை போக்குவரத்து அமைச்சர்கள் தலைமையேற்றிருந்தனர்.

31. உள்நாட்டு மற்றும் கடற்கரையோர நீர்வழிப் போக்குவரத்து இணைப்புகளை மேம்படுத்துவதற்கான ஒப்பந்தத்தில், இந்தியாவும் அதன் எந்த அண்டைநாடும் அண்மையில் கையெழுத்திட்டுள்ளன?

**விடை: வங்கதேசம்**

**விளக்கம்:**

- இந்தியா மற்றும் வங்கதேசம் ஆகிய இருநாடுகளும் அண்மையில், வர்த்தகம் மற்றும் கப்பல் போக்குவரத்துக்காக இருநாடுகளுக்கும் இடையே உள்ள உள்நாட்டு மற்றும் கடற்கரையோர நீர்வழிப் போக்குவரத்து இணைப்புகளை மேம்படுத்துவதற்கான பல்வேறு ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டன. இந்தியாவிற்கு சரக்குகளை அனுப்பவும், இந்தியாவிலிருந்து சரக்குகளை பெற்றுக் கொள்ளவும், வங்கதேசத்தில் உள்ள சட்டோகிராம் மற்றும் மோங்லா துறைமுகங்களைப் பயன்படுத்துவதற்கான ஒப்பந்தத்தில் இருநாடுகளும் கையெழுத்திட்டுள்ளன.

32. இந்தியா மற்றும் எந்த நாட்டிற்கும் இடையே நிதிசார்ந்த தொழில்நுட்ப ஒத்துழைப்பு இணை பணிக்குழு அமைப்பது தொடர்பான புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது?

**விடை: சிங்கப்பூர்**

**விளக்கம்:**

- இந்தியா – சிங்கப்பூர் இடையே நிதிசார்ந்த தொழில்நுட்ப ஒத்துழைப்பு இணை பணிக்குழு அமைப்பது தொடர்பாக நடப்பாண்டு ஜூன் மாதம் கையெழுத்தான புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்கு பிரதமர் மோடி தலைமையிலான மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

33. ‘Lonely Planet’ நிறுவனத்தின் 2019ம் ஆண்டில் சுற்றுலா செல்ல சிறந்த இடங்களுக்கான பட்டியலில், சிறந்த நாடாக அறிவிக்கப்பட்டுள்ள நாடு எது?

**விடை: இலங்கை**

**விளக்கம்:**

- ‘Lonely Planet’ நிறுவனத்தின் 2019ம் ஆண்டில் சுற்றுலா செல்ல சிறந்த இடங்களுக்கான பட்டியலில், சிறந்த நாடாக இலங்கை அறிவிக்கப்பட்டுள்ளது.

ஜெர்மனி இரண்டாவது இடத்தைப் பிடித்துள்ளது. அதைத் தொடர்ந்து ஜிம்பாப்வே, பனாமா, கிர்கிஸ்தான் மற்றும் ஜோர்டான் ஆகிய நாடுகள் உள்ளன.

34. அயர்லாந்தின் புதிய அதிபர் யார்?

விடை: மைக்கேல் D ஹக்கின்ஸ் (Michael D Higgins)

**விளக்கம்:**

- நடந்த முடிந்த அயர்லாந்து அதிபர் தேர்தலில் 56% வாக்குகளைப் பெற்ற மைக்கேல் D ஹக்கின்ஸ் அயர்லாந்தின் அதிபராக மீண்டும் தோந்தெடுக்கப்பட்டுள்ளார். 2011ம் ஆண்டு நவம்ர் முதல் அவர் அதிபர் பதவியில் இருந்து வருகிறார். அவரது 2ஆவது பதவியேற்பு விழா 2018ம் ஆண்டு நவம்பர் 11ம் தேதி நடைபெறவுள்ளது.

35. பெண் கல்வி மேம்பாட்டுக்காக ஹார்வர்டு பல்கலையால் கௌரவிக்கப்படவுள்ள நோபல் பரிசாளர் யார்?

**விடை: மலாலா யூசஃப்சாய்**

**விளக்கம்:**

- பெண்கல்வியை ஊக்குவிப்பதில் அளப்பரிய சாதனைகளை மேற்கொண்டுவரும் நோபல் பரிசு வென்ற மலாலா யூசப்சாய்க்கு, ஹார்வர்டு பல்கலைக்கழகம் 2018ம் ஆண்டுக்கான 'Gleitsman' விருது வழங்கி கௌரவிக்கவுள்ளது. வரும் டிச.6 அன்று அவருக்கு இந்த விருது வழங்கப்படும்.
- 2014ம் ஆண்டு நோபல் பரிசு பெற்ற மலாலா, அவ்விருதைப் பெற்ற இளம் வயதுடையவராவார். தற்போது மலாலா, இங்கிலாந்தின் ஆக்ஸ்ஃபோர்டு பல்கலையில் படித்துவருகிறார். இந்த விருது $ 125000 அமெரிக்க டாலரை உள்ளடக்கியது என்பது குறிப்பிடத்தக்கது.

36. எந்த நகரத்தில், ஒரே கூரையின் கீழ் இயங்கும் உலகின் மிகப்பெரிய விமான நிலையம் திறக்கப்பட்டுள்ளது?

**விடை: இஸ்தான்புல்**

**விளக்கம்:**

- ஒரே கூரையின் கீழியங்கும் உலகின் மிகப்பெரிய விமான நிலைய முனையமானது துருக்கியில் இஸ்தான்புல்லில் அந்நாட்டின் குடியரசு தினமான அக்.29 அன்று திறக்கப்பட்டது. கட்டம் 1A என அழைக்கப்படும் இந்த இஸ்தான்புல் புதிய விமான நிலையத் திட்டம், ஆண்டுக்கு 90 மில்லியன் பயணிகளை கையாளக்கூடிய திறன் கொண்டதாகும். € 7.5 பில்லியன் யூரோவில் இந்த விமானம் நிலையம் உருவாக்கப்பட்டுள்ளது.

37. 25ஆவது DST – CII தொழில்நுட்ப உச்சிமாநாட்டின் பங்குதாரர் நாடு எது?

**விடை: நெதர்லாந்து**

**விளக்கம்:**

- 25ஆவது DST – CII தொழில்நுட்ப உச்சிமாநாட்டின் பங்குதாரர் நாடாக நெதர்லாந்து இருக்கும். அண்மையில் இதனை, அறிவியல் மற்றும் தொழில்நுட்பம், புவி அறிவியல், சுற்றுச்சூழல், வனம் மற்றும் காலநிலை மாற்றத்திற்கான மத்திய அமைச்சர் Dr. ஹர்ஷ வர்தன் அறிவித்தார். மலிவான மருத்துவ சாதனங்கள், நகர்ப்புற நீரமைப்புகள், பெருந்தரவு மற்றும் இணைய உலகம் போன்ற துறைகளில் இந்தியாவிற்கும் நெதர்லாந்திற்கும் இடையேயான வெற்றிகரமான இருதரப்பு ஆராய்ச்சி ஒத்துழைப்பு பற்றி அப்போது அமைச்சர் குறிப்பிட்டு பேசினார்.
- இந்த உச்சி மாநாடு நெதர்லாந்து அரசாங்கத்துடன் இணைந்து அறிவியல் மற்றும் தொழில்நுட்ப துறை மற்றும் இந்திய தொழில்துறை கூட்டமைப்பு ஆகியவற்றால் ஏற்பாடு செய்யப்படும்.

# விருதுகள்

1. 2018 UNHCR நான்செனன் அகதிகள் விருதுக்கான அதிகாரப்பூர்வ வெற்றியாளரான **Dr. இவான் அடார் அதாஹா**, எந்த நாட்டைச் சேர்ந்தவர்?

**விடை: தெற்கு சூடான்**

**விளக்கம்:**

- உள்நாட்டு போரால் பாதிக்கப்பட்டுள்ள தெற்கு சூடானில் உள்ள புஞ்ச் நகரத்தில் போதிய மின்சாரம் மற்றும் மருந்துகள் இல்லாத நிலையிலும் அங்குள்ள லட்சக்கணக்கான அகதிகளுக்கு மருத்துவ சிகிச்சை அளித்துவரும் தெற்கு சூடானை சேர்ந்த Dr. இவான் அடார் அதாஹாவுக்கு ஐ.நா அகதிகள் நிறுவனம் (UNHCR) தன் மிகப்பெரிய விருதான "நான்செனன்" அகதிகள் விருதை வழங்குவதாக அறிவித்துள்ளது.

2. 2018 ஆம் ஆண்டுக்கான உடலியல் அல்லது மருத்துவத்துக்கான நோபல் பரிசு, எந்தப் புற்றுநோய் மருத்துவ சிகிச்சையை கண்டுபிடித்தற்காக ஜேம்ஸ் P அல்லிசன் மற்றும் தசுக்கு ஹோஞ்சோ ஆகியோருக்கு கூட்டாக வழங்கப்பட்டுள்ளது?

**விடை: நோயெதிர்ப்பியச் சிகிச்சை (Immunotherapy)**

**விளக்கம்:**

- புற்றுநோய் சிகிச்சையில் 'Immune Checkpoint Therapy' (நோயெதிர்ப்பு ஆற்றல் தடை உடைப்பு சிகிச்சை) என்ற புதிய கண்டுபிடிப்பை மேற்கொண்டமைக்காக அமெரிக்க மருத்துவ விஞ்ஞானி ஜேம்ஸ் P அல்லிசன் மற்றும் ஜப்பானின் தசுக்கு ஹோஞ்சோ ஆகியோருக்கு 2018 ஆண்டுக்கான உடலியல் அல்லது மருத்துவத்துக்கான நோபல் பரிசு வழங்கப்பட்டுள்ளது.
- நோயெதிர்ப்பு முறைமையில் உள்ள T செல்களில், குறிப்பிட்ட சில புரதங்கள் செல்களை தாக்கும் திறனை எவ்வாறு குறைக்கிறது எனவும், மேலும் அவை புரதங்களை ஒடுக்குவதன் மூலம் புற்றுநோயை எதிர்த்துப் போரா் வல்லதாக உடலினை எவ்வாறு மாற்றலாம் என இவ்விரு மருத்துவர்களும் 1990 – களில் தனித்தனியாக ஆராய்ந்தனர்.

3. நிகழாண்டில் இயற்பியல் துறைக்கான நோபல்பரிசு பெற்ற பெண் இயற்பியலாளர் யார்?

**விடை: டோனா ஸ்டிரிகலாண்ட்**

**விளக்கம்:**

- லேசர் இயற்பியல் பிரிவில் பல்வேறு புதிய கண்டுபிடிப்புகளை மேற்கொண்ட அமெரிக்க இயற்பியலாளர் ஆர்தர் ஆஷ்கின், பிரான்ஸ் நாட்டு விஞ்ஞானி ஜெரார்டு மோரோ, கனட நாட்டின் பெண் விஞ்ஞானி டோனா ஸ்டிரிக்லாண்ட் ஆகியோருக்குக் கூட்டமாக 2018 ஆம் ஆண்டுக்கான இயற்பியல் துறைக்கான நோபல்பரிசு வழங்கப்பட்டுள்ளது.
- கண்ணாடி இழையில் புதிய கண்டுபிடிப்புகளைச் செய்ததற்காக அமெரிக்க இயற்பியலாளர் ஆர்தர் ஆஷ்கினுக்கு நோபல் பரிசின் பாதித்தொகை வழங்கப்பட்டது. கனடா நாட்டு பெண் விஞ்ஞானி டோனா ஸ்டிரிக்லாண்ட், பிரான்ஸ் நாட்டு: விஞ்ஞானி ஜெரார்டு மோரா ஆகியோருக்கு லேசர் கற்றை மிக, மிக, நுண்ணிய அளவில் உருவாக்கியதற்காக பாதியளவு பரிசு வழங்கப்பட்டது.
- மேரி கியூரி, மரியா ஜோபர்ட்டுக்கு பின் எந்தப்பெண் விஞ்ஞானிக்கும் இயற்பியலில் நோபல் பரிசு வழங்கப்படவில்லை. ஏறக்குறைய 55 ஆண்டுகளுக்குப் பின் இயற்பியல் பிரிவில் நோபல் பரிசு பெறும் மூன்றாவது பெண் விஞ்ஞானி ஸ்டிரிகலாண்ட் ஆவார்.

4. அண்மையில் 'ஸ்வச்சஹா ஹி சேவா' விருது வென்ற மத்திய அமைச்சகம் எது?

**விடை: ரயில்வே அமைச்சகம்**

**விளக்கம்:**

- அரசாங்க அலுவலகங்களில் தூய்மை குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்த குடிநீர் மற்றும் சுகாதார அமைச்சகத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட 'ஸ்வச்சதா ஹி சேவா' திட்டத்தின் விருதுகள் பிரிவின்கீழ், 'ஸ்வச்சதா பகவாடா'வுக்கு அளிக்கப்பட்ட சிறந்த பங்களிப்புக்காக ரயில்வே அமைச்சகம் சிறந்த துறையாக அறிவிக்கப்பட்டுள்ளது. தூய்மை இந்தியா இயக்கத்தின் 4 ஆவது ஆண்டு விழாவில், ரயில்வே அமைச்சகத்துக்கு இவ்விருது வழங்கப்பட்டது.
- அனைத்துத்துறை மக்களையும் ஒன்றுதிரட்டி தூய்மைக்காகவும், கழிவறைகளைக்காட்டி திறந்த வெளி கழிப்பிடங்கள் இல்லா சூழ்நிலையை

உருவாக்கும் வகையில் அவர்களை உடலுழைப்பு அளிக்க வைப்பதே 2017ல் தொடங்கப்பட்ட ‘ஸ்வச்சதா ஹி சேவா’ இயக்கத்தின் நோக்கமாகும்.

5. நிகழாண்டுக்கான தூய்மையான பல்கழைக்கழக தரவரிசையில், தூய்மையான அரசாங்க பல்கலைக்கழகம் என அறிவிக்கப்பட்ட பல்கலைக்கழகம் எது?

**விடை: மகரிஷி தயானந்த் பல்கலைக்கழகம், ரோதக்**

**விளக்கம்:**

- மத்திய மனிதவள மேம்பாட்டு அமைச்சர் பிரகாஷ் ஜவடேகர், சமீபத்தில் பல்வேறு பிரிவுகளின் கீழ், 2018 ஆம் ஆண்டுக்கான “தூய்மையான பல்கலைக்கழக தரவரிசை” யை அறிவித்தார். இதில், ஹரியானாவைச் சேர்ந்த மகரிஷி தயானந்த் பல்கலைக்கழகம், ‘தூய்மையான அரசு பல்கலை’ என மனிதவள மேம்பாட்டு அமைச்சகத்தால் அறிவிக்கப்பட்டது.
- அமிர்தசரசில் அமைந்துள்ள குருதானக் தேவ் பல்கலைக்கழகம் இரண்டாமிடத்தை பெற்றது. ‘தூய்மை சேவை’ பரப்புரையின் கீழ் நடத்தப்பட்ட ஓர் ஆய்வின் அடிப்படையில் இத்தரவரிசை தயார் செய்யப்பட்டுள்ளது. புது தில்லியில் உள்ள கல்லீரல் மற்றும் பித்த அறிவியல் நிறுவனம், அரசாங்க நிறுவனங்கள் பிரிவில் மூன்றாமிடத்தையும், அதைத்தொடர்ந்த இடங்களில் தமிழ்நாட்டின் காரைக்குடியில் உள்ள அழகப்பா பல்கலையும், ஆந்திர மாநிலம் குண்டூரில் உள்ள ஆச்சார்யா நாகார்ஜுனா பல்கலையும் உள்ளது.

6. நிகழாண்டின் வேதியியலுக்கான நோபல்பரிசு பெற்ற பெண்மணி யார்?

**விடை: பிரான்சில் H அர்னால்ட்**

**விளக்கம்:**

- ராயல் சுவீட் அறிவியல் நிறுவனம், வேதியியல் துறையில் புதிய கண்டுபிடிப்புகளை மேற்கொண்ட பிரான்சில் H. அர்னால்ட் மற்றும் ஜார்ஜ் பி ஸ்மித் மற்றும் சர்.கிரிகிரி பி. வின்டர் ஆகியோருக்கு 2018 ஆம் ஆண்டுக்கான வேதியியல் துறைக்கான நோபல் பரிசை அறிவித்துள்ளது. இதில் பிரான்சில் H அர்னால்ட் என்பவருக்கு “நொதியங்களின் (நுணெலஅநள) நெறிவழிப்படுத்தப்பட்ட பரிணாமம்” என்ற ஆய்வுக்காக நோபல்பரிசு அளிக்கப்பட்டுள்ளது.

- அறவியல் விஞ்ஞானி ஜார்ஜ் பி ஸ்மித் மற்றும் மூலக்கூறியல் உயிரியல் ஆய்வாரள் சர். கிரிகிரி பி வின்ட்டர் ஆகியோருக்கு கூட்டாக "நோய் எதிர்ப்பொருள் மற்றும் புரதங்களின் உண்ணிகள் அல்லது விழுங்கிகள்" பற்றிய முக்கிய ஆய்வுக்காக நோபல்பரிசு வென்றுள்ளார் Dr. அர்னால்டு மற்றும; Dr. ஸ்மித் ஆகிய இருவரும் அமெரிக்க விஞ்ஞானிகளாவர்.
- வேதியியல் துறையில் நோபல்பரிசு பெற்றிபப்வர்களில் பிரான்சிஸ் H அர்னால்ட் பெண் விஞ்ஞானி என்ற நிலையில், வேதியியல் துறையில் இவ்விருதைப் பெற்றுள்ள ஐந்தாவது பெண்.

7. நிகழாண்டின் அமைதிக்காக நோபல்பரிசைப் பெற்றவர் யார்?

**விடை: டெனிஸ் முக்வேஜே (Denis Mukwege)**

**விளக்கம்:**

- போர் நடைபெறும் பகுதிகளில் பெண்கள் மீது நிகழ்த்தப்படும் பாலியல் வன்கொடுமைகளை எதிர்த்துப் போராடியமைக்காக, சமூக ஆர்வலர்களான காங்கோ நாட்டு மருத்துவர் டெனிஸ் முக்வேஜேவுக்கும், இசுலாமிய தேச (IS) பயங்கரவாதிளால் பாலியல் அடிமையாக வைக்கப்பட்டிந்த யாஜிதி இனப்பெண் நாடியா முராடுக்கும் 2018 ஆம் ஆண்டின் அமைதிக்கான நோபல்பரிசு வழங்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.
- IS பயங்கரவாதிகளுக்கு எதிரான தனது போராட்டம் குறித்து நாடியர் எழுதிய 'Last Girl : My story of Captivity and My Fight against Islamic state' என்ற நூல் 2017 ஆம் ஆண்டு வெளியானது. இந்தப் பரிசு வரும் டிசம்பர் 10 அன்று ஒஸ்லோவில் வழங்கப்படும். இதனை சுவீட் நாட்டு தொழிலதிபர் ஆல்ஃபிரட் நோபல், 1895 ஆம் ஆண்டில் நிறுவினார.

8. நிகழாண்டின் பொருளாதரத்திற்கான நோபல்பரிசு பெற்றவர்கள்ய யார்?

**விடை: வில்லியம் நார்தாஸ் மற்றும் பால் ரோமர்**

**விளக்கம்:**

- நிகழாண்டுக்கான பொருளாதாரத்திற்கான நோபல் பரிசு, அமெரிக்காவைச் சேர்ந்த வில்லியம் நார்தாஸ், பால் ரோமர் ஆகியோருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. வில்லியம்

நார்தாஸ் பருவநிலை மாற்றம் தொடர்புடைய பொருளாதார ஆய்வுக்காக நோபல்பரிசைப் பெறுகிறார். நீண்ட ரோமருக்கு பொருளாதாரத்துக்கான நோபல் வழங்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

- பைங்குடில் வாயு உமிழ்வுகளால் ஏற்படும் சிக்கல்களுக்கான மிகச்சிறந்த தீர்வு, அனைத்து நாடுகளிலும் சீரான முறையில் கரியமிலவாயு வரியை விதிக்கும் திட்டத்தை செயல்படுத்துவது என்பதை நார்தாசின் ஆராய்ச்சி காட்டுகிறது. பொருளாதார வளர்ச்சிக்கும், பருவநிலைக்கும் உள்ள தொடர்புகளை விளக்கும் பொருளாதாரக் கட்டமைப்பை முதல்முறையாக உருவாக்கித் தந்தவர் இவரென்பது குறிப்பிடத்தக்கது. இவர்கள் இருவருக்கும் 9 மில்லியன் சுவீடிஷ் குரோனா ($1.3 மில்லியன்) பரிசுத்தொகையாக வழங்கப்படும்.

9. ராமிநேனி அறக்கட்டளையின் சிறந்த நபருக்கான விருது, விளையாட்டுத் துறையைச் சேர்ந்த யாருக்கு வழஙகப்பட்டுள்ளது?

**விடை: புல்லேலா கோபிசந்த்**

**விளக்கம்:**

- அக்.7 அன்று பாட்மிண்டன் பயிற்சியாளர் புல்லேலா கோபிசந்துக்கு, ராயிநேனி அறக்கட்டளையின் ‘சிறந்த நபர்’ விருது வழங்கி கௌரவிக்கப்பட்டது. இவ்விருதை குடியரசு துணைத்தலைவர் வெங்கைய நாயுடு வழங்கினார். மேலும், தெலுங்கு இலக்கிய மேதை கரிகாபதி நரசிம்ம ராவ், திரைப்பட இயக்குநர் நாக் அஸ்வின் ரெட்டி மற்றும் எழுத்தாளர் C வெங்கட்ரமணா ஆகியோருக்கு சிறப்பு விருதுகளையும் அவர் வழங்கினார்.

10. இந்தியாவின் முதல் ‘மிஸ் டிரான்ஸ் குயின்’ எனத் தேர்ந்தெடுக்கப்பட்டவர் யார்?

**விடை: வீனா சென்ரே**

**விளக்கம்:**

- மும்பையில் நடந்த இந்தியாவின் முதல் திருநங்கை அழகிப்போட்டியில் சத்தீஸ்கரைச் சேர்ந்த வீனா சென்ரே, தமிழ்நாட்டைச் சேர்ந்த நமிதா அம்முவை தோற்கடித்து ‘மிஸ் டிரான்ஸ் குயின்’ பட்டம் வென்றார். வீனா, ராய்ப்பூரின் மந்திர் ஹசுத் பகுதியில் வசித்துவருகிறார்.

11. இசை அகாடமியின் ‘சிறப்பு வாழ்நாள் சாதனையாளர்’ விருதை வென்றுள்ள இசைக் கலைஞர் யார்?

**விடை: விக்கு விநாயக்ராம்**

**விளக்கம்:**

- தமிழ்நாட்டின் சென்னையில் உள்ள இசை அகாடமியின் ‘சிறப்பு வாழ்நாள் சாதனையாளர்’ விருது, அக்.10 அன்று ‘கடம்’ இசைக்கலைஞர் விக்கு விநாயகத்திற்கு வழங்கப்பபட்டது. இவர் மண் குடத்தாலான கடத்தினை கர்நாடக இசைக் கச்சேரிகளில் பயன்படுத்துகிறார். இதன்மூலம் தமிழ்நாட்டின் கடத்தின் பெருமையை அனைவரும் அறியச் செய்தவராவார்.

12. 100% கரிம வேளாண்மைக்காக FAO-ன் எதிர்கால கொள்ளை தங்க விருது’ வென்ற இந்திய மாநிலம் எது?

**விடை: சிக்கிம்**

**விளக்கம்:**

- இயற்கை விவசாயத்தில் உலகின் முன்னோடி மாநிலமாக விளங்கி வரும், இந்தியாவின் சிக்கிம் மாநிலத்தை 100% இயற்கை வேளாண்மை நடைபெறும் மாநிலமாக அறிவித்து ஐ.நா. உணவு மற்றும் வேளாண் அமைப்பு ‘எதிர்கால கொள்கை – 2018’ விருது வழங்கி கௌரவித்துள்ளது.
- சிக்கிம் மாநிலத்தின் அனைத்து பண்ணை நிலங்களும், இயற்கை வேளாண்மைக்கான சான்று பெற்றுள்ளன. இம்மாநில மக்கள வேதி உரங்கள் மற்றும் பூச்சிக்கொல்லி மருந்துகள் இல்லாமல் விவசாயம் செய்து வருகின்றனர். வேதி உரங்கள் மற்றும் பூச்சிக்கொல்லி மருந்துகளின் உற்பத்தி மற்றும் விற்பனைக்கு அம்மாநில அரசு முற்றாக தடை விதித்துள்ளது. சிக்கிம் மாநில அரசின் இம்முயற்சியால் 66000 விவசாயிகள் பயன் பெற்றுள்ளதுடன், சுற்றுலாவும் விரிவடைந்துள்ளது.

13. இலக்கியத்திற்கான நோபல் பரிசுக்கு எதிராக உருவாக்கப்பட்ட புதிய அகாடமி இலக்கியப் பரிசை நிகழாண்டில் பெற்றவர் யார்?

**விடை: மேரிஸ் கான்டே (Maryse Conde)**

**விளக்கம்:**

- பிரெஞ்சு(குவாதலூபியர்) வரலாற்றுப் புனைகதை எழுத்தாளரான மேரிஸ் கான்டே, 2018 ஆம் ஆண்டுக்கான புதிய அகாடமி இலக்கியப் பரிசை பெற்றுள்ளார். இது இலக்கியத்திற்கான நோபல் பரிசுக்கு எதிராக உருவாக்கப்பட்டதாகும். கூட்டுப்பங்கு நிதித்திரட்டல் மற்றும் நன்கொடைகள் மூலம் திரட்டப்பட்ட 87,000 பவுண்டு ரொக்கப்பரிசு, நோபல் பரிசு வழங்கப்படும் தேதிக்கு ஒருநாள் முன்னதாக (9 டிசம்பர் 2018) கான்டேவுக்கு வழங்கப்படும்.
- #MeToo இயக்கத்தின் ஒரு பகுதியாக பாலியல் குற்றச்சாட்டுகள் வெளிச்சத்திற்கு வந்ததன் காரணத்தால், இலக்கியத்திற்கான நோபல் பரிசு 1949 ஆம் ஆண்டிலிருந்து முதன்முறையாக இம்முறை நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

14. நடப்பாண்டிற்கான ‘இந்திய சமூக தொழில்முனைவோர்’ விருது பெற்றவர் யார்?

**விடை: பிரேமா கோபாலன்**

**விளக்கம்:**

- ஸ்வயம் சிசுஷன் பிரயோக்கின் (SSP) நிறுவனர் கோபாலனுக்கு நடப்பாண்டிற்காக ‘இந்திய சமூக தொழில்முனைவோர் - India Social Entrepreneur of the Year (SEOY) விருது வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளது. பெண்கள் தொழில் முனைவு ஊக்குவிப்பு மற்றும் கிராமப்புற வாழ்வாதாரத்தை உறுதிப்படுத்துதல் ஆகியவற்றில் அவருது பணிக்காக அவருக்கு இவ்விருது வழங்கப்பட்டுள்ளது.

15. நடப்பாண்டில் புனைவக்கான மேன் புக்கர் பரிசை வென்றுள்ளார் யார்?

**விடை: அன்னா பன்ஸ்**

**விளக்கம்:**

- வட அயர்லாந்தைச் சேர்ந்த பெண் எழுத்தாளர் அன்னா பன்ஸ் (56), நடப்பாண்டுக்கான மேன் புக்கர் பரிசுக்கு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். 2013 ஆம் ஆண்டுக்குப் பிறகு இப்பரிசை வெல்லும் ஐரீஷ் பெண்மனி அன்னா பன்ஸ் ஆவார். ‘மில்க்மேன்’ என்ற அவரது நூலுக்காக இந்தப் பரிசு வழங்கப்பட்டுள்ளது. இந்த நூலில் கடந்த 30 ஆண்டுக்கு மேலாக வட அயர்லாந்தில் நடைபெற்ற வன்முறை சம்பவங்களை பற்றி அன்னா பர்ன்ஸ்

விரிவாக எழுதியுள்ளார். ஏற்கனவே அவர், 'No Bones' மற்றும் 'Little Constructors' என்ற இரு புதினங்களை எழுதியுள்ளார்.

16. நடப்பாண்டின் 'IOC Sports and Active Society Development Grant' விருது, யாருக்கு வழங்கப்பட்டுள்ளது?

**விடை: சுஹிஸ் டான்டன்**

**விளக்கம்:**

- சமூக தொழில்முனைவோரான சுஹிஸ் டான்டனுக்கு விளையாட்டுத்துறை மேம்பாட்டுக்கான அவரது பங்களிப்பிற்காக நடப்பாண்டின் 'IOC Sports and Active Society Development Grant' விருது வழங்கப்பட்டுள்ளது. பியூனஸ் ஏர்சில் நடந்த செயலில் ஒலிம்பியம் மன்றத்தின்போது, சர்வதேச ஒலிம்பிக் கமிட்டியின் (IOC) விருது வழங்கும் நிகழ்வு நண்டபெற்றது.

17. 2018 ஹிருதயநாத் வாழ்நாள் சாதயையாளர் விருது யாருக்கு வழங்கப்படவுள்ளது?

**விடை: முகமது சஹுர் கயாம் ஹஷ்மி**

**விளக்கம்:**

- தேசிய விருது பெற்ற இசையமைப்பாளரான முகமது சஹுர் கயாம் ஹஷ்மிக்கு நடப்பாணடின் ஹிருதயநாத் வாழ்நாள் சாதனையாளர் விருது வழங்கப்படவுள்ளது. இவர் 'கய்யாம்-முாயலலயஅ' என பிரபலமாக அறியப்படுகிறார். ஹிருதமேஷ் கலை நிறுவனத்தால் வழங்கப்படும் இவ்விருது, 100,000 ரூபாய் ரொக்கப்பரிசையும், ஒரு நினைவுப்பரிசையும் உள்ளடக்கியது.

18. எரிசக்தி கொள்கைக்கான கிளைன்மேன் மையத்தின் நடப்பாண்டு கார்னட் பரிசு, எந்த இந்திய மத்திய அமைச்சருக்கு வழங்கப்பட்டுள்ளது?

**விடை: பியுஷ் கோயல்**

**விளக்கம்:**

- மத்திய ரயில்வே மற்றும் நிலக்கரி துறை அமைச்சரான பியுஷ் கோயலுக்கு, அமெரிக்காவின் பென்சில்வேனியா வடிவமைப்பு பல்கலைக்கழகம், எரிசக்தி கொள்கைக்கான கிளைன்மேன' மையத்தின் 2018 கார்னட் பரிசு (Carnot Prize)

வழங்கியுள்ளது. நீடித்த ஆற்றல் தீர்வுகளுடன் ஆற்றல் வறுமைக்கான நீக்குவதற்கான இந்தியாவின் முயற்சிகளை அங்கீனரிக்கும் விதமாக கார்னட் பரிசு வழங்கப்பட்டுள்ளது. இது ஆற்றல்துறையின் மதிப்புமிக்க விருதாகும்.

19. ஆட்கடத்தலை எதிர்த்து போராடியதற்காக எந்த இந்திய – அமெரிக்கருக்கு அமெரிக்க ஜனாதிபதி விருது வழங்கப்பட்டுள்ளது?

**விடை: மினல் படேல் டேவிஸ்**

**விளக்கம்:**

- ஆட்கடத்தலை எதிர்த்து போராடியதற்காக, இந்திய – அமெரிக்கர் மினல் படேல் டேவிசுக்கு அமெரிக்க செயலாளர் மைக் பாம்பியா அமெரிக்க ஜனாதிபதி விருதினை வழங்கியுள்ளார். மினலின் செயல்பாடுகளைப் பாராட்டி, ஆட்கடத்தலுக்கு எதிரான நடவடிக்கைக்கான ஹுஸ்டன் நகர மேயர் சில்வஸ்டர் டர்னரின் சிறப்பு ஆலோசகராக கடந்த 2015ஆம் ஆண்டு மினல் நியமிக்கப்பட்டுள்ளார்.

20. நடப்பாண்டின் 'சக்தி பட் முதல் நூல்' பரிசு பெற்ற இந்திய – அமெரிக்க எழுத்தாளர் யார்?

**விடை: சுஜாதா கித்லா**

**விளக்கம்:**

- "Ants Among Elephant: An Untouchable Family And The Making Of Modern India" என்ற நூலுக்காக இந்திய – அமெரிக்க எழுத்தாளர் சுஜாதா கித்லா, நடப்பாண்டின் சக்திப ட் முதல் நூல்' பரிசை பெற்றுள்ளார். இந்நூல், நவீன இந்தியாவில் 'தீண்டத்தகாத' குடும்பத்தில் பிறந்து வளர்வதுபற்றி விவரிக்கிறது. வெற்றியாளர் ரூ.2 லட்சம் ரொக்கமும், ஒரு கோப்பையும் பெறுவார். இதற்கான நிதியை சக்திபட் அறக்கட்டளை வழங்குகிறது. 2008 ஆம் ஆண்டில் இளம் எழுத்தாளர் சக்தியின் நினைவாக இப்பரிசு உருவாக்கப்பட்டது.

21. பொது நிர்வாகத்தில் சிறந்து விளங்கியமைக்கான 19ஆவது லால் பகதூர் சாஸ்திரி தேசிய விருது யாருக்கு வழங்கப்பட்டுள்ளது?

**விடை: பாலி S. நரிமன்**

**விளக்கம்:**

- அக்.22 அன்று புகழ்பெற்ற நீதிபதி பாலி S. நரிமன், நடப்பாண்டு பொது நிர்வாகத்தில் சிறந்து விளங்கியமைக்கான 19ஆவது லால் பகதூர் சாஸ்திரி தேசிய விருதுடன் இந்தியாவின் துணை குடியரசுத் தலைவர் M. வெங்கைய ாநயடவால் கௌரவிக்கப்பட்டார். 1995ஆம் ஆண்டில் லால் மேலாண்மை துறை ஆகியவற்றால் இந்த விருது நிறுவப்பட்டது.

22. நடப்பாண்டு சியோல் அமைதிப்பரிசுக்கு தெரிவு செய்யப்பட்டுள்ள இந்தியர் யார்?

**விடை: நரேந்திர மோடி**

**விளக்கம்:**

- நடப்பாண்டுக்கான சியோல் அமைதிப்பரிசினைப் பிரதமர் நரேந்திர மோடிக்கு வழங்குவது என சியோல் அமைதிப் பரிசுக் குழு முடிவுசெய்துள்ளது. சர்வதேச ஒத்துழைப்பை மேம்படுத்துவது, உலகப்பொருளாதார வளர்ச்சியை அதிகப்படுத்துவது, இந்திய மக்களின் திறன் மேம்பாட்டை விரைவுபடுத்துவது ஆகியவற்றுக்காக அவருக்கு இந்தப் பரிசு வழங்கப்படுகிறது.
- ஏழைகளுக்கும், பணக்காரர்களுக்கும் இடையே உள்ள சமூக பொருளாதார ஏற்றத்தாழ்வுகளைக் குறைக்க “மோடிநாமிக்ஸ்” என்பதை வழங்கி, இந்திய மற்றும் உலகப் பொருளாதாரங்களின் வளர்ச்சிக்கு மோடியின் பங்களிப்பை விருதுக் குழு அங்கீகரித்துள்ளது.

23. நடப்பாண்டு காதுகேளாதோருக்கான ஆசிய அழகி போட்டியில் (Miss Deaf Asia) பட்டம் வென்ற இந்தியர் யார்?

**விடை: நிஷ்தா துதேஜா**

**விளக்கம்:**

- ஹரியானாவை சேர்ந்த நிஷ்தா டுதேஜா, அண்மையில் செக் குடியரசிலுள்ள பிராகாவில் நடந்த சர்வதேச போட்டியில், நடப்பாண்டு காதுகேளாதோருக்கான

ஆசிய அழகி பட்டத்தை வென்றார். இந்தப் பட்டத்தை வென்ற முதல் பெண்மனி என்ற பெருமையை நிஷ்தா பெற்றுள்ளார்.

24. ICFA இன் முதலாவது உலக வேளாண் பரிசை பெறவுள்ள இந்திய அறிவியலறிஞர் யார்?

**விடை: MS சுவாமிநாதன்**

**விளக்கம்:**

- ICFA இன் முதலாவது உலக வேளாண் பரிசை (World Agriculture Prize) வேளாண் அறிவியலறிஞர் பேராசிரியர் MS சுவாமிநாதன் பெறவுள்ளார். மரபியல், கலப்பிறப்புரிமையியல், கதிர்வீச்சு மற்றும் இரசாயன மரபணு மாற்றம், உணவு மற்றும் பல்லுயிர் பாதுகாப்பு ஆகியவற்றில் அவரது அடிப்படை மற்றும் பயன்பாட்டு ஆராய்ச்சிக்காக இவ்விருது வழங்கப்படவுள்ளது.

- அக் 26 அன்று புது தில்லியில் நடைபெறும் சர்வதேச வேளாண் தலைமைத்துவ உச்சிமாநாடு மற்றும் வேளாண் உலகம் - 2018இன் ஒருபகுதியாக “காலநிலை மாற்றம் மற்றும் உணவுப் பாதுகாப்பு” என்ற தலைப்பில் நடைபெறும் சுவாமிநாதன் சிறப்பு உரையாடல் நிகழ்வுடன் இந்தப் பரிசளிப்பு விழா தொடங்கப்படும்.

25. நிலையான வளர்ச்சிகாக முதலீடுகளை ஊக்குவிப்பதில் சிறப்பாக செயல்பட்டதற்காக நடப்பாண்டு ஐ.நா. விருதை வென்றுள்ள இந்திய நிறுவனம் எது?

**விடை: இன்வஸ்ட் இந்தியா**

**விளக்கம்:**

- ஐ.நா.வின் வர்த்தகம் மற்றும் வளர்ச்சிக்கான மாநாட்டின் சார்பில் வளரும் மற்றும் வளர்ந்த நாடுகளில் வளர்ச்சி மற்றும் மேம்பாட்டு திட்டங்களுக்கான முதலீடுகளை ஊக்குவிக்கும் அமைப்புகளில் ஒன்று தேர்ந்தெடுக்கப்பட்டு ஆண்டுதோறும் விருது வழங்கி கௌரவிக்கப்படும். அதன்படி, ஜெனிவாவில்

நடைபெற்ற உலக முதலீடு மாநாட்டில் 2018 ஆம் ஆண்டுக்கான ஐ.நா. விருது இந்தியாவை சேர்ந்த இன்வஸ்ட் இந்தியா என்ற அமைப்புக்கு விருது வழங்கப்பட்டது.

26. இலக்கியத்திற்கான முதலாவது JCB பரிசுபெற்ற எழுத்தாளர் யார்?

**விடை: பெஞ்சமின்**

**விளக்கம்:**

- 'Jasmine Days – மல்லிகை நாட்கள்' என்ற தனது நூலுக்காக மலையாள எழுத்தாளர் பெஞ்சமின், இலக்கியத்திற்கான முதலாவது JCB பரிசை பெற்றுள்ளார். இந்நூல், மத்திய கிழக்கு நாடுகளில் வாழும் தெற்காசியர்களின் வாழ்கையை ஆராய்கிறது. இப்புதினம் முதலில் மலையாளத்தில் எழுதப்பட்டு ஷானால் ஹபீப்பால் மொழிபெயர்க்கப்பட்டது. அழிவையும், பிரிவினையையும் நோக்கிச் செல்லும் புரட்சி நடக்கும் ஓர் நகரத்தில் வாழும் பெண்ணின் கதையை இது கூறுகிறது.

# நியமனங்கள்

1. அண்மையில், ரயில்வே பாதுகாப்பு படையின் (RPF) புதிய இயக்குநராக அருண் குமார் நியமிக்கப்பட்டுள்ளார். RPF இன் குறிக்கோளுரை (Motto) **யாது?**

**விடை: Service and Loyalty**

**விளக்கம்:**

- ரயில்வே பாதுகாப்பு படையின் (RPF) புதிய இயக்குநராக அருண் குமார் (உத்திரப்பிரதேசம் : 1985) நியமிக்கப்பட்டுள்ளார். 2021 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 30 ஆம் தேதி வரை அவர் இந்தப் பதவியில் இருப்பார். இவருக்கு முன் தர்மேந்திர குமார் இப்பதவியில் இருந்தார. இந்த நியமனத்துக்கு முன், அருண் குமார், எல்லை பாதுகாப்புப் படைப் பிரிவின் சிறப்பு தலைமை இயக்குநராக இருந்தார்.
- மத்திய புலனாய்வுத் துறையில் (CBI) இணை இயக்குநர் பதவி உட்பட பல பதவிகளை அவர் வகித்துள்ளார். ரயில்வே பாதுகாப்புப் படை என்பது இந்திய

அரசின் மத்திய காவல் ஆயுதப் படைகளுள் ஒன்றாகும். இந்திய ரயில்வேயின் பாதுகாப்பிற்கும், பயணிகளின் பாதுகாப்பிற்கும் உருவாக்கப்பட்ட படையாகும். 'சேவை மற்றும் நேர்மை தவறாமை' என்பது இந்தப் படையின் குறிக்கோளுறை ஆகும்.

2. வங்கதேசத்தின் 47 ஆண்டுகால வரலாற்றில், முதல் பெண் படைத்துறைப் பணித்தலைவராக (Major General) நியமிக்கப்பட்டுள்ளவர் யார்?

**விடை: சூசேன் கிட்டி (Susane Giti)**

**விளக்கம்:**

- வங்கதேசத்தின் 47 ஆண்டுகால வரலாற்றில் முதல் பெண் படைத்துறை பணித்தலைவராக சூசேன் கிட்டி நியமிக்கப்பட்டுள்ளார். செப்டம்பர் 30 அன்று வங்கதேச ராணுவத் தளபதி அஜிஸ் அகமது மற்றும் லெப்டினன்ட் ஜெனரல் முகமது சாம்சுல் ஹக்கின் ஆகியோர் அவருக்கு மேஜர் ஜெனரல் தரவரிசைப் பட்டையை வழங்கினர். தற்போது, அவர் ஆயுதப்படைகள் மருத்துவக் கல்லூரி நோயியல் துறையின் தலைவராக உள்ளார்.
- உட்சேவை மக்கள் தொடர்பின்படி கிட்டி 1986 ஆம் ஆண்டில் ஒரு தலைவராக வங்கதேசப் படைகளின் மருத்துவப்பிரிவில் சேர்ந்தார். 1996 ஆம் ஆண்டில் ரத்தவியலில் FCPS பட்டம் பெற்ற முதல் பெண் இவராவார்.

3. சர்வதேச நாணய நிதியத்தின் தலைமைப் பொருளாதார நிபுணராக நியமிக்கப்பட்டுள்ள இந்திய வம்சாவளியைச் சேர்ந்தவர் யார்?

**விடை: கீதா கோபிநாத்**

**விளக்கம்:**

- சர்வதேச நாணய நிதியத்தின் (IMF) புதிய தலைமைப் பொருளாதார நிபுணராக ஹார்வர்டு பல்கலைக்கழக பேராசிரியர் கீதா கோபிநாத் (46) நியமிக்கப்பட்டுள்ளார். IMF அமைப்பின் தற்போதைய தலைமைப் பொருளாதார நிபுணர் மௌரி ஆப்ஸ்ஃபெல்ட், இந்த ஆண்டு இறுதியில் ஓய்வபெறவுள்ளார். அதன் பிறகு கீதா கோபிநாத் பொறுப்பேற்பார். இதன் மூலம் இப்பொறுப்பை வகிக்கும் 2 ஆவது இந்தியர் என்ற பெருமையை அவர் பெறுகிறார். இதற்கு

முன்பு இந்தியாவைச் சேர்ந்த ரிசர்வ் வங்கியின் முன்னாள் ஆளுநர் ரகுராம் ராஜன் இப்பொறுப்பை வகித்துள்ளார்.

4. ஈராக்கின் புதிய அதிபர் யார்?

**விடை:** பர்ஹாம் சாலி (Barham Salih)

**விளக்கம்:**

- மூத்த குர்திஸ்தான் அரசியல்வாதியான பர்ஹாம் அகமத் சாலி, அக்.2 அன்று ஈராக்கின் புதிய அதிபராக தேர்ந்தெடுக்கப்பட்டார். அவர் 219 வாக்குகளைப் பெற்று, 22 வாக்குகளைப் பெற்ற ஃபுவத் ஹுசைனை தோற்கடித்தார். சாலி, குர்திஸ்தான் பிராந்திய அரசாங்கத்தின் முன்னாள் பிரதமரும், ஈராக்கிய கூட்டாட்சி அரசாங்கத்தின் முன்னாள் துணைப்பிரதமரும் ஆவார்.
- புதிய அதிபரான சாலி, ஈராக்கின் பிரதமர் பதவிக்கு ஷியா இஸ்லாமிய பிரிவைச் சேர்ந்த அதேல் அப்துல் மாஹ்தியை தேர்வு செய்துள்ளார். இஸ்லாமிய அரசின் ஜிஹாதிச குழுவுக்கு எதிரான 4 ஆண்டு யுத்தத்தைத் தொடர்ந்து ஈராக்கின் மறுசீரமைப்பை மாஹ்தி மேற்பார்வையிடுவார்.

5. இந்தியாவின் தலைமைப் புள்ளியியல் வல்லுநராக நியமிக்கப்பட்டுள்ளவர் யார்?

**விடை: பிரவின் ஸ்ரீவத்சவா**

**விளக்கம்:**

- 1983 ஆம் ஆண்டுப் பிரிவைச் சேர்ந்த இந்திய புள்ளியியல் சேவை அதிகாரியான பிரவின் ஸ்ரீவத்சவா, இந்தியாவின் புதிய தலைமைப் புள்ளியியல் வல்லுநராக நியமிக்கப்பட்டுள்ளார். இந்த நியமனம், அவரது ஓய்வுறுகாலம் (2020 ஆகஸ்ட் 31) வரையோ அல்லது அடுத்த உத்தரவுகள் வரும் வரையோ நடைமுறையில் இருக்கும். அவர் பல்வேறு நிலைகளில் புள்ளியியல் துறை மற்றும் சுகாதாரத் துறை அமைச்சகங்களில் பணிபுரிந்துள்ளார்.

6. புதிய தேசிய பாதுகாப்பு துணை ஆலோசகராக நியமிக்கப்பட்டுள்ளவர் யார்?

**விடை: R N ரவி**

**விளக்கம்:**

- கூட்டு புலனாய்வுக் குழுவின் முன்னாள் தலைவரான R N ரவி, புதிய தேசிய பாதுகாப்பு துணை ஆலோசகராக நியமிக்கப்பட்டுள்ளார். அவர் நாகலாந்துக்கான தேசிய சோசலிச குழுவின் அரச பிரதிநிதியாகவும் செயல்படுகிறார். முன்னாள் RAW தலைவர் ராஜிந்தர் கண்ணா, முன்னாள் தூதர் பங்கஜ் சரண் ஆகிய இரு தேசிய பாதுகாப்பு துணை ஆலோசகர்களுக்குப் பிறகு தேசிய பாதுகாப்பு ஆலோசகரான அஜித் தோவாலுக்கு அறிக்கை தரும் மூன்றாவது தேசிய பாதுகாப்பு துணை ஆலோசகராக தற்போது R N ரவி நியமிக்கப்பட்டுள்ளார். இவர் 2012 ஆம் ஆண்டில் புலனாய்வு செயலகத்தின் சிறப்பு இயக்குநராக இருந்து ஓய்வு பெற்றார்.

7. மீளமைக்கப்பட்ட மாசு கண்காணிப்பு அமைப்பான சுற்றுச்சூழல் மாசுபாடு (தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) ஆணையத்தின் தலைவர் யார்?

**விடை: பூரே லால் (Bhure Lal)**

**விளக்கம்:**

- தேசிய தலைநகர் பகுதியிலுள்ள காற்று மாசுபாட்டை சமாளிக்க பல்வேறு நடவடிக்கைகளை செயல்படுத்துவதற்கு உச்சநீதிமன்றத்தால் நியமிக்கப்பட்ட சுற்றுச்சூழல் மாசுபாடு (தடுப்பு மற்றும் கட்டுப்பாட்டு) ஆணையத்தை இந்திய அரசு மீளமைத்துள்ளது.

8. இந்தியாவின் புதிய தலைமை அரசு வழக்குரைஞர் யார்?

**விடை: துஷார் மேத்தா**

**விளக்கம்:**

- மத்திய அரசின் தலைமை அரசு வழக்குரைஞராக இருந்த ரஞ்சித் குமார், கடந்த ஆண்டு ஆகஸ்ட் 20 ஆம் தேதி தனது பதவியை ராஜிநாமா செய்தார். அதைத் தொடர்ந்து, அந்தப் பதவி காலியாக இருந்தது. இந்த நிலையில், இந்தியாவின் கூடுதல் தலைமை அரசு வழக்குரைஞரான துஷார் மேத்தா புதிய தலைமை அரசு வழக்குரைஞராக நியமிக்கப்பட்டுள்ளார். இவருடைய பதவிக் காலம் ஜூன் 30, 2020 வரை நியமிக்கப்பட்டுள்ளது.

9. ஏர் ஏசியா இந்தியாவின் புதிய தலைமைச் செயல் அதிகாரி & மேலாண்மை இயக்குநராக நியமிக்கப்பட்டுள்ளவர் யார்?

**விடை: சுனில் பாஸ்கரன்**

**விளக்கம்:**

- ஏர் ஏசியா இந்தியா நிறுவனத்தின் புதிய தலைமைச் செயல் அதிகாரி மற்றும் மேலாண்மை இயக்குநராக டாடா குழுமத்தைச் சேர்ந்த சுனில் பாஸ்கரன் நியமிக்கப்பட்டுள்ளார். நவம்பர் 15 ஆம் தேதி, சுனில் பாஸ்கரன் இப்புதிய பொறுப்பை ஏற்கவுள்ளார். நிறுவனத்தின் விரிவாக்கம் மற்றும் அடுத்தகட்ட வளர்ச்சி குறித்து அவர் மேற்பார்வை செய்வார்.

10. அறிவியல் மற்றும் தொழிலக ஆய்வு மன்றத்தின் (CSIR) புதிய தலைமை இயக்குநராக நியமிக்கப்பட்டுள்ளவர் யார்?

**விடை: சேகர் C மான்டே**

**விளக்கம்:**

- அறிவியல் மற்றும் தொழிலக ஆய்வு மன்றத்தின் (CSIR) புதிய தலைமை இயக்குநராகவும், அறிவியல் மற்றும் ஆராய்ச்சித் துறை செயலாளராகவும் உயிரியலாளர் சேகர் C மான்டே நியமிக்கப்பட்டுள்ளார். CSIR'ன் முன்னாள் தலைமை இயக்குநர் கிரிஷ் சஹானி, ஆகஸ்ட் 31 அன்று ஓய்வுபெற்றதிலிருந்து இப்பதவி காலியாகவே இருந்தது.

- மான்டே தற்சமயம், புனேவில் உள்ள தேசிய செல் அறிவியல் மையத்தின் இயக்குநராகவும், RSS இணை சுதேசி அறிவியல் இயக்கமான விஞ்ஞான பாரதியின் நிர்வாகியாகவும் இருக்கிறார். ஹைதராபாத்தில் உள்ள DNA கைரேகை மற்றும் கண்டறிதலுக்கான மையத்திலும் Dr. மான்டே பணிபுரிந்துள்ளார்.

11. தேசிய குழந்தை உரிமைகள் பாதுகாப்பு ஆணையத்தின் (NCPCR) புதிய தலைவர் யார்?

**விடை: பிரியங் கனூங்கோ**

**விளக்கம்:**

- பிரியங் கனூங்கோ, தேசிய குழந்தை உரிமைகள் பாதுகாப்பு ஆணையத்தின் புதிய தலைவராக மூன்றாண்டு காலத்திற்கு நியமிக்கப்பட்டுள்ளார். NCPCR'ன் முன்னாள் தலைவர் துதி கேக்கர், செப்டம்பர் 16 அன்று ஓய்வு பெற்றதிலிருந்து இப்பதவி காலியாகவே இருந்தது. தேசிய குழந்தை உரிமைகள் பாதுகாப்பு ஆணையம், 2005 டிசம்பரில் இந்திய நாடாளுமன்றத்தில் இயற்றப்பட்ட குழந்தை உரிமைகள் பாதுகாப்பு சட்டத்தின் அடிப்படையில் அமைக்கப்பட்ட தன்னாட்சி பெற்ற அரசமைப்பாகும். இந்த அமைப்பு, 2007 ஆம் ஆண்டு மார்ச் மாதம் செயல்பட தொடங்கியது.

12. பணிபுரியும் இடங்களில் பாலியல் தொல்லையை கையாளவும், தடுக்கவும், தற்போதுள்ள சட்டம் மற்றும் நிறுவன வரைமுறைகளை ஆராயவும் அமைக்கப்பட்டுள்ள அமைச்சர்கள் குழுவின் தலைவர் யார்?

**விடை: ராஜ்நாத் சிங்**

**விளக்கம்:**

- பணிபுரியும் இடங்களில் பாலியல் தொல்லையைக் கையாளவும், தடுக்கவும் தற்போதுள்ள சட்டம் மற்றும் நிறுவன வரைமுறைகளை ஆராயவும், உள்துறையமைச்சர் ராஜ்நாத் சிங் தலைமையில் மத்திய அரசு அமைச்சர்கள் குழுவை அமைத்துள்ளது. இக்குழு தற்போதுள்ள விதிமுறைகளை சிறப்பாக அமல்படுத்துவதற்கும், பணியிடங்களில் பாலியல் தொல்லை தொடர்பான பிரச்சனைகளை சரிசெய்ய சட்டம் மற்றும் நிறுவன வரைமுறைகளை வலுப்படுத்துவதற்கும் தேவையான செயல்பாட்டுக்கு பரிந்துரைகளை அளிக்கும்.

13. பாம்பே உயர்நீதிமன்றத்தின் புதிய தலைமை நீதிபதி யார்?

**விடை: நரேஷ் ஹரிஷ்சந்திர பாட்டில்**

**விளக்கம்:**

- நீதிபதி நரேஷ் ஹரிஷ்சந்திர பாட்டில், பாம்பே உயர்நீதிமன்றத்தின் புதிய தலைமை நீதிபதியாக பதவியேற்றார். ஆளுநர் மாளிகையில் நடந்தவிழாவில் மகாராஷ்டிர ஆளுநர் C. வித்யாசாகர் ராவ் அவருக்கு பதவிப்பிரமாணம் செய்துவைத்தார். பாம்பே உயர்நீதிமன்றம், இந்தியாவின் மிகப் பழமையான

உயர்நீதிமன்றங்களுள் ஒன்றாகும். மகாராஷ்டிரா, கோவா ஆகிய மாநிலங்களும், டாமன் டையூ, தாத்ரா மற்றும் நாகர் ஹவேலி ஆகிய யூனியன் பிரதேசங்களும் இதன் அதிகார வரம்புக்குள் உள்ளன.

# அறிவியல் மற்றும் தொழில்நுட்பம்

1. கோதுமை தானியத்தில் எந்த நுண்ணூட்டச்சத்தின் அடர்த்திக்கு பொறுப்பான கோதுமை மரபணுத் தொகுதிக் கூறை அறிவியலாளர்கள் அண்மையில் கண்டறிந்துள்ளனர்?

**விடை: துத்தநாகம்**

**விளக்கம்:**

- கோதுமை தானியத்தில் துத்தநாக நுண்ணூட்டச்சத்தின் செறிவுக்குப் பொறுப்பான கோதுமை மரபணுத் தொகுதிக் கூறை அறிவியலாளர்கள் அண்மையில் கண்டறிந்துள்ளனர். அவர்கள் கோதுமையிலுள்ள துத்தநாக செறிவுகளில் ஈடுபட்டுள்ள வேட்பு மரபணுக்களையும் அடையாளம் கண்டுள்ளனர். இக்கண்டுபிடிப்புகள், மேம்பட்ட அளவிலான நுண்ணூட்டச் சத்துக்கள் நிறைந்த கோதுமை வகைகளை உருவாக்க உதவும்.
- ஆராய்ச்சியாளர்கள் 39 பதிய மூலக்கூறுக் குறிகள் மற்றும் இரு மரபணுப்பிரிவுகளைக் கண்டறிந்துள்ளனர். இந்தியா மற்றும் மெக்சிகோவில் பல்வேறு சூழல்களில் மொத்தம் 330 கோதுமை வகைகள் பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளன. மனித நோய் ஆராய்ச்சியில் பயன்படுத்தப்பட்ட மரபணுத் தொகுதி பரவலான தொடர்பு அணுகுமுறை, இந்த ஆய்வில் துத்தநாகம் சம்பந்தப்பட்ட மரபணு பிரிவுகளை கண்டுபிடிப்பதற்காக பயன்படுத்தப்பட்டது.

2. 'மெட் வாட்ச்' என்ற புதுமையான அலைபேசி சுகாதார செயலியை அறிமுகம் செய்துள்ள இந்திய ஆயுதப்படை எது?

**விடை: இந்திய விமானப்படை**

**விளக்கம்:**

- பிரதமரின் தொலைநோக்கு திட்டங்களான ‘டிஜிட்டல் இந்தியா, ஆயுஷ்மான் பாரத் மற்றும் இந்தியா தனுஷ் இயக்கம்’ ஆகியவற்றை மனதில் நிறுத்தி, இந்திய விமானப்படையானது தனது 86 ஆவது ஆண்டுவிழாவின்போது, ‘மெட் வாட்ச் - MedWatch’ என்ற புதுமையான அலைபேசி சுகாதார செயலியை அறிமுகம் செய்தது. இந்திய விமானப்படை மருத்துவர்களின் சிந்தனையில் உருவான இந்தச் செயலியை, சுழிய நிதி செலவினத்துடன் தகவல் தொழில்நுட்ப இயக்குநரகம் உள்நாட்டிலேயே உருவாக்கியுள்ளது.
- ‘மெட் வாட்ச்’ சரியான, அறிவியல் பூர்வமான மற்றும் சுகாதார தகவலை விமானப் படை வீரர்களுக்கும், இந்தியாவின் அனைத்து குடிமக்களுக்கும் வழங்கும். இச்செயலியை, ‘www.apps.mgov.gov.in’ என்ற இணையதளத்தில் பதிவிறக்கம் செய்துகொள்ளலாம். இதனை, விமானப்படை தலைமை தளபதி BS தனோவா, புது தில்லியில் அறிமுகம் செய்து வைத்தார்.

3. திறந்தவெளி சிறைச்சாலைகளில் உள்ள பெண் கைதிகள் மற்றும் தங்கியுள்ளோருக்காக ‘ஸ்மார்ட் வீடியோ அழைப்பு’ வசதியை அறிமுகம் செய்துள்ள மாநில சிறைத்துறை எது?

**விடை: மகாராஷ்டிரா**

**விளக்கம்:**

- மகாராஷ்டிரா மாநிலத்தில் சிறைகளில் உள்ள பெண் கைதிகள், தங்களது குடும்பத்தினருடன் ‘காணொளி அழைப்பு’ மூலம் பேசும் வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. நாட்டிலேயே முதன் முறையாக முதலில் புனேவில் உள்ள ஏரவாடா மத்திய சிறையில் இந்தத் திட்டம் சோதனை முயற்சியாக செயல்படுத்தப்பட்டது. அதன் பின்னர் மாநிலம் முழுவதுமுள்ள பெண் கைதிகள் மற்றும் திறந்தவெளி சிறைச்சாலை கைதிகளுக்கு இந்தத் திட்டம் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.
- இதற்காக சிறைக்கைதிகள் நல நிதியிலிருந்து ஆண்ட்ராய்டு திறன்பேசிகள் வாங்கப்பட்டுள்ளன. இதன்மூலம் குறிப்பிட்ட நாளில் 5 நிமிடத்துக்கு கைதிகள் தங்களது குடும்பத்தாரோடு பேசலாம். 5 நிமிடம் பேச ரூ.5 கட்டணமாக வசூலிக்கப்படும்.

4. விண்வெளி அறிவியலுக்காக சதீஷ் தவான் மையம் ஒன்றை அமைப்பதற்கு எந்த மாநில பல்கலைக்கழகத்துடனான ஒப்பந்தத்தில் ஐளுசுழு கையெழுத்திட்டுள்ளது?

**விடை: ஜம்மு**

**விளக்கம்:**

- இந்திய விண்வெளி ஆராய்ச்சி மையம் தனது இருப்பை இந்தியாவின் வடகோடி மாநிலம் வரை விரிவுபடுத்தும் நோக்கோடு, விண்வெளி அறிவியலுக்காக சதீஷ் தவான் மையம் ஒன்றை அமைப்பதற்கு, மத்திய ஜம்மு பல்கலைக்கழகத்துடனான ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது. 1150 சதுர மீட்டரில் இந்த மையம் அமைக்கப்படவுள்ளது. இது இயற்கை வளங்களை நீடித்த முறையில் பயன்படுத்தவும், நிலப்பயன்பாடு திட்டமிடலுக்கும் உதவும் புவியிடஞ்சார்ந்த தரவு (Geospatial Data) பகுப்பாய்வைக் கொண்டிருக்கும்.
- வளிமண்டல ஆய்வுகளுக்கான தரையமை ஆய்வகங்கள், வட இந்தியாவின் ஆறுகளில் பருவ காலங்களில் உருவாகும் பனிக்கட்டி மற்றும் பனிப்பாறைகள் ஆகியவற்றில் சேமிக்கப்படும் நீரின் சிறந்த பயன்பாட்டிற்கான ஆய்வுகளுக்காக வளிமண்டல உணர்திறன் மற்றும் பனிக்கட்டி ஆய்வகங்களையும் இது கொண்டிருக்கும்.

5. விவசாயம் மற்றும் சுகாதாரம் ஆகிய துறைகளில் AI(Artificial Intelligence) கருவிகளின் பயன்பாட்டை கொண்டு வருவதற்காக, எந்தத் தொழில்நுட்ப நிறுவனத்துடனான ஒப்பநதத்தில் NITI ஆயோக் கையெழுத்திட்டுள்ளது?

**விடை: மைக்ரோசாப்ட்**

**விளக்கம்:**

- விவசாயம், சுகாதாரம் போன்ற பல்வேறு துறைகளில் உள்ள சவால்களை எதிர்கொள்வதற்காக அத்துறைகளில் செயற்கை நுண்ணறிவு (AI) கருவிகளின் பயன்பாட்டை கொண்டு வருவதற்கு, மைக்ரோசாப்ட் நிறுவனத்துடனான ஒப்பந்தத்தில் HITI ஆயோக் கையெழுத்திட்டுள்ளது. இந்த ஒப்பந்தத்தின்படி, மைக்ரோசாப்ட் நிறுவனம் தனது செயற்கை நுண்ணறிவு, ஆராய்ச்சி மற்றும் நேரடி நிபுணத்துவத்தை இணைத்து HITI ஆயோக்கின் புதிய முயற்சிகளுக்கு ஆதரவு தரும்.

6. ‘FH – 98’ என்ற போக்குவரத்துக்கான உலகின் மிகப்பெரிய ஆளில்லா விமானத்தை வெற்றிகரமாக சோதித்துள்ள நாடு எது?

**விடை: சீனா**

**விளக்கம்:**

- போக்குவரத்துக்கான உலகின் மிகப்பெரிய ஆளில்லா விமானத்தை சீனா வெற்றிகரமாக சோதனை செய்துள்ளது. Feihong-98(FH – 98) என்று பெயரிடப்பட்டுள்ள அந்த விமானம் ஏறத்தாழ 5.35 டன் எடை கொண்ட பொருட்களைச் சுமந்து செல்லும் திறன் கொண்டது. சீன விண்வெளி தொழில்நுட்பக் கழகம் தயாரித்துள்ள இந்த விமானம் வடக்கு சீனாவின் இன்னர் மங்கோலியா பகுதியில் உள்ள என்ற இடத்தில் வெற்றிகரமாக சோதனை செய்து பார்க்கப்பட்டது.
- 4,500 மீ., உயரத்தில் 180 கி.மீ., வேகத்தில் பறக்கும் திறன்கொண்ட FH -98, 1,200 கிலோ மீட்டர் சுற்றளவிற்கு கண்காணிக்கும் திறமையும் கொண்டது. இந்த விமாணத்தின் மூலம் பெருமளவு ஆயுதங்களை வீர்களுக்கும் திறமையும் கொண்டது. இந்த விமானத்தின் மூலம் பெருமளவு ஆயுதங்களை வீர்களுக்குமஈ குறிப்பிட்ட இடங்களுக்கும் கொண்டுசெல்ல முடியும்.

7. என்னும் உதவி சேவை திட்டத்தை தொடங்கிவுள்ள இந்தியாவின் முதல் மற்றும் ஒரே அரசு நிறுவனம் எது?

**விடை: IRCTC**

**விளக்கம்:**

- இந்தியத் தொடர்வண்டி உணவுவழங்கல் மற்றும் சுற்றுலாக் கழகமானது (IRCTC) தான் வழங்கும் பல்வேறு சேவைகள் குறித்த வாடிக்கையாளர்களின் வினாக்களுக்கு பதிலளிக்கும் வகையில், செயற்கை நுண்ணறிவு (AI) தொழில்நுட்பத்தில் இயங்கும் அரட்டை இயலியான (chatbot) – ‘Ask Disha’ வை (Digital Interaction to Seek Help Anytime) அறிமுகப்படுத்தியுள்ளது. இதனை

IRTCTC-யும், CoRover என்ற தனியார் நிறுவனமும் இணைந்து உருவாக்கியுள்ளன.

8. புதன் கோளை ஆய்வுசெய்வதற்காக 'Bepi Colombo' என்ற ஆளில்லா விண்கலத்தை வெற்றிகரமாக ஏவியுள்ள விண்வெளி நிறுவனங்கள் எவை?

**விடை: ஐரோப்பிய விண்வெளி நிறுவனம் மற்றும் JAXA**

**விளக்கம்:**

- ஐரோப்பிய விண்வெளி ஆய்வு நிறுவனமும், ஜப்பானிய விண்வெளி ஆய்வு நிறுவனமும் (JAXA) இணைந்து தயாரித்த புதன் கோளை ஆய்வு செய்யக்கூடிய பெபி கொலம்போ (Bepi Colombo) என்ற ஆளில்லா விண்கலம், பிரெஞ்சு கயானா விண்வெளி ஆய்வு மையத்திலிருந்து வெற்றிகரமாக ஏவப்பட்டுள்ளது. புதன் கோளுக்கு அனுப்பப்படவுள்ள மூன்றாவது செயற்கைக் கோளான இது ஏழு ஆண்டுகள் பயணித்து 2025 ஆம் ஆண்டு புதனின் சுற்று வட்டப்பாதையை அடையவுள்ளது.
- இந்த பெபி கொலம்போ விண்கலமானது டீநிை மற்றும் ஆழை ஆகிய இரு ஆய்வு விண்கலங்களை புதனுக்குக் கொண்டு செல்கின்றது. இந்த விண்கலத்தின் செயல்திட்டமானது புதன் கோளின் மின்காந்தப் புலம் மற்றும் அதன் உடலமைப்பு, மேற்பரப்பு ஆகியவை குறித்து முக்கியமாக ஆய்வு செய்யவுள்ளது. பெபி கொலம்போ பூமியைச் சுற்றி ஒரு fly-by மற்றும் வெள்ளியைச் சுற்றி இரு fly-by மற்றும் புதனைச் சுற்றி 6 fly-by ஆகியவற்றைக் கடந்தே புதன் கோளின் சுற்று வட்டப்பாதைக்குள் செல்லும்.

9. எந்த விண்வெளி நிறுவனத்தின் அறிவியலாளர்கள் கோள்களுக்கு ஆபத்து விளைவிக்கும் இளஞ்சிவப்பு குறு விண்மீன்களின் நடுக்கத்தை கண்டறிந்துள்ளனர்?

**விடை: NASA**

**விளக்கம்:**

- கோள்களின் வளிமண்டலத்துக்கு பாதிப்பு ஏற்படுத்தும் இளஞ்சிவப்பு குறு விண்மீன்களின் நடுக்கத்தை (Young Red Dwarf Stars Flares) ஹப்பிள் தொலைநோக்கியை பயன்படுத்தி NASA அறிவியலாளர்கள் கண்டறிந்துள்ளனர்.

HAZMAT – Habitable Zones (வசிக்கத்தக்க மண்டலங்கள்) மற்றும் M குறுவிண்மீன்கள் செயல்பாடுகளின் கண்காணிப்பு என்ற பெருந்திட்டம் மூலமாக ஹப்பிள் தொலைநோக்கி இவ்வகை நட்சத்திரங்களை கண்காணித்து வருகிறது.

10. அண்மையில் இந்திய ஆராய்ச்சியாளர்களால் உருவாக்கப்பட்ட “பாலி-ஆக்சைம்” என்பது ஒரு -------------?

**விடை: தோலில் பூசப்படும் களிம்பு (A Skin Gel)**

**விளக்கம்:**

- மிகப் பொதுவான பூச்சிக்கொல்லி மருந்துகளில் பயன்படுத்தப்படும் கரிம பாஸ்பரஸ் சேர்மங்கள் (Organophosphorous) போன்ற உடல்நலனில் மோசமான விளைவுகளை ஏற்படுத்தும் மற்றும் சில சமயங்களில் அது மாதிரியான பூச்சிக்கொல்லியை கையாளும் விவசாயிகளுக்கு மரணத்தைக் கூட தருவிக்கும் ஆபத்தான இவ்வகை சேர்மங்கள், தோலினால் உறிஞ்சப்படுவதில் இருந்து தற்காத்துக்கொள்வதற்காக, அண்மையில் இந்திய ஆராய்ச்சியாளர்கள் :பாலி-ஆக்சைம்” என்ற புதிய பூசப்படும் களிம்பு ஒன்றை உருவாக்கியுள்ளனர்.

11. SPARC – (Scheme for Promotion of Academic and Research Collaboration) திட்டத்தை செயல்படுத்தும் தேசிய ஒருங்கிணைப்பு நிறுவனம் எது?

**விடை: ஐஐடி கரக்பூர்**

**விளக்கம்:**

- அக்.25 அன்று, மத்திய மனிதவள மேம்பாட்டு அமைச்சர் பிரகாஷ் ஜவடேகர் புது தில்லியில், SPARC – (Scheme for Promotion of Academic and Research Collaboration) - கல்வி மற்றும் ஆராய்ச்சி ஆகியவற்றின் கூட்டு முயற்சியை ஊக்குவித்தல் திட்டத்திற்கான” வலைதளத்தை தொடங்கி வைத்தார். இந்திய மற்றும் வெளிநாட்டு நிறுவனங்களுக்கு இடையில் கல்வி மற்றும் ஆராய்ச்சி கூட்டு முயற்சிகளுக்கு உதவுவதன் மூலம் இந்தியாவின் உயர்கல்வி நிறுவனங்களின் ஆராய்ச்சி சூழலை மேம்படுத்துவதே SPARC திட்டத்தின் நோக்கமாகும்.

12. ஃபேஸ்புக் மற்றும் டுவிட்டரில் போலி செய்திகள் பதிவிடுவதை கண்காணிக்க, இணைய அடிப்படையிலான கருவியை எந்த நாட்டின் ஆராய்ச்சியாளர்கள் உருவாக்கியுள்ளனர்?

**விடை: அமெரிக்கா**

**விளக்கம்:**

- அமெரிக்காவில் உள்ள மிக்சிகன் பல்கலைக்கழக ஆராய்ச்சியாளர்கள், ஃபேஸ்புக் மற்றும் டுவிட்டர் போன்ற சமூக ஊடக தளங்களில் போலி செய்திகளின் தாக்கத்தை கண்காணிக்கும் வகையில் இணைய அடிப்படையிலான கருவியை உருவாக்கியுள்ளனர். இந்தக் கருவி 'Iffy Quotient' எனப்படும் வலைத்தள நல அளவுமுறையை பயன்படுத்துகிறது. இது நேறளறூானி மற்றும் Media Bias/Fact Checker என்ற 2 வெளிப்புற நிறுவனங்களில் தரவை பயன்படுத்துகிறது.

13. எந்த ஐஐடி ஆராய்ச்சியாளர்கள், உள்நாட்டிலேயே உருவாக்கப்பட்ட இந்தியாவின் முதல் நுண்செயலியை (Microprocessor) அறிமுகம் செய்துள்ளனர்?

**விடை: ஐஐடி சென்னை**

**விளக்கம்:**

- சென்னை ஐஐடியை சேர்ந்த ஆராய்ச்சியாளர்கள் அலைபேசி சாதனங்கள், உட்பொதிக்கப்பட்ட குறைந்த ஆற்றலுடைய அமைப்புகள் மற்றும் வலையமைப்புகள் ஆகியவற்றில் பயன்படுத்தப்படக்கூடிய உள்நாட்டிலேயே உருவாக்கப்பட்ட இந்தியாவின் முதலாவது நுண்செயலியை அறிமுகம் செய்துள்ளனர்.
- சண்டிகரில் உள்ள இந்திய விண்வெளி ஆராய்ச்சிக்கழகத்தின் அரைக்கடத்தி ஆய்வகத்தில் இது உருவாக்கப்பட்டது. இதனால் தகவல்தொடர்பு மற்றும் பாதுகாப்பு துறைகளின் தேவைக்காக இறக்குமதி செய்யப்படும் நுண்செயலிகளை நம்பிருத்தல் குறையும்.

14. எந்த ஆராய்ச்சி அமைப்பை சேர்ந்த ஆராயச்சியாளர்கள் அண்மையில், SWAS, SAFAL & STAR என்ற குறைந்த மாசு உண்டாக்கும் பட்டாசுகளை உருவாக்கியுள்ளனர்?

**விடை: CSIR**

**விளக்கம்:**

- அறிவியல் மற்றும் தொழிலக ஆய்வு மன்றத்தில் (CSIR) உள்ள ஆராய்ச்சியாளர்கள் குறைந்த அளவே மாசு ஏற்படுத்தும் 'பசுமை' பட்டாசுகளை உருவாக்கியுள்ளனர். இது சுற்றுச்சூழலுக்கு உகந்ததோடு மட்டுமல்லாமல், வழக்கமானவற்றை காட்டிலும் 15-20% வரை மலிவானது. இந்தப் பட்டாசுகளுக்கு, Safe Water Releaser (SWAS), Safe Minimal Aluminium (SAFAL) மற்றும் Safe Thermite Cracker (STAR) என பெயரிட்டுள்ளது.
- உமிழ்வுகளை 15-30% வரை குறைப்பதற்காக அலுமினியம், பேரியம், பொட்டாசியம் நைட்ரேட் மற்றும் கார்பன் போன்ற பொதுவாக பயன்படுத்தப்படும் மாசு ஏற்படுத்தும் வேதிப்பொருட்கள் இப்பசுமை பட்டாசுகளில் ஒன்று நீக்கப்பட்டுள்ளன அல்லது கூடுமானவரை குறைக்கப்பட்டுள்ளன. இவ்வகை பட்டாசுகளை தூசுகளை அடக்குவதற்காக நீராவி.ஃகாற்றை பயன்படுத்துகின்றன. SWAS & STAR வகை பட்டாசுகள் பொட்டாசியம் நைட்ரேட் மற்றும் கந்தக பயன்பாட்டை நீக்கியுள்ளன.

15. அழுத்தப்பட்ட உயிரி வாயு பயன்பாட்டை ஊக்குவிப்பதற்காக இந்திய அரசு, எந்தப் புதிய முயற்சியை மேற்கொண்டுள்ளது?

**விடை: SATAT**

**விளக்கம்:**

- மத்திய பெட்ரோலியத்துறை அமைச்சர் தர்மேந்திர பிரதான் புது தில்லியில் அக்டோபர் 1 அன்று போக்குவரத்து வாகனங்களுக்கான உயிரி எரிவாயு உற்பத்திக்கான ஆலைகளை அமைக்கும் SATAT(Sustainable Alternative Towards Affordable Transportation) என்ற புதிய திட்டத்தை அறிமுகம் செய்து வைத்தார். இந்தத் திட்டம் தொடர்பாக ஆர்வமுள்ள தொழில்முனைவோரிடம்

இருந்து விருப்பங்களை கேட்டுப்பெறுமாறு, பொதுத்துறை எண்ணெய் நிறுவனங்கள் (இந்தியன் ஆயில், இந்துஸ்தான் பெட்ரோலியம் மற்றும் பாரத் பெட்ரோலியம்) கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளன.

- உயிரிவாயு என்பது கழிவுப்பொருள்கள் ஆக்சிஜன் கிடைக்காத நிலைமையில் உயிரியல் ரீதியில் சேதமாக்கப்படுவதன் மூலம் விளைவிக்கும் வளியாகும். இது உயிர்க்கூற்றுப் பொருளில் இருந்து பிறப்பிக்கப்படுதல் இது ஒரு உயிரி எரிபொருள் ஆகும்.

# விளையாட்டு நிகழ்வுகள்

1. நிகழாண்டின் ஆசிய ஆண்கள் ஹாக்கி சாம்பியன்ஸ் கோப்பைக்கான போட்டியில் இந்திய அணியை வழிநடத்தவுள்ளனர் யார்?

**விடை: மன்ப்ரீத் சிங்**

**விளக்கம்:**

- இந்தியா ஹாக்கி அணியின் அணித் தலைவர் சர்தார் சிங் கடந்த சில வாரங்களுக்கு முன்னர் ஹாக்கி போட்டியிலிருந்து ஓய்வுபெறுவதாக அறிவித்தார். இதையடுத்து, ஆசிய அணிகளுக்கான 5 ஆவது ஆசிய சாம்பியன்ஸ் ஹாக்கி தொடர் அக்டோபர் 18 ஆம் தேதி முதல் 28 ஆம் தேதி வரை மஸ்கட்டில் நடைபெறவுள்ளது. இதில் இந்தியா, பாகிஸ்தான், மலேசியா, தென் கொரியா, ஓமன் மற்றும் ஜப்பான் அணிகள் பங்கேற்கின்றன.

2. ஏர்டெல் தில்லி அரை தொடரோட்ட நிகழ்வுக்கான தூதராக சாய்னா ரிச்சர்ட்ஸ்-ரோஸ் நியமிக்கப்பட்டுள்ளார். இவர் எந்த நாட்டைச் சேர்ந்தவர்?

**விடை: அமெரிக்கா**

**விளக்கம்:**

- அக்.21 அன்று நடைபெறவுள்ள ஏர்டெல் தில்லி அரை தொடரோட்ட நிகழ்வின் தூதராக 4 முறை ஒலிம்பிக் தங்கம் வென்ற தடகள வீராங்கனை சாய்னா ரிச்சர்ட்ஸ் - ரோஸ் நியமிக்கப்பட்டுள்ளார். 2006 ஆம் ஆண்டு IAAF உலகக்கோப்பையில் 400மீ, வரலாற்றில் 48.70 வினாடிகளில் மிக விரைவாக கடந்த அமெரிக்க பெண் இவராவார்.

3. மூன்றாவது இளைவோர் ஒலிம்பிக் போட்டியில், இந்திய அணியின் கொடி ஏந்தி வரவுள்ளவர் யார்?

**விடை: மனு பாகர்**

**விளக்கம்:**

- அக் 6 முதல் 18 ஆம் தேதி வரை அர்ஜென்டினாவின் பியூன்ஸ் ஏர்சில் நடைபெறவுள்ள 3 ஆவது இளையோர் ஒலிம்பிக் போட்டியில், இந்திய அணியின் கொடியை துப்பாக்கிசுடுதல் வீராங்கனை மனு பாகர் ஏந்திச்செல்வுள்ளவர். கோவா ஒலிம்பிக் சங்கத்தின் செயலாளர் குருதத்தா D பக்தா, இந்தப் போட்டியில் பங்கேற்கும் இந்திய தேசிய அணியின் தலைவராக (Chef-de-Mission) நியமிக்கப்பட்டுள்னார்.

4. 3ஆவது பாராலிம்பிக் ஆசிய விளையாட்டுப் போட்டியில், இந்திய அணியின் கொடியை ஏந்தி வரவுள்ளவர் யார்?

**விடை: தங்கவேலு மாரியப்பன்**

**விளக்கம்:**

- அக். 6 முதல் 13 ஆம் தேதி வரை ஜகார்த்தாவில் நடைபெறவுள்ள ஆசிய பாராலிம்பிக் போட்டியில் இந்திய அணி தமிழ்நாட்டு வீரர் தங்கவேலு மாரியப்பன் கொடியேந்தி தலைமை தாங்கிச் செல்வார் என அறிவிக்கப்பட்டுள்ளது. பிரேசில் ரியோ பாரா ஒலிம்பிக் போட்டியில் தங்கவேலு மாரியப்பன் தங்கப் பதக்கம் வென்றிருந்தார்.

5. நிகழாண்டின் ஐடீஎுகு உலக U – 16 ஸ்னூக்கர் சாம்பியன்சிப்பில், சிறுமியர் பட்டத்தை வென்ற இந்திய வீராங்கனை யார?

**விடை: கீர்த்தனா பாண்டியன்**

**விளக்கம்:**

- ரஷ்யாவின் செமின்ட் பீட்டர்ஸ்பர்க்கில், சர்வதேச பில்லியார்ட்ஸ் மற்றும் ஸ்னூக்கர் கூட்டமைப்பு நடத்திய U – 16 ஸ்னூக்கர் சாம்பியன்ஷிப் தொடரின் சிறுமியர்களுக்கான பிரிவில், இந்தியாவின் கீர்த்தனா, பெலாரசின் அல்பினா லேசுக்கை 3-1 என்ற கணக்கில் வென்று சாம்பியனானார்.

6. யூத் ஒலிம்பிக்கில் பதக்கம் வென்ற இந்தியாவின் முதல் ஜூடோ வீராங்கனை யார்?

**விடை:** தபாபி தேவி தங்ஜம்

**விளக்கம்:**

- அர்ஜென்டினாவில் பியூனஸ் ஏர்ஸ் நகரில் நடைபெற்றுவரும் இளையோர் ஒலிம்பிக் போட்டியின் பெண்கள் ஜூடோ 44 கி.கி. எடைப்பிரிவில், ஆசிய கேடட் சாம்பியன் தபாபி தேவி தங்ஜம் வெள்ளிப்பதக்கம் வென்றார். இதன்மூலம் இவர் ஒட்டுமொத்த ஒலிம்பிக் (சீனியர், இளையோர்) வரலாற்றில் ஜூடோ போட்டியில் பதக்கம் வென்ற முதல் இந்தியரானார்.

7. நிகழாண்டின் கோடைகால இளையோர் ஒலிம்பிக்கில் இந்தியாவின் முதல் தங்கத்தை வென்றவர் யார்?

**விடை: ஜெரெமி லால்ரின்னுங்கா**

**விளக்கம்:**

- அக்.9 அன்று அர்ஜென்டினாவில் நடந்த கோடைகால இளையோர் ஒலிம்பிக்கின் ஆண்கள் பளு தூக்குதலில், ஆண்கள் 62 கி.கி., எடைப்பிரிவில் பங்கேற்ற இந்திய வீரர் ரேமி லால்ரின்னுங்கா, ஸ்நாட்ச் முறையில் 124 கி.கி., மற்றும் கிளீன் மற்றும் ஜெர்க் முறையில் 150கி.கி., என மொத்தம் 274 கி.கி. பளுவை தூக்கி முதலிடம் பிடித்து தங்கம் வென்று சாதனை படைத்தார். இதன்மூலம் இளையோர் ஒலிம்பிக்கில் தங்கம் வென்ற முதல் இந்திய வீரர் என்ற சாதனையை அவர் படைத்துள்ளார்.

8. நிகழாண்டின் ஜாகர்த்தா ஆசிய பாரலிம்பிக் போட்டிகளில், இந்தியாவின் முதல் தங்கப் பதக்கத்தை வென்றவர் யார்?

**விடை: சந்தீப் சௌத்ரி**

**விளக்கம்:**

- அக்.8 அன்று ஜகார்த்தாவில் நடந்த ஆசிய பாராலிம்பிக்கின் ஆடவர் ஈட்டியெறிதலில் இந்திய வீரர் சௌத்ரி 60.01 மீ., தூரம் ஈட்டியெறிந்து தங்கம் வென்றார். 49 கி.கி., பளுதூக்குதல் பிரிவில் ∴பர்மன் பாஷா வெள்ளியும், பரம்ஜீத் கௌர் வெண்கலத்தையும் வென்றனர்.

9. 2018 கோடைகால இளையோர் ஒலிம்பிக்கில், தங்கப்தக்கம் வெல்லும் இந்தியாவின் முதல் துப்பாக்கி சுடும் வீராங்கனை யார்?

**விடை: மானு பாக்கர்**

**விளக்கம்:**

- அக்.9 அன்று அர்ஜென்டினாவில் நடந்த கோடைகால இளையோர் ஒலிம்பிக்கின் பெண்கள் துப்பாக்கி சுடுதல் 10மீ, 'ஏர் பிஸ்டல்' பிரிவில் இந்தியாவின் இளம் வீராங்கனை மானு பாக்கர் 236.5 புள்ளிகளை குவித்து துப்பாக்கிசுடுதலில் இந்தியாவின் முதல் தங்கத்தை வென்று சாதனை படைத்தார். இதன்மூலம், நடந்து வரும் நிகழ்வில் தங்கம் வென்ற முதல் இந்தியப் பெண் ஆனார்.

10. 2018 இளையோர் ஒலிம்பிக் போட்டிகளில், 10 மீ, 'ஏர் பிஸ்டல்' நிகழ்வில் தங்கம் வென்ற இந்தயர் யார்?

**விடை: சௌரவ் சௌத்ரி**

**விளக்கம்:**

- பியூனஸ் ஏர்ஸ் நகரில் நடைபெற்று வரும் யூத் ஒலிம்பிக் போட்டியில் இந்தியாவின் இளம் வீரர் சௌரவ் சௌத்ரி, துப்பாக்கி சுடுதல் 10 மீ., 'ஏர் பிஸ்டல்' பிரிவில் 244.2 புள்ளிகள் குவித்து தங்கம் வென்றார். முன்னதாக பெண்கள் 10 மீ., 'ஏர் பிஸ்டல் 236.5 புள்ளிகள் குவித்து மானு பாக்கர் தங்கம் வென்றிருந்தது குறிப்பிடத்தக்கது. அதேசமயம், இந்தியாவின் முதலாவது யூத் ஒலிம்பிக் தங்கத்தை பளுதூக்கும் வீரர் ஜெரேமி லால்ரினுங்கா வென்றதும் குறிப்பிடத்தக்கது.

11. 2018 ஜகார்த்தா ஆசிய பாரா-விளையாட்டுப் போட்டிகளின் ஆடவர் தனநபர் 'ரீகர்வ்' வில் வித்தைப் போட்டியில் தங்கம் வென்ற இந்திய வீரர் யார்?

**விடை: ஹர்விந்தர் சிங்**

**விளக்கம்:**

- அக்.10 அன்று நடைபெற்ற ஆசிய பாரா விளையாட்டுப் போட்டிளின் ஆடவர் தனிநபர் 'ரீகர்வ்' வில்வித்தைப் போட்டியில் W2/ST பிரிவு (உடலின் கீழ்ப்பகுதிப் பக்கவாதம்) மாற்றுத்திறனாளிகளுக்கான இறுதிச்சுற்றில் இந்தியாவின் ஹர்விந்தர்

சிங் 6-0 என்ற புள்ளிக்கணக்கில் சீனாவின் ஜாவ் லிக்ஸை வீழ்த்தி தங்கம் வென்றார்.

12. 2018 ஆசிய பாரா விளையாட்டுகளின் ஆண்கள் கு46 பிரிவில், வெள்ளி வென்ற இந்திய வீரர் யார்?

**விடை: சுந்தர் சிங் குர்ஜார்**

**விளக்கம்:**

- 2018 ஆசிய பாரா விளையாட்டுகளில் கை பாதிப்பு, தசை செயலிழப்பு போன்றவர்களுக்கான ஆண்கள் F46 பிரிவில் ஈட்டெறிதல் சுந்தர் சிங் 6133 மீ., தூரம் எறிந்து வெள்ளி வென்றார். ரிங்கு 60.92மீ., தூரம் எறிந்து வெண்கலம் வென்றார். இரண்டு முறை பாராலிம்பிக்கில் தங்கம் வென்ற இந்தியாவின் தேவேந்திரா ஜஜாரியா நான்காவது இடம் பெற்றார்.

13. 2022 இளையோர் ஒலிம்பிக் போட்டிகளை நடத்தவுள்ள ஆப்பரிக்க நாடு எது?

**விடை: செனகல்**

**விளக்கம்:**

- 2022 ஆம் ஆண்டு இளையோர் ஒலிம்பிக் போட்டிகளை ஆப்பிரிக்க செனகல் நடத்தவுள்ளதாக சர்வதேச ஒலிம்பிக் கமிட்டி அறிவித்துள்ளது. ‘தாகர் 2022’ என பெயரிடப்பட்டுள்ள யூத் ஒலிம்பிக் போட்டியானது தாகர், புதிய நகரம் தியாம்நதியோ, மற்றும் கடற்கரை நகரம் சால் ஆகிய மூன்று இடங்களில் நடத்தப்படவுள்ளது. வறண்ட பருவகாலத்தின் இறுதியில் ஏற்படும் வெப்பமண்டல நோய்களின் தாக்கத்தை பெரிதும் குறைப்பதற்காக மே அல்லது ஜூன் மாதங்களில் இந்த விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்படவுள்ளன.

14. நிகழாண்டின் சுல்தான் ஜோக்கர் கோப்பை ஜூனியர் ஹாக்கி போட்டியில் வென்ற நாடு எது?

**விடை: பிரிட்டன்**

**விளக்கம்:**

- அக்.13 அன்று மலேசியாவின் ஜோஹோர் பாருவில் நடந்த 8 ஆவது சுல்தான் ஜோகர் கோப்பை ஜூனியர் ஹாக்கி போட்டியில், இந்தியாவை 3-2 என்ற

கணக்கில் தோற்கடித்து கிரேட் பிரிட்டன் அணி கோப்பையை வென்றது, ஜப்பான், ஆஸி, மலேசியா மற்றும் நியூசிலாந்து ஆகியவை போட்டியில் பங்கேற்ற பிற அணிகளாகும்.

15. நிகழாண்டின் ஷாங்காய் மாஸ்டர்ஸ் டென்னிஸ் போட்டியில் வென்றவர் யார்?

**விடை: நோவக் ஜோகோவிச்**

**விளக்கம்:**

- சீனாவின் ஷாங்காய் நகரில் நடந்த ஷாங்காய் மாஸ்டர்ஸ் டென்னிஸ் போட்டியில், செர்பிய டென்னிஸ் வீரர் நோவக் ஜோகோவிச், குரோஷிய வீரர் போர்னா கோரிக்கை 6-3, 6-4 என்ற நேர் செட்களில் வென்று சாம்பியன் பட்டத்தை கைப்பற்றினார். 14 முறை கிராண்ட்ஸ்லாம் பட்டம் வென்ற அவர் தொடர்ந்து 18 ATP போட்டிகளில் பட்டம் வென்றுள்ளார். இதன்மூலம், பெடரரிடம் இருந்த இரண்டாமிடத்தை ஜோகோவிச் கைப்பற்றியுள்ளார். இது ஜோகோவிச் வெல்லும் நான்காவது ஷாங்காய் மாஸ்டர்ஸ் பட்டமாகும்.

16. 2018 ஆண்கள் ஹாக்கி உலகக் கோப்பைக்கான அதிகாரப்பூர்வ சின்னம் எது?

**விடை: Olly**

**விளக்கம்:**

- 14 ஆவது ஆண்கள் ஹாக்கி உலகக்கோப்பை போட்டிகள் வரும் நவம்பர் 28 முதல் டிசம்பர் 16 வரை புவனேசுவரில் உள்ள கலிங்கா அரங்கத்தில் நடைபெறவுள்ளது. ஒடிசா மாநிலத்தின் பூரி கடற்கரையில், இப்போட்டியின் அதிகாரப்பூர்வ சின்னமாக ஆலி ஆமை அறிவிக்கப்பட்டுள்ளது.
- நிகழ்வுக்கான விளம்பரத்துடன், ஒடிசாவில் அழிவின் விளிம்பிலிருப்பதாகக் கூறப்படும் ஆலிவ் ரிட்லி ஆமைகளின் பாதுகாப்பு பற்றிய விழிப்புணர்வையும் இது நோக்கமாகக் கொண்டுள்ளது. 18 நாள் நடைபெறும் இந்நிகழ்வில் இந்தியா உட்பட 16 நாடுகள் பங்கேற்கின்றன.

17. 2018 இளையோர் ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டிகளில், இந்தியாவின் முதல் பதக்கத்தை வென்றவர் யார்?

**விடை: சுராஜ் பன்வார்**

**விளக்கம்:**

- அர்ஜென்டினாவின் பியூன்ஸ் ஏர்சில் நடைபெற்று வரும் இளையோர் ஒலிம்பிக் போட்டியில், ஆடவர் 5000மீ., நடை பந்தயத்தில் இந்திய வீரர் சுராஜ் பன்வார் வெள்ளிப்பதக்கம் வென்றார். இதன்மூலம், இம்முறை தடகளத்தில் இந்தியாவுக்கு முதல்முறையாக பதக்கம் கிடைத்துள்ளது. ஒட்டுமொத்த இளையோர் ஒலிம்பிக் வரலாற்றில் இந்தியாவுக்கு மூன்றாவது பதக்கம் வென்ற தடகள வீரர் என்ற பெருமையை பன்வார் பெற்றுள்ளார்.

18. 2018 இளையோர் ஒலிம்பிக் போட்டிகளில், வில்வித்தை போட்டியில் இந்தியாவின் முதல் வெள்ளிப்பதகத்தை வென்றவர் யார்?

**விடை: ஆகாஷ் மாலிக்**

**விளக்கம்:**

- இளையோர் ஒலிம்பிக் போட்டிகளில், வில்வித்தை போட்டியில் இந்தியாவின் ஆகாஷ் மாலிக், வெள்ளி வென்றார். இதன்மூலம், இளையோர் ஒலிம்பிக் போட்டிகளின் வில்வித்தை போட்டியில் இந்தியாவுக்கு முதல் வெள்ளிப்பதக்கம் வென்றுதந்த வீரர் என்ற பெருமையை ஆகாஷ் மாலிக் பெற்றுள்ளார். ஆடவர் தனிநபர் 'ரீகர்வ்' பிரிவின் இறுதிச்சுற்றில் ஆகாஷ், அமெரிக்காவின் டிரென்டன் கௌலஸ்சிடம் 0-6 என்ற புள்ளிகள் கணக்கில் வீழந்தார்.

19. நடப்பாண்டு விஜய் ஹசாரே கோப்பையை வென்ற கிரிக்கெட் அணி எது?

**விடை: மும்பை**

**விளக்கம்:**

- பெங்களூரு சின்னசாமி மைதானத்தில் நடந்த விஜய் ஹசாரே கிரிக்கெட் கோப்பை போட்டியில், மும்பை அணி 4 விக்கெட் வித்தியாசத்தில் தில்லியை வீழ்த்தி 11 ஆண்டுகளுக்கு பிறகு சாம்பியன் பட்டம் வென்றது. இது அவர்களின் மூன்றாவது சாம்பியன் பட்டமாகும். மும்பை அணி இறுதியாக கடந்த 2006-07

ஆம் ஆண்டில் ராஜஸ்தானை தோற்கடித்து விஜய் ஹசாரே கோப்பையை வென்றிருந்தது குறிப்பிடத்தக்கது.

20. பிரிட்டனில் உள்ள லீட்ஸ் நகரில் நடப்பாண்டு உலக பில்லியர்ட்ஸ் சாம்பியன் பட்டத்தை வென்ற இந்திய வீரர் யார்?

**விடை: சௌரவ் கோத்தாரி**

**விளக்கம்:**

➢ பிரிட்டனில் உள்ள லீட்ஸ் நகரத்தில் நடந்த உலக பில்லியர்ட்ஸ் தொடரின் இறுதிப் போட்டியில் இந்திய வீரர் சௌரவ், சிங்கப்பூரின் பீட்டர் கில்கிறிஸ்டை 1134-944 என்ற கணக்கில் தோற்கடித்து முதன்முறையாக சாம்பியன் பட்டத்தை கைப்பற்றினார். இதன்மூலம் கடந்த 2016 ஆம் ஆண்டில் பெங்களுருவில் நடந்த உலக பில்லியர்ட்ஸ் சாம்பியன்ஷிப் இறுதிப் போட்டியில், பீட்டர் கில்கிறிஸ்டிடம் கண்ட தோல்விக்கு சௌரவ் கோத்தாரி பதிலடி தந்தார்.

21. U – 21 பெல்ஜியம் ஓப்பன் தொடரில், வெள்ளிப்பதக்கம் வென்ற இந்திய டேபிள் டென்னிஸ் வீராங்கனை யார்?

**விடை: ஜஹிகா முகர்ஜி**

**விளக்கம்:**

➢ ITTF பெல்ஜியம் ஓப்பன் தொடரில் 21 வயதுக்குட்பட்டோருக்கான பெண்கள் பிரிவு இறுதிப் போட்டியில், இந்தியாவின் ஐஹிகா முகர்ஜி, தென் கொரியாவின் யூஜின் கிம்மிடம் 1-3 என்ற கணக்கில் தோல்வியடைந்து வெள்ளிப்பதக்கம் வென்றார். இதன் ஆடவர் இரட்டையர் பிரிவில், அமல்ராஜ், சனில் ரெட்டி ஜோடி 0-3 என்ற கணக்கில் தோல்வியடைந்து வெண்கலம் வென்றது.

22. 2018 ஆசிய ஆண்கள் ஹாக்கி சாம்பியன்ஸ் கோப்பையில், சிறந்த வீரராக அறிவிக்கப்பட்ட இந்திய வீரர் யார்?

**விடை: ஆகாஷ்தீப் சிங்**

**விளக்கம்:**

➢ அக்.28 அன்று ஓமன் தலைநகர் மஸ்கட்டில் நடந்த ஆசிய சாம்பியன்ஸ் கோப்பை ஹாக்கிபோட்டி இறுதியாட்டம் கடும் மழையால் பாதிக்கப்பட்ட

நிலையில், நடப்பு சாம்பியன் இந்தியா மற்றும் பாகிஸ்தான் அணிகள் கூட்டாக பட்டம் வென்றதாக அறிவிக்கப்பட்டது. 13 புள்ளிகளுடன் இந்தியா முதலிடம் வென்றது. பாகிஸ்தான் 10 புள்ளிகளுடன் இரண்டாமிடம் வென்றது.

# பொருளாதார நிகழ்வுகள்

1. UNCTAD'ன் அண்மைய "வர்த்தகம் மற்றும் வளர்ச்சி அறிக்கையின்படி, 2018 ஆம் ஆண்டுக்கான இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வளர்ச்சி முன்கணிப்பு என்ன?

**விடை: 7.0%**

**விளக்கம்:**

- 2017 ஆம் ஆண்டில் 6.2 சதவீதமாக இருந்த GDP யை ஒப்பிடும் போது, 2018 ஆம் ஆண்டில் அது 7.0 சதவீதமாக அதிகரிக்கும் என்று வர்த்தகம் மற்றும் மேம்பாட்டுக்கான ஐ.நா. கூட்டமைப்பு (UNCTAD) எதிர்பார்க்கிறது. இந்த அறிக்கையின்படி, பொருளாதாரத்தில் உள்ள தனியார் நுகர்வு போக்குகளில் பணமதிப்பிழப்பின் விளைவு இன்னும் அப்படியே உள்ளது. இந்தியா மற்றும் தாய்லாந்து போன்ற நாடுகள், அந்நிய முதலீட்டாளர்களின் மிகுந்த ஆதரவில் இருப்பதாகவும், சொத்துக்களின் விலையில் மிகப்பெரிய உச்சத்தை அனுபவித்துவருவதாகவும், அது மூலதன வெளிப்போக்கிற்கு மிகவும் பாதிப்பானதாக இருக்கும் எனவும் இவ்வறிக்கை கூறியுள்ளது.
- மேலும், நடப்பு கணக்கு பற்றாக்குறையை (CAD) கையாள்வதற்கு இந்தியா போன்ற நாடுகளில் இறக்குமதிகளை குறைக்கும் போக்கு உள்ளது. இது இந்தியாவின் எழுச்சிக்கு முக்கியத்துவம் அளிக்கும் மற்றும் இது உயரும் CAD மற்றும் மூலதன வெளிப்போக்குகளை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கும்.

2. பெருநிறுவன சமூக பொறுப்புணர்வு மீதான உயர்மட்டக் குழுவிற்கு தலைவர் யார்?

**விடை: இஞ்செட்டி ஸ்ரீநிவாஸ்**

**விளக்கம்:**

- ஏற்கனவேயுள்ள கட்டமைப்பு மற்றும் வழிகாட்டிகளை மீளாய்வு செய்யவும், நிறுவனங்கள் சட்டத்தின் கீழ் பெருநிறுவன சமூக பொறுப்புணர்வுக்கு ஒத்திசைகின்ற கொள்கைகளுக்கான வழிகாட்டலை உருவாக்குவதற்கும் பெருநிறுவன விவகாரங்கள் அமைச்சகமானது சமீபத்தில், பெருநிறுவன சமூக பொறுப்புணர்வு மீதான 11 பேர் கொண்ட உயர்மட்டக்குழுவை அமைத்தது.
- பெருநிறுவன விவகார செயலர் இஞ்செட்டி ஸ்ரீநிவாஸ் தலைமையிலான இக்குழு, பெருநிறுவன சமூக பொறுப்புணர்வு நடவடிக்கைகள், திட்டங்கள், பெருந்திட்டங்களின் விளைவுகளை ஆய்வு செய்து, நிறுவனங்களின் பெருநிறுவன சமூக பொறுப்புணர்வை திறம்பட கண்காணிக்கவும், மதிப்பீடு செய்வதற்குமான நடவடிக்கைகளை பரிந்துரை செய்யும். புதுமையான தீர்வுகள், பங்குதாரர்கள் மற்றும் சமூக தணிக்கையை இணைக்க தொழில்நுட்ப பயன்பாடு ஆகியவற்றிலும் பரிந்துரைகள் இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

3. சரக்கு மற்றும் சேவைகள் வரியின் (GST) கீழ, 'பேரிடர் வரி' விதிமுறைகளை ஆய்வு செய்யும் அமைச்சரவைக் குழுவின் தலைவர் யார்?

**விடை: சுஷில் மோடி**

**விளக்கம்:**

- இயற்கை பேரிடர்களால் பாதிக்கப்பட்ட மாநிலங்களுக்கு நிதி ஆதாரங்களை திரட்ட வரியை திருத்துவதற்கான சட்டசிக்கல்களை ஆய்வுசெய்ய பீகார் துணை முதலமைச்சர் சுஷில் மோடியின் தலைமையில் ஏழுபேர் கொண்ட அமைச்சர்கள் குழு ஒன்றை மத்திய அரசு அமைத்துள்ளது.
- இயற்கை பேரிடர்கள் பாதிக்கப்பட்ட கேரளா போன்ற மாநிலங்களுக்கு நிதி ஆதாரங்களை திரட்டுவதற்காக வரி வருவாயை உயர்த்துவதற்கான நடைமுறை சாத்தியக்கூறுகள் பற்றி இந்தக் குழு ஆய்வு செய்யும். இக்குழு, 5 அம்சங்களை விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளும். அதாவது, புதிய வரியை மாநில அளவில் விதித்தால் போதுமா? அல்லது அகில இந்திய வரியாக விதிக்கலாமா? என்று ஆலோசனை நடத்தும். ஆடம்பர மற்றும் புகையிலை பொருட்கள் மீது மட்டும் புதிய வரி விதிக்கலாமா? என்று விவாதிக்கும்.

4. SIDBI ஆல் தொடங்கப்பட்ட தேசிய அளவிலான தொழில் முனைவோர் பரப்பரை எது?

**விடை: Udyam Abhilasha**

**விளக்கம்:**

- மகாத்மா காந்தியின் 149 ஆவது பிறந்தநாளை முன்னிட்டு சிறு தொழில் வளர்ச்சிக்கான தேசிய வங்கி (SIDBI), நாட்டின் 28 மாநிலங்களில் உள்ள 115 முன்னேற விரும்பும் மாவட்டங்களில் 15,000 இளைஞர்களை சென்றடையும் வகையில் 'உதயம் அபிலாஷா' என்ற தேசிய அளவிலான விழிப்புணர்வு பரப்புரையை தொடங்கியது. இந்த மாவட்டங்களில் மாற்றத்தை உருவாக்கும் இயக்கத்திற்கு SIDBI தொடர்ந்து பங்களிக்கும். அக்டோபர் 3 ஆம் தேதி முதல் 8 ஆம் தேதி வரை நாடு முழுவதும் இந்தப் பரப்புரை நடைபெறும்.

5. பணிக்குழு தலைவராகவும் (woCo), உலக சந்தைகள் கூட்டமைப்பு (WFE) வாரியத்தின் இயக்குநராகவும் நியமிக்கப்பட்டுள்ள இந்தியர் யார்.∴

**விடை: விக்ரம் லிமாயே**

**விளக்கம்:**

- தேசிய பங்குச்சந்தையின் (NSE) மேலாண்மை இயக்குநரும், தலைமைச் செயல் அதிகாரியுமான விக்ரம் லிமாயே, பணிக்குழு தலைவராகவும் (WoCo), உலக சந்தைகள் கூட்டமைப்பு (WFE) வாரியத்தின் இயக்குநராகவும் நியமிக்கப்பட்டுள்ளார். ஏதென்சில் நடந்து வரும் இவ்வமைப்பின் 58 ஆவது பொதுக்கூட்டம் மற்றும் ஆண்டுக்கூட்டத்தில் இம்முடிவு எடுக்கப்பட்டது.
- WFE என்பது சந்தைகள் மற்றும் கட்டண பரிமாற்றக் கணக்குத் தீர்வகங்களின் சர்வதேச தொழிற் சங்கமாகும். இக்கூட்டமைப்பில் 45000 நிறுவனங்களுக்கும் மேல் உறுப்பினர்களாக உள்ளன. இதன் தலைமையகம் லண்டனில் உள்ளது. இது சந்தையில் பங்கேற்கும் நிறுவனங்களுக்காக பயனுள்ள விதிகள் மற்றும் தரநிலைகளை உருவாக்குவதற்காக உலகம் முழுவதும் உள்ள கொள்கை வகுப்பாளர்கள் மற்றும் கட்டுப்பாட்டு நிறுவனங்களுடன் இணைந்து செயல்படுகிறது.

6. நடப்பு நிதியாண்டிற்கான ரிசர்வ் வங்கியின் நான்காவது நிதிக்கொள்கை அறிக்கையின் படி, நடப்பு ரெப்போ விகிதம் என்ன?

**விடை: 6.5 %**

**விளக்கம்:**

- அக். 5 அன்று வெளியிடப்பட்ட 2018 – 2019 நிதியாண்டிற்கான ரிசர்வ் வங்கியின் நான்காவது நிதிக்கொள்கை அறிக்கையில், நிதிக்கொள்கை ஆய்வில் வங்கிகளுக்கான வட்டி விகிதங்களில் ரிசர்வ் வங்கி மாற்றம் எதையும் செய்யவில்லை.
- இந்திய ரிசர்வ் வங்கி ஆளுநர் உர்ஜித் படேல் தலைமையிலான 6 உறுப்பினர்களைக் கொண்ட நிதிக் கொள்கைக் குழு, வணிக வங்கிகளுக்கு வழங்கும் கடனுக்கான 'ரெப்போ' வட்டி விகிதம் பழைய நிலையிலேயே தொடரும் என அறிவித்தது. இதையடுத்து, அந்த வட்டி விகிதம் 6.5 சதவீதமாகவே இருக்கும். அதேபோன்று, ரிசர்வ் வங்கி வணிக வங்கிகளிடமிருந்து பெறும் கடனுக்கான 'ரிவர்ஸ் ரெப்போ' வட்டி விகிதமும் 6.25 சதவீதமாகவே இருக்கும் என அறிவித்தது.

7. தேசிய பாதுகாப்பு விவகாரங்களை மீளாய்வு செய்வதற்காக தேசிய பாதுகாப்புக் குழுவுக்கு உதவுவதற்கு அமைக்கப்பட்டுள்ள உயர்மட்ட வல்லுநர் குழுவிற்கான தலைமை யார்?

**விடை: அஜித் தோவல்**

**விளக்கம்:**

- தேசிய பாதுகாப்புக் குழுவிற்கு உதவுவதற்காக கொள்கைக் குழு ஒன்றை மத்திய அரசு அமைத்துள்ளது. இந்தக் குழு தேசிய பாதுகாப்பு விவகாரங்களில் பிரதமருக்கு ஆலோசனை வழங்கவுள்ளது. தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் தோவல் மற்றும் உறுப்பினர்கள், NITI ஆயோக் துணைத்தலைவர், அமைச்சரவை செயலாளர், முப்படைத் தளபதிகள், இந்திய ரிசர்வ் வங்கி ஆளுநர், வெளியுறவு, உள்துறை மற்றும் பாதுகாப்புத்துறை செயலாளர்கள் ஆகியோர் இக்குழுவில் இடம் பெற்றுள்ளதாக உள்துறை அமைச்சகம் தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

8. SME’கள் குறித்த எட்டாவது ஐரோப்பிய மாநாட்டில் பங்கேற்ற இந்தியப் பிரதிநிதிகள் குழுவிற்கு தலைமை தாங்கியவர் யார்?

**விடை: அல்கா அரோரா**

**விளக்கம்:**

- “Business – Self – Government Together for Economy” என்ற கருப்பொருளுடன் அக்டோபர் 17 அன்று போலந்தில் உள்ள கத்தோவைசில் சிறு மற்றுமு் நடுத்தர தொழில் நிறுவனங்கள் குறித்த 8 ஆவது ஐரோப்பிய மாநாடு தொடங்கியது. 3 நாள் நடைபெறும் இம்மாநாட்டில் பங்கேற்றுள்ள 32 இந்திய SME’களுக்கு, அல்க அரோரா (MSME அமைச்சகத்தின் இணை செயலர்) தலைமை தாங்கினார். ஐரோப்பிய மற்றும் இந்திய SME களுக்கு இடையில் நேரடி வர்த்தக உறவுகளை உருவாக்குவதற்கு இந்த மாநாடு துணைபுரியும்.

9. தவணைகளில் கேட்புத் தொகைகளை செலுத்துவதற்கான சாத்தியக்கூறுகளை ஆய்வு செய்யும் IRDA குழுவின் தலைவர் யார்?

**விடை: சுரேஷ் மாத்தூர்**

**விளக்கம்:**

- இந்தியக் காப்பீடு ஒழுங்காற்று மற்றும் வளர்ச்சி முகமையானது (IRDAI) தவணைகளில் பொது மற்றும் சுகாதார காப்பீட்டு கேட்புத் தொகைகளை செலுத்துவதற்கான சாத்தியக்கூறுகளை ஆராய்வதற்காக ஒரு குழுவை அமைத்துள்ளது. இந்தக் குழு, IRDAI’ன் செயற்குழு உறுப்பினர் (சுகாதாரம்) சுரேஷ் மாத்தூர் தலைமையில் இருக்கும்.

10. “Impactful Policy Research in Social Sciences (IMPRESS)” திட்டத்தின் செயல்பாட்டு நிறுவனம் எது?

**விடை: ICSSR**

**விளக்கம்:**

- அக்.25 அன்று புது தில்லியில், நாட்டில் சூழல்மண்டல ஆராய்ச்சியை வலுப்படுத்துவதற்காக, மத்திய மனிதவள மேம்பாட்டுத் துறை அமைச்சர்

பிரகாஷ் ஜவடேகர், ‘‘Impactful Policy Research in Social Sciences (IMPRESS)” திட்டத்துக்கான வலைத்தளத்தை தொடங்கி வைத்தார். நிர்வாகம் மற்றும் சமூகத்தில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தும் சமூக அறிவியல் ஆராய்ச்சி திட்டங்களை அடையாளங் கண்டு அவற்றுக்கு நிதியுதவி அளிப்பதே இந்த IMPRESS திட்டத்தின் நோக்கமாகும்.

- அனைத்து பல்கலைக்கழகங்கள் (மத்திய மற்றும் மாநிலங்கள்), UGCஆல் 12 (B) தகுதிநிலை வழங்கப்பட்ட தனியார் நிறுவனங்களை உள்ளடக்கிய நாட்டின் எந்தவொரு நிறுவனத்தை சேர்ந்த சமூக அறிவியல் ஆராய்ச்சியாளர்களுக்கும் இது வாய்ப்பளிக்கும். 2021 மார்ச் வரை இத்திட்டத்தின் மொத்த மதிப்பீடு ரூ.414 கோடியாகும். இந்திய சமூக அறிவியல் ஆய்வுக்கழகம் (ICSSR) இத்திட்ட அமலாக்க நிறுவனமாகும். இதன் கீழ் ஆய்வுப்பணி 2019 ஜனவரி முதல் தொடங்கும்.

# முக்கிய தினங்கள்

1. நிகழாண்டின் சர்வதேச முதியோர் தினத்துக்கான கருப்பொருள் என்ன?

**விடை: Celebrating Older Human Rights Champions**

**விளக்கம்:**

- அனைத்து மனித உரிமைகளும் அடிப்படை சுதந்திரங்களும் முதியோர்களுக்கு முழுமையாகவும், சமமாகவும் கிடைப்பதை ஊக்குவிப்பதற்கான உறுதிப்பாட்டை மீண்டும் வலியுறுத்துவதற்காக, ஒவ்வோர் ஆண்டும் அக்.1 அன்று சர்வதேச முதியோர் தினம் அனுசரிக்கப்படுகிறது. நடப்பு ஆண்டில் வரும் இந்நாளுக்கான கருப்பொருள், “Celebrating Older Human Rights Champions”.

2. நிகழாண்டின் உலக வசிப்பிட தினத்துக்கான கருப்பொருள் என்ன?

**விடை: Municipal Solid Waste Management**

**விளக்கம்:**

- அனைவருக்கும் போதுமான தங்குமிட வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதன் முக்கியத்துவத்தை வலியுறுத்தும் விதமாக ஒவ்வோர் ஆண்டும் அக்டோபர் மாதம் முதல் திங்கள் கிழமையன்று உலக வசிப்பிட நாள்

கடைபிடிக்கப்படுகிறது. நமது நகரங்களில் அடிப்படை மனித உரிமைகளுடன் போதுமான தங்குமிட வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதன் முக்கியத்துவத்தை வலியுறுத்துவதே இந்நாளின் நோக்கமாகும். வசிப்பிடத்தின் அவசியம் குறித்து எதிர்கால சந்ததியினருக்கு ஞாபகப்படுத்தும் கூட்டுப்பொறுப்பையும் இது கொண்டுள்ளது.

- அனைவரையும் பாதிக்கும் உலகளாவிய பிரச்சனையாக விளங்கும் நகராட்சி திடக்கழிவு மேலாண்மையை முன்னிலைப்படுத்துவதற்காக, "Municipal Solid Waste Management – நகராட்சி திடக்கழிவு மேலாண்மை" என்ற கருப்பொருள் மற்றும் "Waste – wise Cities – கழிவு – வாரியான நகரங்கள்" என்ற முழக்கத்துடன் அக்.1 அன்று இந்த நாள் கொண்டாடப்பட்டது.

3. நிகழாண்டின் உலக ஆசிரியர் தினத்துக்கான கருப்பொருள் என்ன?

**விடை: The right to education means the right to a qualified teacher**

**விளக்கம்:**

- உலகிலுள்ள கல்வியாளர்களைப் பாராட்டி அவர்களை மதிப்பிட மற்றும் மேம்படுத்திட ஒவ்வோர் ஆண்டும் அக்.5 ஆம் தேதி உலக ஆசிரியர் தினம் கொண்டாடப்படுகிறது. ஆசிரியர்களின் மதிப்பு தொடர்பான 1966 ஆம் ஆண்டு பன்னாட்டு தொழிலாளர் அமைப்பு / UNESCO பரிந்துரைகள் மீது கையெழுத்திட்டதின் நினைவாக இந்த நாள் கடைப்பிடிக்கப்படுகிறது.
- நிகழாண்டில் வரும் இந்நாளுக்கான கருப்பொருள், "கல்விக்கான உரிமை என்பது தகுதிவாய்ந்த ஆசிரியர்கள் உரிமை" என்பதாகும். மனித உரிமைகள் பற்றிய சர்வதேச பிரகடனத்தின் 70வது ஆண்டு நிறைவையும் (1948) நினைவுகூரும் இந்நாள், பயிற்றுவிக்கப்பட்ட மற்றும் தகுதிவாய்ந்த ஆசிரியர்கள் இல்லாமல் கல்விக்கான உரிமையைப் பெற முடியாது என்றும் நினைவூட்டுகிறது.

4. எந்தத் தேதியில் அண்மையில் உலக அஞ்சல் தினம் அனுசரிக்கப்பட்டது?

**விடை: அக்டோபர் 9**

**விளக்கம்:**

- 1874 ஆம் ஆண்டு அக்.9 அன்று சுவிச்சர்லாந்திலுள்ள பொ்ன் நகரில் சர்வதேச அஞ்சல் ஒன்றியம் நிறுவப்பட்ட தினமே ஒவ்வோர் ஆண்டும் உலக அஞ்சல்

தினமாக (World Post Day) உலகளவில் அனுசரிக்கப்படுகிறது. 1969 ஆம் ஆண்டு ஜப்பானின் டோக்கியோவில் நடந்த சர்வதேச அஞ்சல் ஒன்றிய கூட்டத்தில் இத்தினம் குறித்து முடிவெடுத்து கடைபிடிக்கப்பட்டு வருகிறது.

5. 2018 உலக மனநல தினத்துக்கான கருப்பொருள் என்ன?

**விடை: Young People and Mental health in a changing world**

**விளக்கம்:**

- மனநலப் பிரச்சனைகள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்காக ஒவ்வோர் ஆண்டும் அக்.10 அன்று 'உலக மனநல தினமாக' அனுசரிக்கப்படுகிறது. நிகழாண்டில் வரும் இந்நாளுக்கான கருப்பொருள், ''மாறிவரும் உலகில் இளைய தலைமுறையினரின் மனநல ஆரோக்கியம்''.

6. 2018 ஆம் ஆண்டின் உலக பெண் குழந்தை நாளுக்கான மையக்கருத்து என்ன?

**விடை: With Her: A Skilled Girl Force**

**விளக்கம்:**

- பெண் குழந்தைகளுக்கான உரிமைகளை நிலைநாட்ட, அவர்களுக்கான அதிகாரத்தை பெற மற்றும் அவர்களின் சாதனைகளை கொண்டாடுவதற்காக ஒவ்வோர் ஆண்டும் உலக பெண் குழந்தை நாள் அக்.11 அன்று கொண்டாட்டப்பட்டு வருகிறது. நிகழாண்டில் வரும் இந்நாளுக்கான கருப்பொருள், "With Her : A Skilled Girl Force – அவளுடன்: ஒரு திறன்மிகு பெண் படை'' என்பதாகும்.

7. நிகழாண்டின் உலக முட்டை தினத்துக்கான கருப்பொருள் என்ன?

**விடை: Protein for Life**

**விளக்கம்:**

- 1996 ஆம் ஆண்டு முதல் ஒவ்வோர் ஆண்டும் அக்டோபர் மாதம் வரும் 2 ஆவது வெள்ளிக்கிழமை அன்று உலக முட்டை தினம் கொண்டாடப்பட்டு வருகிறது. முட்டையின் நன்மைகள் குறித்தும், அதிலுள்ள சத்துகள் மற்றும்

அதன் முக்கியத்துவங்களை மக்களுக்குத் தெரியப்படுத்துவதும் இந்நாளின் நோக்கமாகும். இயற்கையிலேயே முட்டையில் அதிகளவு புரதச்சத்து உள்ளது.

- முட்டையில் உள்ள புரதங்கள் மூளை, தசை வளர்ச்சி, நோய்த்தடுப்பு மற்றும் பொது நலனில் மிக முக்கியப் பங்கினை வகிக்கின்றன. நிகழாண்டில் வரும் இந்த நாளுக்கான கருப்பொருள், ‘‘வாழ்க்கைக்கான புரதம்’’ என்பதாகும்.

8. நிகழாண்டின் சர்வதேச பேரிடர் இன்னல் குறைப்பு நாளுக்கான (International Day of Disaster Reduction) கருப்பொருள் என்ன?

**விடை: Reducing Disaster Economic Losses**

**விளக்கம்:**

- பேரிடர் இன்னல் குறைப்புபற்றி உலகளவில் விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்காக ஆண்டுதோறும் அக்டோபர் 13 அன்று சர்வதேச பேரிடர் இன்னல் குறைப்பு நாள் கடைப்பிடிக்கப்படுகிறது. உலக மக்கள் தங்களுக்கு ஏற்படும் பேரிடர் இன்னல்களை எங்ஙனம் குறைத்துக் கொள்கிறார்கள் மற்றும் விழிப்புணர்வு ஏற்படுத்துகிறார்கள் என்பதையும் இந்நாள் கூறுகிறது. நிகழாண்டில் வரும் இந்நாளுக்கான கருப்பொருள், ‘Reducing Disaster Economic Losses’ என்பதாகும்.

9. இந்தியாவில், எந்தத் தேதியில் தேசிய பெண் விவசாயிகள் தினம் கொண்டாடப்படுகிறது?

**விடை: அக்டோபர் 14**

**விளக்கம்:**

- விவசாயம் மற்றும் அது சார்ந்த துறைகளில் பெண்களின் பங்கேற்பை அதிகரிக்கும் பொருட்டு ஒவ்வோர் ஆண்டும் அக்டோபர் 15 அன்று இந்தியாவில் தேசிய பெண் விவசாயிகள் தினம் கொண்டாடப்படுகிறது. அக்.15 ஆம் தேதி, தேசிய பெண் விவசாயிகள் தினமாக கடைப்பிடிக்கப்படும் என 2016 ஆம் ஆண்டில் மத்திய விவசாயத்துறை அமைச்சகம் அறிவித்தது.
- விதைத்தல், நாற்று நடுதல், நீர்ப்பாய்ச்சுதல், தண்ணீர் வடித்தல், உரமிடுதல், பயிர் பாதுகாத்தல், களைபறித்தல், அறுவடை, விளைபொருட்களைப் பத்திரப்படுத்தல் என அனைத்து விவசாயப் பணிகளையும் இன்று பெண்கள் செய்கின்றனர்.

10. அண்மையில், எந்தத் தேதியில் உலக கிராமப்புற பெண்கள் தினம் கடைப்பிடிக்கப்பட்டது?

**விடை: அக்டோபர் 15**

**விளக்கம்:**

- கிராமப்புற குடும்பங்கள் மற்றும் சமூகங்களின் நிலைத்தன்மையை உறுதிப்படுத்துதல், கிராமப்புற வாழ்வாதாரங்களை மேம்படுத்துதல் மற்றும் ஒட்டமொத்த நலனை உறுதிப்படுத்துதல் ஆகியவற்றில் பெண்கள் மற்றும் சிறுமியர்களின் முக்கியப்பங்கை அங்கீகரிப்பதற்காக ஒவ்வோர் ஆண்டும் அக்.15 அன்று உலக கிராமப்புற பெண்கள் தினம் கடைப்பிடிக்கப்படுகிறது.
- நடப்பாண்டில் வரும் இந்நாளுக்கான கருப்பொருள், "நீடித்த உட்கட்டமைப்பு, சேவைகள் மற்றும் பாலின சமத்துவத்திற்கான சமூக பாதுகாப்பு மற்றும் கிராமப்புற பெண்கள் மற்றும் சிறுமியருக்கு அதிகாரம் அளித்தல் - Sustainable Infrastructure, Services and Social Protection for Gender Equality and the Empowerment of Rural Women and Girls" என்பதாகும்.

11. "Coming together with those furthest behind to build an inclusive world of universal respect for human rights and dignity" என்ற கருப்பொருள், பின்வரும் எந்த சர்வதேச தினத்துக்கானது?

**விடை: 2018 சர்வதேச வறுமை ஒழிப்பு தினம்**

**விளக்கம்:**

- உலகளாவிய ரீதியில் குறிப்பாக வளரும் நாடுகளில் வறுமை குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தி பசிப்பிணியிலிருந்து மக்களை விடுவிப்பதற்காக சர்வதேச வறுமை ஒழிப்பு நாள் ஆண்டுதோறும் அக்.17 அன்று உலகம் முழுவதும் கடைப்பிடிக்கப்படுகிறது. நடப்பாண்டில் வரும் இந்நாளுக்கான கருப்பொருள், "Coming together with those furthest behind to build an inclusive world of universal respect for human rights and dignity" என்பதாகும்.
- இந்த ஆண்டு மனித உரிமைகள் பிரகடனத்தின் 70 ஆவது ஆண்டு நிறைவை குறிக்கிறது. தீவிர வறுமை மற்றும் மனித உரிமைகளுக்கு இடையேயான

அடிப்படை தொடர்பை நினைவூட்டுவது முக்கியம், வறுமையில் வாழும் மக்கள் பல மனித உரிமை மீறல்களால் பாதிக்கப்படுகின்றனர்.

12. நடப்பாண்டின் உலக உணவு தினத்துக்கான கருப்பொருள் என்ன?

**விடை: Our Actions Are Our Future**

**விளக்கம்:**

- ஐ.நா. அவையின் உணவு மற்றும் வேளாண்மை நிறுவன அமைப்பு 1945 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டதை நினைவுகூரும் விதமாக ஒவ்வோர் ஆண்டும் அக்.16 அன்று உலக உணவு தினம் கடைபிடிக்கப்படுகிறது. உலகம் முழுவதும் பசியால் வாடுவோருக்காக விழிப்புணர்வை ஏற்படுத்தி நடவடிக்கைகள் மேற்கொள்ளவும், அனைவருக்கும் உணவுப் பாதுகாப்பையும் சத்துணவின் தேவையின் வலியுறுத்தியும் இந்நாள் அனுசரிக்கப்படுகிறது.

13. அண்மையில் எந்தத் தேதியில், உலக மாணவர்கள் தினம் கடைபிடிக்கப்பட்டது?

**விடை: அக்டோபர் 15**

**விளக்கம்:**

- இந்தியாவின் முன்னாள் குடியரசுத்தலைவர், அறிவியல் விஞ்ஞானி Dr. APJ அப்துல்கலாமின் பிறந்தநாளை நினைவுகூரும் விதமாக ஒவ்வோர் ஆண்டும் அக்.15 அன்று உலக மாணவர்கள் தினம் கடைபிடிக்கப்படுகிறது. “Wings of Fire”, ‘My journey’, ‘Ignited Minds – Unleashing the power within India’ மற்றும் ‘India 2020 - A Vision for the New Millennium’ உள்ளிட்டவை அவரெழுதிய சில நூல்களாகும். 2015ம் ஆண்டு ஐ.நா. அவை அக்.15’ஐ ‘உலக மாணவர்கள் தினம்’ என அறிவித்தது.

14. அண்மையில் எந்தத் தேதியில், தேசிய காவல்துறை நினைவுதினம் அனுசரிக்கப்பட்டது?

**விடை: அக்டோபர் 21**

**விளக்கம்:**

- நாடு முழுவதும் காவல்துறை நினைவு தினம் அக்.21 அன்று அனுசரிக்கப்படுகிறது. இதே நாளில் 1959 ஆம் ஆண்டு சீனாவுடனான

எல்லையைப் பாதுகாக்க 10 காவல்கள் உயிர்த்தியாகம் செய்தனர். இது தவிர, இந்திய நாட்டின் ஒருமைப்பாட்டையும் அமைதியையும் பாதுகாப்பதில் சுதந்திரமடைந்த பிறகு 34, 844 காவலர்கள் தங்கள் இன்னுயிரைத் தியாகம் செய்துள்ளனர். நடப்பாண்டில் மட்டும் 424 காவலர்கள் உயிரிழந்துள்ளனர். இவர்களுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் காவலர் நினைவு நாள் அனுசரிக்கப்படுகிறது.

15. நடப்பாண்டு ஐ.நா. தினத்தின் போது, எதன் 73வது ஆண்டு நிறைவு கொண்டாடப்பட்டது?

**விடை: ஐ.நா. பாதுகாப்பு அவை நிறுவப்பட்டது**

**விளக்கம்:**

- ஐக்கிய நாடுகளின் நோக்கங்கள் மற்றும் சாதனைகள் குறித்து பொதுமக்களுக்கு தெரியப்படுத்தும் நோக்கோடு, ஒவ்வோர் ஆண்டும் அக். 24 அன்று ஐக்கிய நாடுகள் தினம் கடைப்பிடிக்கப்படுகிறது. ஐ.நா. சாசனத்தின் 73-வது ஆண்டு நிறைவையும் இந்நாள் குறிக்கிறது. இது 1945 ஆம் ஆண்டில் நடைமுறைக்கு வந்தது.
- ஐ.நா என்பது சர்வதேச அளவில் ஒத்துழைப்பை ஊக்குவிப்பது, ஒழுங்கை உருவாக்குவது மற்றும் பராமரிப்பதை நோக்கமாகக் கொண்ட அரசுகளுக்கிடையேயான ஓரமைப்பாகும். தேசங்களின் அணி இரண்டாம் உலகப்போர் நடக்காமல் தடுக்கத் தவறியதால், 1945 ஆம் ஆண்டு அக். 24 ஆம் தேதியில் ஐ.நா. உருவாக்கப்பட்டது. ஐ.நா.வின் தலைமையகம் நியூயார்க்கில் அமைந்துள்ளது.

16. அண்மையில் எத்தேதியில், உலக வளர்ச்சிக்கான தகவல் தினம் கடைப்பிடிக்கப்பட்டது?

**விடை: அக்டோபர் 24**

**விளக்கம்:**

- வளர்ச்சிக்கான பிரச்சினைகளை நோக்கி உலகின் கவனத்தை ஈர்க்கவும் அவற்றுக்கு தீர்வு காண்பதற்கு சர்வதேச ஒத்துழைப்பை வலுப்படுத்துவதின் அவசியத்தையும் உணர்ந்து கொள்வதற்காக ஒவ்வோர் ஆண்டும் அக். 24

அன்று உலக வளர்ச்சிக்கான தகவல் தினம் (Development Information Day) கடைப்பிடிக்கப்படுகின்றது. 1972 ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் பொதுச்சபையால் உருவாக்கப்பட்ட இந்தச் சிறப்பு நாள், ஐ.நா. தினத்துடன் இணைந்து கொண்டாடப்படுகிறது.

17. நடப்பாண்டுக்கான ஊழல் தடுப்பு விழிப்புணர்வு வாரத்தின் கருப்பொருள் என்ன?

**விடை: Eradicate Corruption – Build a New India**

**விளக்கம்:**

- ஒவ்வோர் ஆண்டும் சர்தார் வல்லபாய் படேலின் பிறந்தநாள் (அக். 31) வரும் வாரத்தில், மத்திய விழிப்புணர்வு ஆணையம் ஊழல் தடுப்ப விழிப்புணர்வு வாரத்தை கடைபிடித்து வருகிறது. ‘‘ஊழலை ஒழிப்போம் - புதிய இந்தியாவை கட்டுமானம் செய்வோம்’’ என்ற கருத்தை மையமாக வைத்து நடப்பாண்டு ஊழலுக்கு எதிரான விழிப்புணர்வ வாரம் அக்டோபர் 29 முதல் நவ. 3 வரை கடைப்பிடிக்கப்படவுள்ளது. ஊழல் தொடர்பான நடைமுறைகளைப் பற்றி பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்துவது இந்நாளின் நோக்கமாகும்.

# புத்தகங்கள்

1. “The Paradoxical Prime Minister : Narendra Modi and His India” எனும் நூலின் ஆசிரியர் யார்?

**விடை: சசி தரூர்**

**விளக்கம்:**

- “The Paradoxical Prime Minister : Narendra Modi and His India” எனும் நூலை காங்கிரசு நாடாளுமன்ற உறுப்பினர் சசி தரூர் எழுதியுள்ளார். இந்நூலின் பெயர் ‘‘முரண்பட்ட பிரதமர் : நரேந்திர மோடியும் அவரது இந்தியாவும்’’ ஆகும். இதில் மொத்தம் 5 பகுதிகளும், 50 அத்தியாங்களுடன் ஒரு சேர மொத்தம் 400 பக்கங்களுடன் எழுதியுள்ளார். இது அக். 26 அன்று வெளியிடப்படுகிறது.

2. ‘Building a Legacy’ என்ற தலைப்பில் எழுதப்பட்ட மறைந்த அனுமோலு ராமகிருஷ்ணாவின் வாழ்க்கை வரலாற்று நூலின் ஆசிரியர் யார்?

**விடை: V பட்டாபி ராம்**

**விளக்கம்:**

- மறைந்த அனுமோலு ராமகிருஷ்ணாவின் ‘Building a Legacy’ என்ற தலைப்பிலான வாழ்க்கை வரலாற்று நூலை பட்டய கணக்காளர் V பட்டாபி
- ராம் எழுதியுள்ளார். அண்மையில் துணைக் குடியரசுத்தலைவர் வெங்கைய நாயுடு இதனை வெளியிட்டார். L & T நிறுவனத்தின் முன்னாள் தலைவரும், மேலாண்மை இயக்குநருமான ராமகிருஷ்ணனுக்கு, 2014 ஆம் ஆண்டில் அவர் மறைந்த பிறகு **‘பத்மபூஷன்’ விருது** வழங்கி கௌரவிக்கப்பட்டது.

3. “Maharana Pratap: The Invincible Warrior” என்னும் நூலின் ஆசிரியர் யார்?

**விடை: ரீமா ஹூஜா (Rima Hooja)**

**விளக்கம்:**

- **“Maharana Pratap: The Invincible Warrior”** என்னும் நூலை புகழ்பெற்ற வரலாற்றாசிரியர் ரீமா ஹூஜா எழுதியுள்ளார். அக்பரின் வலிமைவாய்ந்த படைக்கு நீண்டகாலமாக பிடிகொடுக்காமல் மஹாராணா பிரதாப் எவ்வாறு சமாளித்தார் என்பதை இந்நூல் விவரிக்கிறது. மஹாராணா பிரதாப் குறித்த இந்தப் புதிய நூல், மாபெரும் ராஜ்புத் வீரரான அவரின் வாழ்வை ஆராய்கிறது. மேலும் முகலாயர்களுடனான அவரின் பிரபல ஹல்திகாடி போரை மீளாய்வு செய்துள்ளது.

4. நடப்பாண்டின் தி ஹிந்து பரிசுக்கான இறுதிப்பட்டியலில் இடம்பெற்றுள்ள ‘Half the Night is Gone’ எனும் நூலின் ஆசிரியர் யார்?

**விடை: அமிதாபா பக்சி**

**விளக்கம்:**

- அமிதாபா பக்சி எழுதிய **‘Half the Night is Gone’** எனும் நூல், நடப்பாண்டின் தி ஹிந்து பரிசுக்கான இறுதிப்பட்டியலில் புனைகதை பிரிவில் இடம்பெற்றுள்ளது.

5. “Indian Sports : Conversations and Reflections” என்ற நூலை எழுதிய கிரிக்கெட் புள்ளியிலாளர் யார்?

**விடை: விஜயன் பாலா**

**விளக்கம்:**

- **“Indian Sports : Conversations and Reflections”** என்ற நூலை மூத்த வர்ணனையாளரும், கிரிக்கெட் புள்ளயிலாளருமான விஜயன் பாலா எழுதியுள்ளார். இந்த நூல், 1971 ஆம் ஆண்டு முதல் புகழ் பெற்ற விளையாட்டுத்துறை நபர்களிடம் நடத்தப்பட்ட நேர்காணல்களின் தொகுப்பாகும்.

6. “Nehru and Bose : Parallel Lives” என்னும் நூலின் ஆசிரியர் யார்?

**விடை: ருத்ரங்ஷு முகர்ஜி**

**விளக்கம்:**

- **“Nehru and Bose : Parallel Lives”** என்னும் நூலை ருத்ரங்ஷு முகர்ஜி எழுதியுள்ளார். நவீன இந்தியாவை வரையறுத்த சுபாஷ் சந்திர போஸ் மற்றும் ஜவஹர்லால் நேரு ஆகிய 2 முரண்பட்ட பிரபலங்களின் கதையை இந்த நூல் விவரிக்கிறது.இந்திய விடுதலையின் பின்னணியில் இருவரின் வளர்ச்சிகளையும், அரசியல் நகர்வுகளையும் இது காட்டுகிறது. காந்தி தனது அரசியல் வாரிசாக நேருவை தெரிவு செய்ததையும், போசை வேண்டா மகனாக அவர் நினைத்ததையும் இந்நூல் கூறுகிறது.

**Useful Links**

Recent Exam Notifications : https://weshineacademy.com/updated-exam-notification/

Daily Current Affairs : http://weshineacademy.com/tnpsc-current-affairs/

Recent Update on Telegram : https://t.me/weshinedailyupdate

Useful YouTube Video : https://www.youtube.com/user/weshineacademy

TNPSC Group II Answer Key : https://weshineacademy.com/tnpsc-group-2-answer-key-2018/